யூகி முனி

வாதகாண்டம்

உரைநடைப் பகுதி

எழுதியவர்

Dr. K. அன்பரசு BSMS

தாமரை நூலகம், சென்னை - 26.

யூகிமுனி வாதகாண்டம்-1000

(உரைநடைப் பகுதி)

உரையாசிரியர்:

மரு.க.அன்பரசு.பி.எஸ்.எம்.எஸ்.,

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்: 224

முதல் பதிப்பு : நவம்பர் 1998

இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 2014

மூன்றாம்பதிப்பு :பிப்ரவரி 2021

நூல் பற்றி:

நூலின் பெயர் : யூகிமுனி வாதகாண்டம்
(உரைநடைப்பகுதி)

பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
சென்னை-26

பதிப்பு ஆண்டு : :பிப்ரவரி 2021

உரிமை : பதிப்பகத்துக்கு

நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ

அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ

மொத்த பக்கங்கள் : 92

விலை : ரூ- 50/

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-34

91/4

உரை நடைப்பகுதி

பாடல்கள் தெளிவாகவே இருந்த போதிலும் எல்லோரும் பயன் பெறவேண்டும் என்பதற்காக எளிய தமிழில் எழுதப்பட்ட தெளிவுரையும் இணைக்கப்படுகிறது.

–பதிப்பாசிரியர்

உ

கடவுள் துணை

யூகிமுனி வாத காண்டம் - 1000.

தெளிவுரை

(1) ஆகுவாகனனாகிய சிவனின் பாதம், குருவின் பாதம், அத்திமரப் பட்டை இடையில் அணிந்துள்ள அண்ணலின் பாதம், பார்வதியின் பாதம், முருகனின்பாதம், பதினெட்டு சித்தர்களின் பாதம், மற்ற ரிஷிகளின் பாதம், என்னை ஆண்ட தேரரின் பாதம், ஆகியவற்றில் என் சிரசினை வைத்து இந்நூலில் பல முறைகளை எழுதியுள்ளேன்.

(2-3) உலகத்திலுள்ளவர்கள் பிழைக்க வாதகாண்டம் என்ற இந்தநூலை சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவனிக்கும், அசுவனி விசுவனிக்கும், விசுவனி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும் தேரர் யூகிக்கும் கூற அனைவரும் இந்நூலை ஆராய்ந்து பார்த்தனர்.

(4) இந்த நூலில் உள்ளவாறு செந்தூரம் களங்கு சுண்ணம், மெழுகு, தயிலம் ஆகியவற்றை முறையாகச் செய்தால் வகாரம் என்னும் வாதவேலைகள் கைகூடும். யூகிமுனி கூறியபடி பாகத்துடன் இம்முறைகளை செய்தால் இவ்வுலகில் உன்னைப்போல் ஞானி யாருண்டு?

(5) முதலில் அயத்திலும் பிறகு சவுக்காரச் சுண்ணத்திலும், அதன்பிறகு துருசிலும், வாதவேலைகள் செய்து இறுதியில் இரசத்தினைக் கட்டினால் இவ்வுலகில் பெரியோராக வாழலாம். ஞானம் பல உண்டாகும்.

(6) வாய்ப்பேச்சினால் பலனில்லை. உழைத்தால் மட்டுமே வாத வேலைகள் சித்தியாகும். ஏர்கொண்டு உழுதால்தான் பலன் கிடைக்கும். வெறும் வார்த்தைகளினால் பலனில்லை. நூல்களை எல்லாம் பார்த்து தேறவும். பதறினால் வாதம் கைகூடாது. வாதமுடிவினைக் கண்டால்தான் உண்மை புரியும். காணாதவர்கள் பொய் என்று கூறுவார்கள்.

(7) மனதில் உறுதி இல்லாமல் ஆசை கொள்பவர்கள் உடல் வளையாமல் புத்துமண்ணை லிங்கமாகச் செய்து செபம் செய்வார்கள். பசிவந்தால் யோகிகள் போல் பிச்சையெடுத்து உண்பார்கள். உண்பவர்களையும், உடுத்துபவர்களையும் பார்த்து ஏங்கி உறுதியில்லாமல் அலைவார்கள்.

(8) நான்கு வேதத்திலுமுள்ள குருமார்கள் பொய்களைக்கூறி, அவரவர்கள் தனித்தனியே வேதங்களைக் கூறி உன்தெய்வம் என்தெய்வம் என்று மனிதர்களை மயக்கி, நிஷ்டையில் இருப்பதுபோல் அவர்களை அடிமை செய்வார்கள். ஆழ்ந்து பார்த்தால் எல்லாம் பொய்யாகும்.

(9) பொய் பேசாமல் வாதவேலைகளை செய்து பார்க்க எல்லா பொருளும் தெளிவாகும். வாதத்தை முன்னே செய்தால் அனைத்தும் கைகூடும். கைபாகம் எடைபாகம் ஆகியவற்றை அறிந்து செய்யவும் கற்றுணர்ந்தவர்கள் கூறியுள்ள கருத்தைப் பார்க்கவும். வாதங்கள் செய்து முடித்தால் ஞானம் கைகூடும்.

(10) வாதம் என்பதே ஐந்தாம் வேதம் ஆகும். நான்கு வேதங்களை கூறிய குருமார்கள் பணம்கேட்டு பொருள் பிடுங்கி உண்பார்கள். திரைக்குப் பின்னால் இருந்துகொண்டு மனிதர்களுக்கு தீட்சை என்று ஐந்தெழுத்தை சொல்வார்கள். அவர்களை நம்பவேண்டாம். அறிவுபெருக வாத வேலைகளை செய்து முடிக்கவும்.

(11) வாத வேலைகளுக்கு அயச்செம்பை முதலில் செய்து முடிக்க வேண்டும். பிறகு இரசத்தினை கட்டவேண்டும். துருசை சுண்ணம் செய்து அதனால் கிடைக்கும் சிவனின் சொத்தை வறுமையில் வாடாமல் சாப்பிட வேண்டும். சாத்திரங்களை நம்பிப் பார்க்கவேண்டும். வேலன் கொடுத்த இந்த யூகிமுனியின் நூலைப்பார்த்தால் எல்லாம் கிடைக்கும்.

(12) சாத்திர நூல்களை ஊன்றிப் பார்க்கவும். அதன்மூலம் கிடைக்கும் சிவசொத்தை வறுமைக்காக உண்டு வாழவும், செந்தூரங்கள் செய்து உண்ணவும், சுழிமுனையில் மனதை நிறுத்தவும், சிதம்பர மார்க்கமாக ஐந்தாம் வேதத்தில் கூறியவாறு செம்பையெல்லாம் தங்கமாக்கவும்.

(13) செம்பை கெந்தியால் கொன்று அயத்தினால் எழுப்பவும், அதை உருக்க செம்பொன் நிறத்தில் கிடைக்கும். வெள்ளியில் எட்டுக்கு இரண்டு அதைக் கொடுக்க ஏழுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும். அதை வித்து உண்டு வாசியோகத்தைப் பார்க்கவும். பிராணனை மேலேற்றினால் நொடியில் எட்டிரண்டும் சித்தியாகும்.

(14) எட்டு மற்றும் இரண்டு என்பதற்கு ரவி மதி என்று பொருளாகும். இங்கு ரவி என்பது செம்பும் மதி என்பது வெள்ளியும் ஆகும். இவை இரண்டும் ஒன்றாகச் சேர்ந்தால் தங்கமாகும். இதுமட்டுமல்லாமல் ரவி மதி என்ற இடகலையும் பிங்கலையும் ஒன்றாகச் சேருமானால் சென்மம் ஈடேறிப்போகும். சதாசிவன் சொன்ன முடிவான பொருள் இதுதான்.

(15) மனித தலைரோமம் ஐம்பது பலத்தை எடுத்து நல்லெண்ணெயில் தோய்த்து அயச்சட்டியில் இட்டு உருக்கவும். அவ்வாறு உருக்கையில் பத்துபலம் அயப்பொடியை உள்ளே தூவி புரட்டி தனியே எடுத்துக் கொள்ளவும்.

(16) செம்பு பத்துபலம் எடுத்துக் கொண்டால் அதற்கு முக்கால்பங்கு கெந்தகமும், அரைபங்கு சூடனும் கால்பங்கு வீரமும் சேர்த்து செம்பைத்தவிர மற்ற சரக்குகளை நீர்விட்டு அரைத்துக் கொள்ளவும். இரண்டு சாமம் நன்கு அரைத்தபின்பு செம்புக்கு கவசம் செய்யவும்.

(17) முன்பு செய்த கவசம் காய்ந்தபின்பு அதன்மேல் சுண்ணாம்புக் கவசம் செய்து பத்தெருவில் புடமிடவும். ஆறியபின் எடுத்து நொறுங்கின அதனை தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும். நொறுங்காத செம்புக்கு முன்போல் கெந்தகத்தை கவசம் செய்யவும்.

(18) கவசத்தினை முன்போல வலுவாகப்போட்டு அதன்மேல் சுண்ணாம்பு கவசமிட்டு பத்தெருவில் புடமிடவும். நன்கு நொறுங்கிப் போகும். இச்சத்தினை முன்பு செய்த அயத்தில் கறுப்பாக இருப்பதுடன் எடைக்கு எடை சேர்க்கவும்.

(19) மேற்கண்ட இரண்டையும் சேர்த்து செவ்வல்லிப் பூச்சாற்றால் அரைத்து சிவக்கும்வரை புடமிட செம்பில் படிந்துள்ள கெந்தியீயம் விலகிப்போகும். அது விலகினால் தங்கமாகும் வெள்ளிக்கு எட்டில் இரண்டு இச்செம்பை சேர்க்க ஏழுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும்.

(20) புடமிட்டு எடுத்த செந்தூரத்தில் வெங்காரம் சேர்த்து செவ்வல்லிப்பூச்சாறு விட்டு அரைத்து மூசையில் இட்டு உருக்க செம்பாகும். மூசையில் மாசற்ற வெள்ளி, பொன் ஆகியன ஆடுவதுபோல் ஆடும். அதை எடுத்துப் பார்க்க தங்கமயமாக இருக்கும்.

(21-22-23) வெள்ளி எட்டுபங்குக்கு அயச்செம்பு ஒரு பங்கு கொடுத்து உருக்கிக்கொள்ளவும். பிறகு தங்கம் ஒரு பங்கும், நாகம் ஒரு பங்கையும் சேர்த்து உருக்கிக் கொள்ளவும். இவ்விரண்டு சரக்குகளையும் பிறகு ஒன்றாக உருக்கிக் கொள்ளவும். கெந்தகம் ஒருபலம் இரசம் ஒரு பலம் இரண்டையும் சேர்த்து முலைப்பாலால் ஆறுசாமம் அரைத்து மிளகு போல் உருட்டி காயவைக்கவும் முன்னுள்ள செம்பு களங்கை உருக்கும்பொழுது இவ்வுருண்டைகளை கிராசமிட இரசம் மடிந்து போகும். பிறகு திராவகத்தை விட்டு வறுத்து மண்சீலை செய்த காசிக்குப்பியில் அடைத்து வாலுகா எந்திரத்திலிட்டு 12 சாமம் எரிக்கவும் பிறகு ஆறவிட்டு எடுத்து முன்போல திராவகம்விட்டு காய்ச்சி முன்போலவே காசிக்குப்பிக்கேற்றி 12 சாமம் எரிக்கவும். இதுபோல் மடக்கி மடக்கி ஐந்து முறை எரிக்க முருக்கம் பூபோல சிவந்த செந்தூரம் கிடைக்கும்.

(24) இந்த செந்தூரத்தை செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடுக்க ஆனிப் பொன் கிடைக்கும். பிணம்போல் திரிந்தால் என்ன கிடைக்கும். என்நூல்களை ஆராய்ந்து படித்தால் வாதம் எல்லாம் நொடிக்குள் ஆகும்.

(25) பெண்ணை மோகம் கொண்டு பார்ப்பதுபோல் சாத்திர நூல்களை அன்புகொண்டு பார்க்க வேண்டும். மங்கையருடன் கூடுவதுபோல் வேதைமார்க்கத்தைக் கற்று செய்து சோதித்துப் பார்க்கவும். வைத்தியத்தில் ஆசைவைத்து பார்க்க எல்லாம் சித்தியாகும்.

(26-27) ஆதீனங்களில் உள்ளவர்கள் நன்கு உண்டு, காவி உடை தரித்து பூசைசெய்து, வேத நூல்களைப் படித்து பிரசங்கம் செய்வார்கள். இரவில் பெண்களிடம் மையல்கொண்டு உறவு கொண்டுவிட்டு காலையில் காவிவேடம் அணிந்து பூசைசெய்வார்கள். உலகிலுள்ளவர்கள் அவர்களையே பெரிதும் நம்புவார்கள். அவர்களுடைய காலில் விழுந்து வணங்கி அழுது வரம் தரவேண்டுவார்கள். காவிவேடத்தில் ஒளிந்துகொண்டு அவர்கள் செய்து கொண்டிருப்பதை அறியமாட்டார்கள். தங்கத்தினைக் கண்டால் அவர்களுக்கு பிரம்ம அனுக்கிரகம் உண்டு என்று பொருள்.

(28) வாதத்தினை கண்டவர்கள் சிவன், ரிஷிகள், சித்தர்கள் ஆகியோருக்கு ஒப்பாவார்கள். வகார வித்தையை கண்டவர்களுக்கு தெய்வமில்லை அவர்களே தெய்வமாவார்கள்.

(29) தங்கம் பரமசிவனாகவும் செம்பு பார்வதியும் ஆயிற்று. செம்பு களிம்பு அற்றுப்போனால் தங்கமாகிய சிவமாகியது. செம்பை முறையாக செய்தால் பத்தரை மாற்றுக்கும் அதிகமான மாற்றுள்ள தங்கம் செய்யலாம். இதை வெளியே சொன்னால் நரகில் விழுவர்.

(30) உலகிலுள்ளவர்கள் இறந்துபோகாமல் இருக்க அய முறையையும் செம்பு முறையையும் கூறினேன். பசியினைப் போக்கிட இனி வெள்ளி முறையை கூறுகிறேன். முறையாகச் செம்பை வெள்ளியில் கொடுத்து அதனை விற்று மனம் கெட்டுப்போகாமல் ஞானத்தைப் பார்க்கவும். மலைகள் எல்லாம் அலைந்து வாதவித்தைகளை கற்று இரசத்தை கட்டி முன்னேறவும்.

(31) வழியோடு சென்று கற்றுணர்ந்து பூரணத்தில் சொக்கினாற்போல் உச்சி வழியே மதியமுதம் உண்டு சொக்கி அயச்செம்பை பார்க்க வேண்டும். அதனால் காயசித்தி யோகசித்தி வாதசித்தி கிட்டும்.

(32) விசுவாசம் உள்ளவர்களுக்கும் நல்லறிவு உள்ளவர்களுக்கும் ஞானம், வாதம், யோகம் அனைத்தும் சித்தியாகும். மாயவாதிகள் எல்லாவற்றையும் ஊதி சுட்டு கரியாக்கி இறக்கும்வரை முடிவை காணமாட்டான்.

(33-34) வாதவித்தையை சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவனிக்கும், அசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர்

புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனியாகிய எனக்கும் கூறினார்கள். அதனை இவ்வுலகில் உள்ளவர்கள் பிழைக்க வெளிப்படையாகக் கூறினேன். இதனை ஆராய்ந்து அறிந்து பார்த்து செய்தல்.

(35) மானிடர்களில் சிலர் உண்டு அவர்கள் செகஜாலம் செய்வார்கள் ஞானிபோல் இருப்பார்கள். முதலெழுத்து தெரியாத மூடராக சண்டையிடுவார்கள். ஒன்றுமில்லை என்றவுடன் தொண்டு செய்வார்கள். இவர்களால் என்ன பலன்? நாய் கடித்த எலும்புபோலே யாருக்கும் உபயோகமில்லாதவர்கள்.

(36) மதிப்புடைய செம்பை விக்ரகம்செய்து மாலைசாற்றி காலில் வீழ்ந்து வணங்குவார்கள். செம்பை தங்கம் செய்ய வழியில்லாமல் ஏதுக்கு தங்கமென்று கேட்டு, பிச்சை எடுத்து உண்பார்கள்.

(37) பிச்சையெடுத்து உண்ணாதிருக்க வாதவித்தையை கூறினேன். பிரபலமாய் வாழ்ந்து சிவனை நினைத்து சிவயோக நிலையில் நிற்கவும். உடலை காயசித்தி செய்து இவ்வுலகில் நீடூழி வாழ்ந்து சித்தர்களைப்போல் வாதம் செய்து பார்க்கவும். பதினாறு சித்துக்களும் கைவரும்.

(38) வீரத்தினால் இரும்பினைக் கொன்று வேதை மார்க்கத்தை பார்த்தால் ச ங்கெல்லாம் கெஞ்சி ஆடும். ஏழையைப்போல் இருந்து உண்டு வாழவும். உ சியில் நூலை கோர்க்கத் தெரியாததுபோல புத்தியில்லாமல் வாதம் பொய்யென்று கூறி அலைவார்கள்.

(39) நூல்கள் இல்லாதோர் வாதவித்தையின் பலனை காணமுடியாது நாக்கில் பண்டம் இருந்தால்தான் ருசிதெரியும் அதுபோல முன் பணம் போட்டால்தான் பின்பு அதிலிருந்து பணம் எடுக்க முடியும். பணமில்லாதவர்க்கு வாதமில்லை.

(40) இரும்பும் துருசும் சேர்ந்தால் தங்கம் கருகிப்போகும். வீரமும் வெடியுப்பும் சேர்த்தால் மட்டுமே துரும்பு தூணானதுபோல இரும்பு செம்பாகும். வெள்ளி பொன்னாகும்.

(41) இரும்பில் உழைத்தால் துயரம் நீங்கும். இரும்பின் அதிசயத்தால் பிறவிக்கடலில் உழல வேண்டாம். தில்லையில் வாழும் சித்தர்கள் செய்த [illegible]செம்பு இதுவாகும்.

(42-43) வங்கமானது வெட்டையாகிட முதலில் அதனை கற்றாழை சாற்றினில் எட்டுமுறை உருக்கி சாய்க்கவும். பிறகு ஒருபலம் கௌரியை

நஞ்சறுப்பான் சாற்றில் அரைத்து மிளகுபோல உருட்டி காயவைக்கவும். இவ்வுருண்டையை சுத்தி செய்த வங்கம் உருகும்பொழுது கிராசமிட வெட்டையாகும். இதன் எடைக்கு சமமாக எடுத்துக் கொள்ளவும். அதனைக் கட்டும் வழியைக் கூறுகிறேன்.

(44) அரிதாரத்தை கற்றாழம்பால்விட்டு அரைத்து தாமிரத்தகட்டில் பூசி உலரவைத்து புடமிட கரியாய்போகும். அதனை எடுத்து கற்றாழம்பால்விட்டு லிங்கக்கட்டியின் மேல் கவசம் கட்டவும்.

(45) கவசத்தில் உமிப்புடத்தில் இட லிங்கம் உருகி கட்டியாக இருக்கும். இதனை வங்கத்துக்கு எடைக்கு எடை சேர்த்து உருக்க களங்காகும். இக்களங்கை துருசு செம்பில் இரண்டுக்கு ஒன்று தரவும்.

(46-47) இரண்டுக்கொன்று இட்டு உருக்கியபின் எடுத்து வெள்ளி எட்டில் இரண்டு கொடுக்க தங்கமாகும். நன்கு ஊதிவிட கிடைக்கும் தங்கத்தினை உப்புக்கும் காவிக்கும் நடுவில் வைத்து புடமிட நின்றுபோகும். இத்தங்கத்தின் முறையைக் கேட்க உன்னைத்தேடி வருவார்கள். வெளியே சொல்லாமல் இருந்தால் முத்தியும் சித்தியுமடையலாம்.

(48-49) வாதவித்தையை சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும் கூறினர். தேரர் யூகிமுனியாகிய எனக்கு கூறியதை உலகத்தில் உள்ள மனிதர்கள் பிழைக்க கூறினேன்.

(50) வங்கத்தை முறையாக முடித்து அதன்மூலமாக தங்கத்தை செய்யவும். அதனை விற்று செலவு செய்து, பிறகு தவத்தை செய்து உடலைப் பேணவும். பிறகு சித்தி பெற மலைகள் தோறும் செல்லவும்.

(51) இன்னொரு நாகமுறையை கூறுகிறேன். தேடினாலும் இந்த பவழம் போன்ற சிந்தூரமுறை கிடைக்காது. சித்தர்கள் செய்யும் இந்த முறையை நொடியில் பாடியுள்ளேன். இந்த முறை வேறு நூல்களிலில்லை.

(52) சிறுகண் நாகத்தை இலுப்பை நெய்யில் இருபத்தி ஒருமுறை உருக்கி சாய்த்துவிட சுத்தியாகும். இந்நாகம் நான்கு பலத்தை உருக்கி அதில் ஒரு பலம் சுத்தி செய்த இரசத்தை சேர்க்கவும்.

(53) அவ்வாறு உருக்கி சேர்க்கும்பொழுது இலுப்பை நெய்யை ஊத்தி உருக்கவும். வெடியுப்பு பத்துபங்கும் படிகாரம் இருபத்தைந்து பங்கும் சேர்த்து பொடித்துக் கொள்ளவும்.

(54) முன்பு கூறிய இரண்டு சரக்கையும் நன்கு பொடித்து கலந்து வாலையிலிட்டு திராவகம் வடிக்கவும். பிறகு கல்வத்தில் இரசத்தினைவிட்டு இந்த திராவகத்தை ஊற்றி வெயிலில் வைக்க இரசம் பூத்து விடும்.

(55-56) இந்த இரசப்பூவினை வெயிலிலிட்டு உலர்த்தி முன்பு செய்த இரசநாகப்பிட்டிற்கு சமஎடையாகச் சேர்த்து, திராவகம் விட்டு அரைக்கவும். நன்கு அரைத்து உலர்த்தி காசிக்குப்பியில் இட்டு சட்டியில் வைத்து எரிக்கவும். சிவக்கும் வரை எரித்து எடுத்துப்பார்க்க நன்கு சிவந்த சிந்தூரம் கிடைக்கும். இந்த செந்தூரத்தை செம்பில் நூற்றுக்கு ஒன்று கொடுக்கவும்.

(57) செம்பில் நூற்றுக்கு ஒன்று சேர்த்துருக்க தங்கமாகும். அதனால் கைலாயமே உன்னருகில் வரும். இத்தங்கத்தை வைத்து ஞானத்தைப் பார்க்கவும். மலைதோறும் ஏறிப்பார் சித்தியாகும்.

(58-59) பக்தியுடன் இருந்து குருவிற்கு பணிவிடை செய்து செம்பினை செய்யும்முறையை கற்றுக்கொண்டால் முடிவில் இரசவாதம் கிடைக்கும். இந்த உலகுக்கு அயத்தின் பெருமையை சித்தர்கள் கனிவுடன் கூறி வந்தார்கள். நவகோடி சித்தர்களும் விரும்பிய அயம் இதுவாகும்.

(60-73) பத்துபலம் அரப்பொடி, பத்துபலம் காரீயம், பத்துபலம் நாகம் ஆகிய இம்மூன்றையும் சேர்த்து அரைத்து புடமிட கறுத்துப் போகும். அதை குகையிலிட்டு ஊத களங்காகும். கெந்தகம் ஏழரை பலம், வீரம் ஐந்து பலம், வெடியுப்பு இரண்டரை பலம், எடுத்து கல்வத்திலிட்டு தாய்ப்பாலால் அரைத்து நன்கு கறுத்தபின்பு மிளகுபோல உருண்டை செய்து காய வைக்கவும். இந்த உருண்டைகளை பத்துபலம் செம்பு உருகையில் உருக்கு முகத்தில் ஒவ்வொன்றாக கொடுக்க ஈயம் போல் நொறுங்கிவிடும். முன்புகூறிய அயவெட்டை இரண்டு பங்குக்கு ஒரு பங்கு இந்த சரக்கு சேர்த்து மஞ்சள் கரிசாலை சாறுவிட்டு அரைத்து நன்கு சிவக்கும் வரை புடமிடவும் அதனை திராவகம்விட்டு பீங்கான் பாத்திரத்தில் வைத்து உமி அனலில் வறுக்கவும். பிறகு ஏழுசீலைமண் செய்த காசிக்குப்பியில் இட்டு முறைப்படி எரிக்கவும். இவ்வாறு ஐந்துமுறை எரிக்க செவ்வல்லிப்பூ நிறமுள்ள செந்தூரம் கிடைக்கும். இதனை நவலோகத்திலும் சேர்க்க எட்டரை மாற்றுள்ள தங்கம் கிடைக்கும். வேதையின் முடிவு தெரியும் இந்த அயச்செம்பை செய்துபார். கள்ளமாய் திரிந்தால் வாதம் வராது. இந்த அயத்தினையும் செம்பையும் முடிக்கும் பாகத்தினை நூல்களில் பரிபாஷையில் கூறினார்கள். அதை நம்பி செய்து கெட்டவர்கள் கோடிபேர். யூகிமுனியாகிய நான் வடமொழி கிரந்தங்களை படித்து முறையாகக் கூறியுள்ளேன். விருப்பத்துடன் அயத்தினை செய்து பார்க்கவும். கைபாகம் செய்பாகம் முறையாகக் கற்றுணர்ந்து செய்தால் இரசவாதம் கிடைக்கும். இந்த அயச்செம்பைப் போல் வேறு அலைந்தாலும் கிடைக்காது. பலநூலையும் பார்த்து பதினெட்டு சித்தர்களையும் நாடி பணிவிடை செய்து இந்த முறையை கற்றுத் தேர்ந்தேன். அயச்செம்பினையும் அதனுடன் மற்ற சரக்குகளை சேர்க்கும் முறையினையும் வெளிப்படையாக மானிடர்கள் பிழைக்கக் கூறியுள்ளேன். எனவே புத்தியுடன் அயத்தின் செம்பை முடித்து தங்கம்செய்து செலவுக்கு வைத்துக்கொண்டு குளிகைகட்டி உலகில் சஞ்சரிக்கவும்.

(74-82) இனி நான் சொல்லும், செம்பை செய்ய ஞானம் பலிக்கும். துருசு பத்துபலம், கெந்தகம் பத்துபலம், சூடன் ஐந்து பலம், வீரம் இரண்டரை பலம் ஆகியவற்றை கல்வத்திலிட்டு வெடியுப்பு திராவகத்தால் அரைத்து வில்லைதட்டி நன்கு வெயிலில் காய வைக்கவும். சுண்ணத்தையும் முப்பையும் சம அளவு எடுத்து அரைத்து அரைத்து நன்கு சுண்ணமாகும்வரை புடமிடவும். அதனை முன் செய்த வில்லைக்கு கவசம் செய்து புடமிடவும். கவசத்தை பிரித்து எடுத்த மருந்து கறுத்து இருக்கும். அதனுடன் சமஅளவு அயப்பொடி சேர்த்து செவ்வல்லிபூ சாறுவிட்டு அரைத்து வில்லைதட்டி காய வைக்கவும். பிறகு முன்பு செய்த சுண்ணத்தினை வில்லைக்கு கவசம் செய்து புடமிட்டு கவசத்தினை பிரித்து எடுத்துப் பார்க்க கருஞ்சிவப்பாக இருக்கும். இதனை வெடியுப்பு திராவகம்விட்டு உமி நெருப்பில் வைத்து வறுக்கவும். பிறகு மருந்தை சீலைமண் செய்த காசிக்குப்பியில், இட்டு வாயை மாக்கல்லால் மூடி சீலை செய்யவும். ஒரு சட்டியில் நான்கு விரற்கடை மணல் இட்டு காசிக்குப்பியை வைத்து மேலும் மணல் இட்டு நன்கு எரித்து எடுக்கவும். இதுபோல் ஐந்து முறை எரித்து எடுக்க பவழநிறத்துக்கு ஒப்பான செந்தூரம் கிடைக்கும். இச்செந்தூரத்தை செம்பில் நூற்றுக்கு ஒன்று தர பத்து மாற்றுள்ள தங்கம் கிடைக்கும். இச்செந்தூரத்தை ஒரு மண்டலம் உண்ண நோய்கள் தீரும். தேகம் சித்தியாகும் இது உலகுக்கு யூகிமுனியின் பரிசாகும்.

(83-89) அயச்செம்பு ஒன்று கூறுகிறேன். உலகிலுள்ள வாதிகளே இதனை செய்ய மோகங்கள் தீரும். பெண்ணை கண்ணால் காண மோகமுண்டாகும். கூடினால் ஆசை தீர்ந்துபோகும். இந்த அயச்செம்பினால் ஏழு மாற்றுள்ள பொன்னை காணமுடியும். முயற்சிசெய்து உழைப்போர்க்கே அயச்செம்பு கிடைக்கும். தங்கம் சாத்தியமாகும். இந்த செம்பினால் பல தோஷங்கள் தீரும். காரீயத்தையும் செம்பையும் சேர்த்து உருக்கவும். இரசத்தையும் கந்தகத்தையும் சம அளவு எடுத்து நன்கு அரைத்து உருக்கு முகத்தில் கிராசம் கொடுக்கவும். இந்த சரக்குடன் சமஅளவு அயத்தை சேர்த்து உருக்கி ஊத செம்பாகும். இச்செம்பை வெள்ளிக்கு எட்டில் ஒன்று தர ஏழுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும். நால்திசையில் உள்ளவர்களும் உன்னைப் புகழ்வார்கள்.

(90) ஒருமுறை செய்பாகம் தவறினால் மீண்டும் செய்ய முறையாகக் கிடைக்கும். யோகசாதனை செய்தால் இரும்பில் வேதையை செய்து பார்க்கவும். அன்புடன் களங்கை செய்து முழுமையாக இருக்கலாம். முக்திக்கு இதுவே வழியாகும்.

(91) சரக்கினை சத்துருவால் கொன்றுவிட அதிலுள்ள கசடுகள் நீங்கிவிடும். அதனை அழித்து மித்துருவை பக்குவமாகச் சேர்க்க செம் பொன்னாகும்.

(92) ஒருபலம் துருசை எடுத்தால் அதில் கால்பலம் செம்பு இருக்கும். அதனை நிறுத்து எடுத்து அதற்கு சமமாக சரக்கினை இட சகலமும் சித்தியாகும்.

(93-95) நிறை சரியாக இருந்தால்தான் செயமாகும். மூசையில் சத்தாய் உருகிவிடும். நிறை தப்பினால் பாதை தப்பிவிடும். வெறும் அம்பை வீசினால்

வெற்றியில்லை. சிலர் அயச்செம்பை பார்த்து அதில் வாதத்தில் தேர்ச்சி பெறுவார்கள். செம்பைக் கட்டி அதன் சத்தை எடுத்தால் நல்வாழ்வு வாழலாம். அவசரப்பட்டு செய்தால் அயத்தின் பெருமையை உணர முடியாது. செம்புக்கு சத்தெடுக்க துருசை எடுத்து செய்து பார்க்க வேண்டும்.

(96) சவுக்காரத்தை நீற்றினால் துருசும் செம்பும் நீறிடும். வேதைமார்க்கம் எளிதாகும். இச்செம்புடன் முறையாக குணமுள்ள அயத்தினை சேர்க்க சின்மய முத்திரைக்கு வழிகிடைக்கும்.

(97) முதலில் களங்கை முடித்து அதில் வகாரவித்தை முடித்து பிறகு வழலையில் செய்து பார்க்கவும். வாதி என்றால் எடை பாகம் தப்பாமல் செய்யவேண்டும். அதனால் வாதமும் வசியமும் செய்ய வேண்டும்.

(98) இரும்பில் உழைத்தால் பலன் கிட்டும் அதிலிருந்து பொன் செய்து பசிவந்த பொழுது விற்று செலவு செய்ய வேண்டும்.

(99-101) வாதவித்தைகளை சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனியாகிய எனக்குக் கூற நான் கூறுவதை நாட்டிலுள்ள வாதிமார்கள் முறையாகச் செய்ய தங்கமாகும்.

(102) இரசவாதத்தினை கண்டவர்கள் எவருக்கும் கூறவேண்டாம் முனிவர்கள் நம்பிட மகாதவமுள்ள முனிவர்கள் கூறிய சொல் இதுவாகும்.

(103) வாதத்தின் முடிவினை கண்டபொழுது கற்பூரதீபமேற்றி முறையாக இருந்து உபசாரம் செய்து பத்திரமாக வைத்துக் கொள்ளு. அதனை ஒருவரிடமும் சொல்ல வேண்டாம். எளியவனைப் போல இரு. தறியினூடே அங்கும், இங்கும் செல்லும் துரும்புக் கட்டை போல அலையாமல் ஓரிடத்தில் இருக்க வேண்டும்.

(104) யூகிமுனியை தினமும் பூசித்து கைபாகமாக செய்ய பொன் கிடைக்கும். இவ்வுலகில் உயர்வாயிருக்கலாம். இப்புவியில் உன்னைப்போல் எவருண்டு. கைபாகத்தை தப்பாமல் செய்து வாதமுடிவினை அனுபவிப்பாய்.

(105) உலகிலுள்ள மானிடர்க்கு எல்லாம் நோயினை அகற்றிட திரிமூர்த்தி பற்பத்தை செய்வாயாக. என்னை ஆண்ட மூர்த்தி கூறியதுபோல வாத வித்தைகளை செய்யுமுன்பு இந்த திரிமூர்த்தி பஸ்பத்தை கொண்டு வைத்தியம் செய்து பணத்தை சம்பாரித்து வாதத்தைப் பார்ப்பாயாக.

(106-109) பத்துபலம் வீரத்தையும் இரண்டுபலம் தண்டவாளப் பொடியையும் சேர்த்து நன்கு அரைத்து வைத்துவிட இரசம் கிடைக்கும். அதனை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். பத்துபலம் லிங்கத்தை கல்வத்திலிட்டு வெடியுப்பு திராவகம் விட்டு அரைத்து, பீங்கானிலிட்டு உமி நெருப்பில்

வறுக்கவும். அதனை ஒரு பானையில் போட்டு மேல் பானையிட்டு சீலை மண் செய்து நான்கு சாமம் எரிக்க ரசமானது மேல்பானையில் பதங்கமாகியிருக்கும். அதனை மயிர்க்குச்சியால் வழித்து எடுத்துக் கொள்ளவும். லிங்க இரசம் ஐந்துபலம் வீரரசம் ஐந்துபலம், பூரம் ஐந்துபலம் ஆகியவற்றை கல்வத்திலிட்டு இரண்டு சாமம் அரைக்கவும் இரண்டு சட்டியின் வாய்மட்டத்தினை நன்கு உராய்ந்து எடுத்துக் கொள்ளவும். கீழ்சட்டியில் வறுத்த உப்பை நிறைய இட்டு நடுவில் குழிசெய்து முன்புசெய்த இரசத்தை இட்டு மேல்சட்டியினை மூடி ஏழுசீலைமண் செய்யவும். இதனை அடுப்பில் ஏற்றி கணபதி பூசைசெய்து நூறு நாழிகை எரிக்க பதங்கமாகி இருக்கும்.

(110-113) மேல்சட்டியிலுள்ள பதங்கத்தை மயிர்க்குச்சியினால் வழித்து வைத்துக் கொண்டு சித்தர்களை பூசை செய்யவும். இப்பதங்கத்தை பணவெடை வெல்லத்தினுள் வைத்து ஒரு மண்டலம் கொடுத்தால் சிவன்மேல் ஆணையாக எல்லா நோய்களும் தீரும். பார்வதிமேல் ஆணையாக பதினெட்டு குட்டங்களும் தீரும். நந்தியின்மேல் ஆணையாக குன்மங்கள் அனைத்தும் தீரும். அசுவினி மேல் ஆணையாக வாதம் எண்பதும் தீரும். தன்வந்திரி மேல் ஆணையாக பித்தம் அனைத்தும் தீரும். அகத்தியர் மேல் ஆணையாக காசம் எல்லாம் தீரும். புலத்தியர் மேல் ஆணையாக விஷபாண்டு எல்லாம் தீரும். தேரர்மேல் ஆணையாக விஷபேதி கிராணி வகை எல்லாம் தீரும். யூகிமேல் ஆணையாக நோய்கள் அனைத்தும் தீரும். முப்பத்து முக்கோடி தேவர்கள் மீது ஆணையாக இந்த மருந்தை செய்து பார்ப்பாயாக. கைபாகமாக இந்த மருந்தை செய்து வைத்தியம் செய்யவும். இவ்வுலகில் உன்னைப்போல் வைத்தியர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். வைத்தியம் பலிக்கும். அதன்பிறகு வாதத்தினை செய்து பார்க்கவும். இம் மருந்தைக் கொண்டு வைத்தியம் செய்து புகழ் பெறவும்.

(114-115) சிலர் லிங்கத்தை கட்டியாக வைத்து வியாதிக்கு கொடுப்பார்கள் அதனால் வியாதி தீராது. பதங்கம் செய்து கொடுத்தால்தான் வியாதி போகும். சிலர் பதங்கத்தினை தெரிந்து கொள்ளாமல் கட்டியாக நீற்றிவிட்டால் வியாதிகள் தீருமென்று யோசித்து யோசித்து நினைத்துப்பார்த்து காலம் முழுதும் மலை மீது சுற்றி அலைந்து கரையேறமுடியாமல் திணறுவார்கள்.

(116-117) பதங்கமென்று அலட்சியமாக ஒதுக்கிவிடாமல் பதங்கத்தை முறையாக செய்து தர வியாதிகள் தீரும். கட்டியாக நீறும் என்று காலத்தை வீண் செய்ய வேண்டாம். இரசத்தை முன்னே வைத்துக்கொள் வியாதிகளுக்கு கொடுத்து அனுபவம் பெறவும் பதங்கத்தில் கோடிவித்தையாகும். அதன் பயன் எண்ண முடியாத அளவு அதிகமாக இருக்கும்.

(118-124) இன்னொரு வேதை மார்க்கத்தை கூறுகின்றேன். பத்துபலம் துருசு பத்துபலம் வெங்காரம் இரண்டும் நீர்விட்டு நன்கு அரைத்து புடமிடவும் பிறகு அதனை எடுத்து குகையிலிட்டு உருக்க செம்பாகும். அதனை தகடாகதட்டி அனலில் வாட்டி, வெடியுப்பும் சீனமும் சேர்த்து உருக்கிய குழம்பில் தோய்க்க செம்பு கட்டிப்போகும். பிறையை தலையில் சூடிய சிவன் கூறிய பாகம்

இதுவாகும். கெந்தகம் ஒன்றரை பங்கு, சூடன் முக்கால்பங்கு, வீரம் கால்பங்கு, இதனை நீர்விட்டு மூன்று சாமம் அரைத்து செம்புக்கு கவசம் கட்டி பத்தெருவில் புடமிட நொறுங்கிப் போகும்.

(125-127) நொறுங்கின சத்தினை எடுத்து சமஅளவாய் அயப்பொடி சேர்த்து அரைத்து வில்லை செய்து புடமிடவும். இப்பொழுது கட்டின செம்பை எடுத்து வெள்ளிக்கு எட்டில் இரண்டு பங்கும், தங்கம் இரண்டு பங்கும் சேர்த்து கரியோட்டில் வைத்து ஊத ஏழுமாற்று காணும். உப்புக்கும் காவிக்கும் நிற்கும் இதனை செலவு செய்து யோகத்தினைப் பார்க்கவும்.

(128-132) தங்கம் இரண்டுபங்கு எடுத்து அதில் நாகம் ஒரு பங்கு சேர்த்து உருக்கவும். பிறகு அதில் அயச்செம்பு நான்கு பங்கு சேர்த்து உருக்கவும். உருக்கு முகத்தில் கந்தகம் இரசம் இரண்டையும் சேர்த்து பொடியினை கொடுத்து பின் கல்வத்திலிட்டு உடைக்கவும். இதற்கு சம அளவு காசிக்குப்பியில் ஏற்றி முறைப்படி எரிக்க செந்தூரமாகும். இதனை செம்பில் முப்பதுக்கு ஒன்று தர எட்டரை மாற்றுள்ள தங்கமாகும். இதனை செலவுக்கு வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும்.

(133-137) வாதவித்தைகளை சிவன் உமையாளுக்கும், உமையாள் நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனிக்கும் கூறினர். இதனைப்படித்து கைபாகத்தினை கற்று என்நூற்களை கற்றுணர்ந்து செய்ய வாதம் பலிக்கும்.

(138) பாகத்தை வெளிவிட்டால் தலைதெறித்துப் போகும். இடி விழும் மற்றவர்கள் இனிமையாக பேசி கழுத்தறுப்பார்கள். எங்கு அலைந்தாலும் இப்பாகம் கிடைக்காது. விலைக்கு வாங்கும் பொருளல்ல இது. பணம் தருகிறேன் என்பார்கள். பணத்துக்கு மயங்கி நூலைக் கொடுக்காதே.

(139) நந்தியின்மேல் ஆணையாக ஒருவருக்கும் கூறிவிடாதே. சீடன் என்றால் பாதகம் இல்லை. வகாரம் என்பது சிவ்சொத்தாகும் மயங்கிவிடாமல் உழைத்தால் சிவஞானம் உண்டாகும்.

(140) சூதத்தை கட்டினால் வாதம் நிறைவேறும் பொன் கிடைக்கும். செம்பு பழுக்கும். சூதம் கருகினால் எதுவும் கிடைக்காது. கணக்காக செய்தால் வீணாகாது வாதம் சித்தியாகும்.

(141) இந்த நூலை முதலிலிருந்து இறுதிவரை படித்து கைபாகம் செய்பாகம் பார்த்து செய்தால் வாதம் சித்தியாகும். தாறுமாறாக செய்தால் வாதம் தலைகீழாகும். எல்லாம் சாத்தியமாகும்.

(142-143) இன்னொரு இலிங்க மார்க்கத்தை கூறுகின்றேன்.. லிங்கம் ஒரு சேர் கல்லுப்பு ஒரு சேர், வேப்பிலை ஒரு சேர் இவை அனைத்தையும்

கல்வத்திலிட்டு நன்கு அரைத்து சட்டியின் நடுவில் வைத்து மேல்சட்டியை கவிழ்த்து மூடி, அதில் தண்ணீரை ஊற்றி ஏழு சீலைமண் செய்து எரிக்கவும். அடித்தூரில் மருந்து ஏறி பதங்கமாகி இருக்கும். இதனைச் சுரண்டி எடுக்க வாலை இரசம் கிடைக்கும்.

(144) கல்லுப்பு நான்குபடியை கடல்நீர் நான்குபடியில் கரைத்து தெளிவிறுத்து அடிகனத்த சட்டியில் இட்டு பொங்காமல் காய்ச்சிவிட உப்பாகும்.

(145-146) இவ்வுப்பை நான்கு படி எடுத்துக் கொள்ளவும். கடல்நுரையினை குகையிலிட்டு ஊத நீறிப்போகும். இதனை காற்படி எடுத்து முன்னுப்போடு சேர்த்து அரைத்து ஒரு சட்டியில் இட வேண்டும். நடுவில் குழிசெய்து லிங்க இரசத்தை ஊற்றி மேல் சட்டி கவிழ்த்து மூடி ஏழுசீலைமண்செய்து நூறு நாழிகை எரித்து எடுக்க மேல் சட்டியில் தந்தம்போல் வெளிறி பூவாகப் படிந்திருக்கும் அதனை சுரண்டி வைத்துக் கொள்ளவும்.

(147-149) இரசப் பதங்கத்தை திராவகம்விட்டு வறுத்துக் கொண்டு முன்போலவே உப்பின் நடுவில் வைத்து கமலாக்கினியாக சிவக்குமட்டும் மீண்டும் மீண்டும் எரிக்கவும். முருக்கம்பூபோல செந்தூரம் கிடைக்கும். இதுவே ருத்திரன் என்ற மகேஸ்வரனாகும். இதனை செம்புக்கு நூறில் ஒன்றிட்டால் எட்டரை மாற்றுள்ள தங்கமாகும். இச்செந்தூரத்தை பணவெடை தேனில் உண்ண உடல் இறுகும். மேனி செவ்வல்லி போல் சிவந்து காணப்படும். இம்முறை பொய்யென்றால் சிவனும் பொய்யே வைத்தியத்தில் உப்பினை அறிந்து பார்க்காமல் அலைந்து கெட்டுபோவார்கள்.

(150-151) இம்முறை பொய்யல்ல சிவன், பார்வதி, நந்தி, தன்வந்திரி, அகத்தியர், புலத்தியர் மற்றும் பதினெட்டு சித்தர்கள் மேல் ஆணையாக உண்மையை உலகுக்கு கூறிவிட்டேன். உலுத்த வாதிகள் வாதம் வைத்தியம் இரண்டும் பொய்யென்பார்கள். வீணாக அலைந்திடாமல் கருத்துடன் செய்தால் எல்லாம் சித்தியாகும். நல்ல நிலத்தில்தான் பயிர்விளையும் வலை. கிழிந்துள்ள இடத்திலெல்லாம் மீன் தப்பிவிடும்.

(152-153) சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனிக்கும் கூறினர். இதனை நான் உலகத்திலுள்ளோர் பிழைத்துக்கொள்ள வடமொழியை சோதித்து தில்லையில் நடனமாடும் நடராஜனைப்போல் சுறுக்கிச் சொல்ல அவற்றை கருத்தில் வைத்து செய்தால் வாதசித்தி உண்மையாகக் கிடைக்கும்.

(154) இன்னொரு சூதபற்பம் கூறுகிறேன் உலகத்தில் கல்லுப்பை விட்டுவிட்டால் சூதம் மடியாது. கல்லுப்புக்குள் வைத்து ஐந்துமுறை எரிக்க இரசம் மடிந்து போகும்.

(155) பத்துபலம் கடல்நுரையை கரியில் வைத்து ஊத நீறிப்போகும். கடுங்காரமாக ஊதி அதனுடன் கல்லுப்பை சமஅளவு சேர்த்து குப்பைமேனி இலைச்சாற்றால் அரைத்து வில்லை செய்து காய வைக்கவும்.

(156) வில்லையை கரிவோட்டில் வைத்து ஊத கடும் சுண்ணமாகும். இந்துடன் சமஅளவு சாரம் சேர்த்து அரைத்து ஊதி பானையில் வைத்து எடுத்து பனியில் வைக்க செயநீர் பெருகும்.

(157) கல்லுப்பை முன்போல கடல்நீரில் காய்ச்சி சட்டியில் போட்டு நடுவில் பள்ளம்செய்து அதில் இரசம் நான்கு பலத்தை விடவேண்டும். பிறகு மேலே சட்டி வைத்து மூடி ஏழுசீலைமண் செய்து நூறு நாழிகை எரிக்கவும்.

(158-160) நூறுநாழிகை எரிக்க மேல்சட்டியில் பதங்கமாகி இருக்கும் மயிர்க்குச்சியினால் அதனை வழித்து கல்வத்திலிட்டு செயநீரால் நான்கு சாமம் அரைத்து வில்லைதட்டி காயவைத்து முன்போலவே உப்பின் நடுவில் வைத்து எரிக்க பதங்கமாகி இருக்கும். அதனை வழித்தெடுத்து மீண்டும் செயநீரால் அரைத்து வில்லைதட்டி உப்புச்சட்டியில் வைத்து எரிக்க இரசமானது பதங்கமாகாமல் அடியில் நிற்கும். அக்கினிக்கு புகைந்து வோடாமல் நிற்கும். இதனை செம்பில் நூற்றுக்கொன்று இட்டால் பத்தரை மாற்று காணும். இந்த பற்பத்தை தேனில் ஒரு மண்டலம் உண்ண தேகம் இறுகும்.

(161-162) சிவன், பார்வதி, நந்தி, தன்வந்திரி, அகத்தியர், புலத்தியர், தேரர் மற்ற பதினெட்டு சித்தர் மீது ஆணையாக முறையுடன் இந்த முறைகளைச்செய்து பலனை அனுபவிப்பாய். வீணாகத் திரிகின்ற வாதிகள் பேச்சைக் கேட்டு சுட்டுத் தவிக்க வேண்டாம். தூண் துரும்பானதுபோல் கெட்டுப்போவாய்.

(163) கடல் நுரையால் உப்பைக் கிண்ட வேண்டும். கடல் தண்ணீரால் உப்பை தந்தம்போல் இறுகக்காய்ச்சி இரசத்தினை அதில் வைத்து எரிக்க இரசம் மடியும். இதனால் செம்பு பழுக்கும். கருத்துடன் இதனைப் பார்க்க வேண்டும்.

(164) வகாரம் செய்கையில் ஒருமுறை பாகம் தப்பினால் இரண்டாம் முறை செய்ய முழுமையாக முடியும். வாதம் கைகூடினால் பிறவிக்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் நீந்த வேண்டியதில்லை. முதலில் கல்லுப்பைக் கட்டிக் கொண்டால் எல்லா வித்தையையும் ஆடலாம்.

(165) கல்லுப்பை தெரிப்படங்க கட்டினால் எல்லாம் நிலைக்கும், சூதம், சேர்ந்தால் வாதம் அகப்படும். இல்லையேல் சூதம் வசப்படாது உப்பினால் அனைத்தும் ஆகும்.

(166) கல்லுப்பினால் ருசியுண்டாச்சு அறுசுவையும் உப்பினால் ஆனது. கல்லுப்பு குருவுக்கு ஒப்பானது. ஒருவரிடமும் பேசாமல் உப்பு என்று எளிதில் எண்ணாமல் கருத்துடன் செய்ய வேண்டும்.

(167) கல்லுப்பை கடல்நீரில் காய்ச்சிக்கொண்டால் பாஷாணம் எல்லாம் கட்டும். இரசம் பற்பமாகும். செம்பு பழுத்து வேதையாகும் தங்கம் நொடிக்குள் சாத்தியமாகும். பிறகு ஞானத்தில் மனதை செலுத்தவும். உப்பினால் எல்லாம் ஆச்சு உப்பை விட்டுவிட்டு அலையாதே.

(168-169) சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனிக்கும் கூற யூகிமுனியாக நான் உலகமானிடர் பிழைத்துக் கொள்ள கூறினேன். உப்பை கட்டினால் எல்லாம் சாத்தியமாகும்.

(170) இன்னொரு உப்பு மார்க்கத்தை கூறுகின்றேன். அகத்தியர் உப்புமுறை இதுவாகும். கடல்நீர் நாற்பது படியில் பத்துபடி கல்லுப்பையும் ஒருபடி கடல் நுரை சுண்ணத்தையும் அளந்து போட்டு கொதிக்கவிட்டு வடிகட்டி மீண்டும் காய்ச்சவும்.

(171) காய்ச்சும் பொழுது பொங்காமல் அகப்பையால் அடிக்கடி கிண்டவும் நீர்வற்றி உப்பாகும் பொழுது அடிபற்றாமல் அகப்பையால் கிண்டிக் கிண்டி காய்ச்சவும். நீர்வற்றி உப்பானது தெறிப்படங்கி தந்தம்போல் இறுகிவிடும்.

(172) ஒரு சட்டியில் கல்லுப்பை நிறைய அமுக்கி நடுவில் பள்ளம் செய்து அதில் பத்து சேர் சூதம் இட்டு மேலே சட்டிமூடி ஏழு சீலைமண் செய்து ஒரு அடுப்பில் ஏற்றவும்.

(173) கமலாக்கினியாக நூறுநாழிகை எரிக்க பதங்கமாகிவிடும். அதனை மயிர்க்குச்சியில் வழித்து எடுத்துக் கொள்ளவும். மேலுள்ள இரசத்தில் இரண்டு சேர் எடுத்துக் கொள்ளவும். அடியில் சட்டியில் உள்ள உப்பு இரண்டு சேர் இருக்க வேண்டும்.

(174) மேற்கூறிய இரண்டையும் கடல் தண்ணீரில் போட்டு குழைத்து பதமாக ஓட்டக் காய்ச்சி மேல்சட்டி மூடி ஏழுசீலைமண் செய்யவும். இதனை அடுப்பிலேற்றி கமலாக்கினியாக எரிக்க சூதத்தில் பாதி மேலேறும். அதனை சுரண்டி அடியில் போடவேண்டும்.

(175) முன்போலவே எரித்து ஏழுசீலைமண் செய்து கமலாக்கினியாக நாலுசாமம் எரிக்க வேண்டும். ஐந்து முறை இவ்வாறு எரிக்க இரசமானது மேலேறாமல் அடியில் நிற்கும். உப்பும் தெறிப்படங்கி கட்டும்.

(176) இந்த உப்பை உருக்கினால் கண்விட்டு ஆகும். இதனை சித்தர்கள் மறைத்தனர். நான் விரிவாக கூறிவிட்டேன். மெழுகை கதைபோல் அச்சு செய்து அதில் உப்பை உருக்கி ஊற்றவும். அந்த கதையை எடுத்துக் கொள்ளவும்.

(177) வறுமை வந்தால் செம்பினை உருக்கி நூற்றுக்கு ஒன்று இந்த உப்பை தர பத்தரை மாற்றுக்கு குறையாது. அது புடத்துக்கு இறங்கும். இந்த சிவசொத்தை விற்று வறுமையை போக்கிக் கொள்ளவும். இதனை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்.

(178) கல்லுப்பில் சூதம் சேர்த்தால் சிவ சொத்து ஆகிவிடும். இதனால் தங்கம் எளிதில் கிடைக்கும். சுடுவாதிகள் கல்க்கத்துடன் இதனை செய்ய

மாட்டார்கள். கல்லுப்பு இதுவல்ல என்று விசாரித்து கேட்டு கேட்டு விழிப்பார்கள்.

(179) உண்மையான வாதி என்றால் கல்லுப்பை கடல்நீர்விட்டு பொங்காமல் காய்ச்சிட வேண்டும். அதில் இரசம் சேர்க்க தங்கமாகும். இந்த தங்க சூட்சுமத்தை உலகிலுள்ளவர்கள் பிழைக்கக் கூறினேன்.

(180) புத்தியுள்ள வாதி என்றால் உப்பைக் கட்டுவான். புத்தி கெட்ட வாதி உப்பை கட்ட மூலிகையை தேடி அலைவான். மூலிகையில் உப்பு சேர்த்தால் சித்தியில்லை. உப்பை கட்டினால் சரக்கெல்லாம் கட்டும். வாதசித்தி காயசித்தி எளிதில் ஆகும். புத்தியுடன் செய்தால் எல்லாமாகும். புத்தியில்லாதவர்க் கொன்றுமில்லை.

(181) முன்புகட்டிய உப்பை உருக்கி குப்பி செய்யவும். அதற்குள் இரசத்தைவிட்டு எரிக்க செந்தூரமாகும். இதனை நவலோகத்தில் இட அனைத்தும் பொன்னாகும். லட்சுமிக்கு மூத்தவளான மூதேவி முகத்தில் குடியிருந்தால் வாதம் வாய்க்காது.

(182) வாதமென்பது பொய். சாத்திரத்தில் கூறவில்லை என்று பலர் கூறித்திரிவார்கள் முறையாகச் செய்யாமல் இப்படி புலம்புவார்கள் கல்லுப்பில் இரசம் சேராவிட்டால் கல்லுப்பு கட்டாது.

(183) கல்லுப்பை நூலில் காய்ச்சச் சொல்லி இருக்கிறதென்று காய்ச்சி பலனில்லை என்பார்கள். கடல்நீரில் காய்ச்சினாலும் இரசம் சேராததால் வாதம் பொய்யாகும். எனவே கடல்நீரில் காய்ச்சி இரசம் சேர்த்து எரிக்கவும்.

(184-185) ஒரு முறை சொன்னதுதான் எல்லா முறைகளுக்குமாகும். வாதத்தை முடிவாகச் செய்து கொண்டு யோகம் முதல் ஞானம் பார்க்கவும். சூதத்தை முதலில் செய்து சிதம்பரத்தில் மனதை ஊன்றவேண்டும். வாசியை தலைக்கேற்றி கயிலையில் வசிக்கும் சிவனை தரிசிக்கவும். முக்தியாகும். வாதம் செய்து அரசனைப்போலிருந்து வாழவும். யோகம் அனைத்தும் சித்தியாகும்.

(186) சரக்குடன் அதன் சத்துருவும் மித்துருவும் முறையாக சேராததால் வாதம் புரண்டு பொய்யாகப் போகும். புத்தியுடன் செய்யாததால் எல்லாம் விழலாய்ப் போகும்.

(187) விழலாகப் போகாமலிருக்க வாதமுறைகளைக் கூறுகின்றேன். ஒரு சரக்கை முதலில் சத்துருவால் கொன்றுவிட்டு பின்பு அதனுடன் மித்துருவால் சேர்க்க பொன்னாகும். உழவுக்காளையைப்போல உழைத்துப்பார்க்க வாதம் கைக்குள்ளாகும்.

(188) முறையை தெரியாத வாதிதான் உலகில் வாதம் பொய் என்று சொல்லித் திரிவார்கள். வகையில்லாமல் இப்படி சொன்னால் தோஷம் ஆகும். அவர்கள் கொடும் நரகில் வீழ்வார்கள்.

(189) அயமார்க்கம், உப்புகட்டு, சிந்தூரபாகம், செம்பெடுக்கும் முறைகள், சுண்ண வகைகள் ஆகியவற்றை ஒளிவில்லாமல் கூறியுள்ளேன். புத்தி உள்ளவர்கள் அதனைக் கண்டு கொள்வார்க்ள். மனதை ஒன்றிச் செய்தால் சாத்தியமாகும்.

(190) இன்னொரு அயச்செம்பினை கூறுகின்றேன். பத்துபலம் செம்புக்கு, கந்தகம் ஏழரை பலம் சூடன் ஐந்துபலம் வீரம் இரண்டரை பலம் எடுத்துக் கொள்ளவும்.

(191) செம்பு நீங்கலாகவுள்ள மற்ற சரக்குகளை கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டு அரைத்து செம்புக்கு கவசம் செய்து புடமிட நொறுங்கிப் போகும். நொறுங்கிய கரியை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(192) பத்துபலம் அயத்தூளை எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறப்போட்டு கழுவி எடுத்து முன்பு செய்த செம்புக் கரிக்கு சமஅளவு சேர்க்கவேண்டும். இதனை எலுமிச்சம் பழச்சாற்றால் இரண்டு சாமம் அரைத்து வில்லைதட்டி காயவைத்து பெரியபுடம் இடவும்.

(193) இந்த சரக்குடன் வெங்காரம் சேர்த்து உருக்க கரியானது செம்பாகும். நாளம் வைத்து ஊதிவிட்டு மீண்டும் மீண்டும் வெங்காரம் சேர்த்து அரைத்து ஊத செம்பு அலரிப்பூபோல கிடைக்கும். இந்த செம்பை வெள்ளியில் இட ஆறு மாற்றாகும்.

(194-195) முன்செய்த செம்பு நான்கு பலம். தங்கம் ஒரு பலம், நாகம் ஒரு பலம் எடுக்கவும். தங்கத்தையும் நாகத்தையும் உருக்கி பின்பு முன்செம்பையும் சேர்த்து உருக்கிக் கொள்ளவும். இதனுடன் ஒரு பலம் கெந்தகம், ஒரு பலம் இரசம் சேர்த்து மஞ்சள் கரிசாலை சாறுவிட்டு அரைத்து புடமிட கறுத்துப் போகும். இந்த கரிக்கு சமஎடை அயத்தினை சேர்த்து அரைத்து புடமிடவும். அதனை திராவகம் விட்டு அரைத்து காசிக்குப்பிக்கேற்றி பனிரெண்டு சாமம் முறைப்படி எரிக்க செந்தூரமாகும்.

(196) இந்த செந்தூரத்தை செம்பில் நூற்றுக்கொன்று இட செம்பு கட்டி தங்கமாகும். உப்புக்கும் காவிக்கும் புடமிறங்கும். இச்செந்தூரத்தை பணவெடை தேனில் ஒரு மண்டலம் உண்ண உடல் இறுகும். அதன்பிறகு யோக சித்தியை பார்க்கவேண்டும்.

(197) செம்பு வந்த இடத்தில் எல்லாம் அதனை செந்தூரம் செய்து சேர்க்க கைக்குள்ளாகும். செந்தூரம் செய்து உண்ண காய சித்தியாகும். செந்தூரம் செய்து சேர்த்தால் வாதசித்தி காயசித்தி உண்டாகும். மன்மதன்போல அழகு உண்டாகும்.

(198-200) வகை தெரியாத வாதிகள் செம்பெடுக்க அயத்துடன் செம்பை சேர்த்து வெள்ளியில் கொடுத்து ஊதி பொன்போல் கண்டேன் என்பார்கள். பலமுறைகளில் செய்து பார்த்துவிட்டேன். வாதம் பொய்யென்று கூறுவார்கள்.

ஆனால் அயச்செம்பை காணமாட்டார்கள். இவ்வகை இரசவாதிகள் ஞானம் வந்தால் வாதம் கிட்டும் என்று ஞானத்தை தேடி அலைவார்கள். யோகம் செய்வார்கள். பிண்டத்தில் வாதம் இருக்கிறதென்று அதனை கொண்டு வந்து செய்து அலைவார்கள். அவ்வாறு செய்யாமல், அயத்தைப் பார்க்கவும், செம்பை கரியாகச்செய்து அயத்தைக் கொடுத்து ஊத செம்பாகும். அதனை வெள்ளியில் கொடுக்கும் அளவு பொன் சேர்க்க அனைத்தும் தங்கமாகும். அலைந்து திரியாமல் அதனை சிந்தூரம் செய்து உண்ணவும்.

(201) அயச்செம்பைக் கண்டவுடன் தங்கத்தை சமஎடை கொடுக்க செம்பு கட்டிப் போகும். அதை எடுத்து வெள்ளியில் தர பொன்னாகும். அதனை செலவுக்கும் வைத்துக் கொணடு சிறிதளவில் செந்தூரம் செய்து உண்ணவும். யோகம் எளிதிலாகும்.

(202) இன்னொரு அயச்செம்பை சொல்லுகிறேன் கேட்பாயாக துளிவிந்து பாய்ந்தாலும் கருவுண்டாவது போல இது வெகு சூட்சுமமான செம்பு ஆகும். கணிசமாக இதனை செய்து கொண்டால் எல்லாம் பொன்னாகும்.

(203-204) கந்தகம் ஏழரை பலம், சூடன் ஐந்துபலம், வீரம் இரண்டரை பலம், எடுத்து கல்வத்திலிட்டு பழச்சாறுவிட்டு அரைக்கவும். இத்துடன் இருப்பு அரப்பொடி பத்துபலம் போட்டு மேலும் ஒரு சாமம் அரைத்து செம்பின் மேலே கவசம்கட்டி வெயிலில் வைத்து சுண்ணாம்பு சீலை செய்யவும்.

(205) இதனை பெரும்புடமாக போட்டு எடுக்க செம்பு செத்து தூளாய்ப் போகும். இதனுடன் கால்பங்கு அயத்தினை சேர்த்து பழச்சாறுவிட்டு அரைத்து வில்லைதட்டி காயவைத்து புடமிடவும்.

(206) இதனை எடுத்து உருக்கிவிட செம்பாகும். இதனை வெங்காரம் போட்டு நாளம்வைத்து ஊத வெள்ளி, பொன் போன்றவை போல கண்விட்டு ஆடும். இந்த அயச்செம்பு மிகவும் சுருக்காகும். இதனை வெள்ளி எட்டுக்கொன்று தர ஏழு மாற்றுள்ள பொன்னாகும்.

(207) செம்பெடுத்து செலவுக்கு வைத்துக் கொள்ளவும். குளிகைக்கு நூற்றி இருபது உபரசங்களையும் சத்தாக ஊட்டவும். க்கனமாகவும் மலைகளில் சஞ்சரித்து உடலை சித்தியாக்கவும்.

(208) செம்பைக் கொன்றவுடன் அயத்துடன் சேர்த்துக் கொண்டு பெரியபுடமிடவும் அதனை கருகியபின் எடுத்து உருக்கி பின்பு வெங்காரம் கொடுத்து மீண்டும் ஊத செம்பு கிடைக்கும். இந்த செம்பு மிகவும் சிறப்பானது.

(209) வெள்ளியில் பழுப்பு போகவேண்டு மென்றால் முதலில் வெள்ளி நொறுங்க வேண்டும். பின்பு அதில் செம்பினை சேர்க்க தங்கமாகும். புடத்துக்கு இறங்கும். சொன்னபடி செய்தால் வேதை எளிதிலாகும்.

(210) செம்புக்கு புடம் எளிதாகப் போட்டால் களிம்பு போகாது வெள்ளியில் தரும்பொழுது தங்கம் கடினமாகும் ஊறலுண்டாகும். எனவே பெரியபுடமிட்டு எடுக்க களிம்பு போகும்.

(211) இம்முறையை கைபாகமாக செய்து ஆறாதாரத்திலும் வாசியை ஏற்றி கடந்து சுழிமுனையில் நிறுத்தவும் அவ்வாறு செய்தால் எல்லாம் தெளிவாகும். படபடத்து செய்தால் எல்லாம் மோசமாகும். கைபாகம் தவறினால் வரிசை தப்பும்.

(212) செம்பை நொறுக்கி எடுத்தால் வாதம் எளிதில் செயமாகும். சிந்தூரம் செய்து கொண்டால் இவ்வுலகத்தில் உனக்கீடு இல்லை. வார்த்தைகளைவிட்டால் எதுவும் செய்ய முடியாது வார்த்தைகளை தப்பவிடாமல் பார்த்துக் கொள்ளவும்.

(213) அயச்செம்பை கூறுகின்றேன் அதுகிட்டாமற் போனால் ஏழையைப் போல் வாய்க்குழறி அலையவேண்டாம். நூலைப்பார்த்து மெள்ள மெள்ள புரிந்து கொண்டு புத்தியில் நிறுத்து கண்ணில் ஒளியில்லாதவர்க்கு இவ்வுலகில் காட்சி இல்லை.

(214) முதலில் அயச்செம்பை கூறினேன் வடமொழிகளை பார்த்துத் தேறி தடையில்லாமல் தீட்சை விதியில் மறைத்த அயச்செம்பை இங்கு மிகவும் தெளிவாகக் கூறியுள்ளேன்.

(215-216) சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி விசுவினிக்கும், விசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனியாகிய எனக்கும் கூற நான் உலகிலுள்ளோர் பிழைத்துக்கொள்ள கைபாகத்துடன் வரிசையாக இந்த நூலில் இறுதியில் கூறிவிட்டேன். முடிந்தவரை பார்த்து உழைக்க பலனுண்டாகும்.

(217) என்னுடைய நூலை ஒருவருக்கும் கொடுக்க வேண்டாம். கொடுத்தால் சித்தர்களின் சாபத்தினால் கோடி நரகம் கிட்டும். இந்த நூலில் எல்லாவற்றையும் கைபாகமாக கூறிவிட்டேன். பார்வதியை தன் இடப்பக்கம் வைத்துள்ள சிவன் கூறிய நூல் இதுவாகும்.

(218) சிவன் மீது ஆணையாக செம்பினை பார்த்தால் குருவருளால் வாதம் எளிதாகும். இந்நூலில் உள்ள கருத்துக்களை ஆராய்ந்து செய்யாவிட்டால் செம்பாகாது. வாதம் பொய் என்று கூறி நரகில் விழுவார்கள் பாவிகள். இந்த நூலை முறையாக ஆராய்ந்து செய்ய வாதம் எளிதாகும்.

(219-222) இன்னொரு அயமார்க்கத்தை கூறுகின்றேன். இதிலுண்டாகும் செம்டைக் கண்டால் உலகமே கைக்குள்ளாகும். சித்தர்கள் கூறிய செம்பை தடையில்லாமல் கூறுகின்றேன். அந்த பாகத்தை கேட்பாயாக. பத்துபலம் துருசும் அதே எடை வெங்காரத்தையும் பொரித்து அரைத்து உருக்க செம்பாகும். அதற்கு

முக்கால்பங்கு கந்தகம், சூடன் அரைபங்கு, வீரம் கால்பங்கு சேர்த்து மஞ்சள் கரிசாலை சாறுவிட்டு அரைத்து உருட்ட களங்காகும். சுண்ணாம்பையும் உப்பையும் சமஅளவு சேர்த்து அரைத்து அதன்மேலே கவசம் கட்டவும். அதனைப்புடமிட அதராகிப்போகும். அதனை எடுத்து அயத்தொட்டிப் பாஷாணத்தை சம எடையாகச் சேர்த்து நீர்விட்டு அரைத்து வில்லைதட்டி காயவைத்து பெரும்புடமாய் போட வேண்டும். அதனை எடுத்து வெங்காரம் கூட்டி உருக்க செம்பாகும். அதன் ஒளியை என்னவென்று சொல்வேன். நாற்று நட்டாற்போல் தங்கம் விளையும்.

(223) இம்முறையானது சிவன், நந்தி, அசுவினி, விசுவினி, தன்வந்திரி, அகத்தியர், புலத்தியர், தேரர், யூகி ஆகியோர் மேல் ஆணையாகும்.

(224) இச்செம்பை வெள்ளியை உருக்கி இருபதுக்கு ஒன்றுதர தங்கமாகும். இம்முறை உண்மையானதாகும். சிந்தூரம் செய்தால் இன்னும் வேதை எளிதிலாகும். இந்த செம்பை முறையாக சிந்தூரம் செய்து உண்ண கோடி யுகமிருக்கலாம்.

(225) அயத்தொட்டிப் பாடாணத்தின் அடையாளத்தைக் கேட்பாயாக கல்லில் உரைத்தால் பொன்போல இருக்கும். அதனை முறையாகக் கண்டு எடுத்து செய்ய வாதம் எளிதிலாகும். இனம் கண்டு கொண்டு செய்தால் மோட்சம் கிட்டும். சிவன் சொன்ன வித்தையை அறிந்தவனே வாதி.

(226) சிலர் வகாரம் செய்கிறேன் என்றுகூறி ஒரு சரக்கைவிட்டு வேறுவாங்கி சுட்டு அலைவார்கள். சரக்கைப் பார்த்து வாங்கி உருக்கிச் செய்ய எல்லாம் ஆகும். குணமாக வேண்டுமென்றால் அயத்தொட்டியில் செய்ய வேண்டும்.

(227) அயத்தொட்டி முறையே எளிதானது. பரிபாஷை எல்லாவற்றையும் தெளிவாகக் கூறிவிட்டேன் எடையையும் சரியாகக் கூறியுள்ளேன். எடை தப்பினால் வாதம் பொய்யாகும். ஆடுபோல நுனிப்புல் மேயாமல் ஆழ்ந்து என்நூலைப் படித்து செய்ய வகாரம் சித்தியாகும். பொன் கிடைக்கும்.

(228) முதலில் அயத்தில் வகாரம் செய்து பார்த்து பின்பு உப்பில் உழைத்துப் பார்க்கவும். அதன் பிறகு கருணையுடன் சவுக்காரச் சுண்ணத்தினை செய்யவும். பிறகு யோகத்தை செய்யவும், சுவாசத்தை சுழியிலேற்றவும். இறுதியில் ஞானத்தைப் பார்க்கவும்.

(229) வாதம் கிடைக்க நூலைப் பார்க்கவும் கிடைத்தவுடன் வாயை பணத்தைப் பைக்குள் போட்டு கட்டிவிட்டது போல் கட்டி விடவும். மனதை செம்மைப் படுத்தவும் உடல் உரமாகும் எல்லாம் சித்தியாகும். வையகத்தில் உன்னை சித்தர் என்று கூறுவார்கள்.

(230) மனதில் அகங்காரத்துடன் வெளியில் சொன்னால் எல்லாம் பாழாய்ப்போகும். மனதில் சித்தம் வைத்துக் கூறினால் உயர்ந்து போகும்.

வறுமையாக இருந்து உண்டால் சித்தன் என்று கூறுவார்கள். வில்லை வளைத்தால்தான் அம்பு தைக்கும் வெறும் மரத்தால் அம்பு தைக்காது.

(231) எளியவன் என்றால் கல்லுப்பைப் பார்க்கவேண்டும். அதனால் இரசம் வேதையாகும். குணமும் பொருளுமாகும். பணக்காரன் என்றால் சவுக்கார சுண்ணத்தினை செய்ய வேண்டும். வங்கத்தை நீற்றிக்கொண்டு அதன்மூலம் துரிசை நீற்ற வேண்டும்.

(232) வாதத்தின் முடிவைக் கண்டவன் பிச்சைக்காரன் போலிருப்பான் வேறெதையும் கூறமாட்டான். வற்புறுத்திக் கேட்டால் வழலை என்றும் பிண்டம் என்றும் மாற்றிச் சொல்வார்கள். பொல்லாச் சித்தர்கள் அவ்வாறு மட்டுமே கூறுவார்கள் எனவே என்னூலைப் பார்க்கவும்.

(233) அறிவில்லாதவர்கள் பிண்டம் என்று பிணத்தோடு அலைவார்கள். ஐங்கோலம் வழலை என்று வீணாகத் திரியவேண்டாம். கரும்புபோல் இனிப்பாகக் கூறுவார்கள். ஆனால் நம்ப வேண்டாம். கறுப்பூவான இரும்பை நம்பினால் பலனுண்டு.

(234-235) மனதை ஒருநிலைப்படுத்தி நூலைப் பார்க்க இரசவாதம் நிலைக்கும். சுட்டால்தான் நிலைக்கும். இனத்துடன் இனம் சேர்க்கச் செம்பாகும். சிறுதென்று விட்டுவிட்டால் செயமாகாது. யூகிமுனியாகிய என்நூலைப் பார்க்க செம்பு தோன்றும். வெள்ளியில் கொடுக்க தங்கமாகும். பதறிச்செய்தால் ஒன்றும் கிடைக்காது. கல்லுப்பை விரும்பிப் பார்க்க வேண்டும். அதனால் தங்கம் சாத்தியமாகும்.

(236) உப்புச்சுண்ணமொன்று கூறுகின்றேன். கல்லுப்பு பத்துபலம் எடுத்துக் கொள்ள வேண்டும். கடல் நுரை பத்துபலம் எடுத்து ஊத சுண்ணமாகும். இவ்விரண்டையும் நாயுருவிச் சாற்றால் அரைக்கவும்.

(237-238) அரைத்த வில்லையை கரியில் வைத்து ஊத கடுஞ் சுண்ணமாகும். சுண்ண எடை சாரம் சேர்த்து நெடியடங்க அரைத்துக் கொண்டு ஒரு சட்டியில் இட்டு முறையாகிப் புடமிடவும். அதனை பனியில் வைக்க செயநீராகும். இந்த செயநீரில் வீரம், பூரம் ஆகியவற்றை சேர்க்க சிவந்து காணும். இந்த நீரின் பெருமையை என்னவென்று கூறுவேன் ஒரு பீங்கானில் பச்சைக் கற்பூரம் ஒரு பலம் போட்டு செயநீர் ஒரு பலமும் இடவேண்டும்.

(239) இதனை மூன்றுநாள் அரைத்து வில்லைசெய்து வெயிலில் வைக்கவும். காய்ந்த பிறகு ஐந்து சுண்ணக் குகையில் வைத்து புடமிட பூரம் சுண்ணமாகும். இதனால் சகலமும் நீறிவிடும். சாரத்தை சேர்த்து அரைக்க சலமாகும்.

(240) இந்த செயநீரில் நிமிளையைத் தோய்த்து வெயிலில் வைத்து ஊத சுண்ணமாகும். துருசின்மேல் பூசி புடமிட துருசு சுண்ணமாகும். துருசு

சுண்ணத்தினால் சூதம் சாகும். இரசத்தில் இச்செயநீர் பட்டால் இரசம் சுண்ணமாகும்.

(241) இந்நீரில் தோய்த்து ஊத பாஷாணம் அறுபத்து நான்கும் உபரசங்கள் நூற்றி இருபதும் நீறிப்போகும். காராசாரங்கள் இருபத்தைந்தும் கட்டாகும் மெழுகாகும்.

(242) இச்செயநீரால் எல்லாம் மெழுகாகும் செந்தூரமாகும், இரசவாதம் சாத்தியமாகும். முறைபிசகாமல் செய்தால் சித்தியாகும். முறைபிசகினால் ஒன்றும் கிட்டாது. பழுது வராமல் உப்பை கட்டவும். சுண்ணத்தினை விட்டுவிட்டால் எல்லாம் பாழாகும்.

(243) இந்த சுண்ணத்தை எதில் செலுத்தினாலும் வேதையின் பலனைக் காணலாம். இச்சுண்ணத்தைப்போல எங்கும் காணவில்லை. நாவினால் இதன் மகிமையை கூறமுடியாது. எல்லாம் சித்தியாகும். சகலசித்தும் ஆடலாம்.

(244) கடல் நுரையால் கல்லுப்பை நீற்றவேண்டும். முறையாக இதைச் செய்தால் சிவப்பாகும். எல்லாம் சுண்ணமாகும். வகைகெட்ட வாதியே எதையும் கட்டி சுண்ணம் செய்யவும். யூகிமுனி கூறியவாறு சகலமும் சித்தியாகும்.

(245) உப்புடன் முறையாக உப்பைச் சேர்த்து ஊத சுண்ணமாகும். இச்சுண்ணத்துடன் சாரம் சேர்த்து புடமிட சாரச்சுண்ணமாகும். இது துரிசை நீற்றும். இரசம் கட்டிப் போகும். சகலமும் சித்தியாகும்.

(246) அகண்ட பரிபூரணத்தை போக்கி நீ அடுக்காகப் பார்க்கவும். அட்சரத்தைப் பார்த்து சிதம்பர நடனத்தை தரிசித்து கங்கையில் மூழ்கி சுழிமுனையில் வாசியை ஏற்றி நிறுத்தவும்.

(247) ஆறாதாரத்தையும் கடந்து சுழிமுனையில் சுவாசத்தை நிறுத்தி சிதம்பரத்தை நாடி, சித்தர்கள், முனிவர்கள், யோகிகள் ஆகியோரின் அடியினைத் தொழுது சிதம்பரத்தைக் கண்டுத் தேற வேண்டும்.

(248) பிண்டம் இருதயம் ஆகியன ஆகாயம் என்றும் இருதயம் விராட்டி என்றும் பிரம்மம் என்றும் ஐக்கியமென்றும் இவை இரண்டும் அற்று ஒரு நிலையில் இருப்பார்கள் யோகிகள். சிதம்பரத்தில் உண்மை தோணும் அக்கணத்தில் அறிந்து பார்க்கவேண்டும்.

(249) சுவாதிட்டானம் பிருதிவியுமாகும். அது ருக்வேதமாகும். மணிப்பூரகம் அப்புவாகி யஜுர் வேதமாக விளங்கும். அநாதகம் அக்கினியாகி சாம வேதமாகத் திகழும. விசுத்தி காற்றாகி அதர்வன வேதமாகி இருக்கும். இவை காளகத்தியில் இருப்பிடத்தைக் கொண்டிருக்கும்.

(250) ஆகாயம் சிதம்பரமாகும். ஆக்கினையில் மேலுள்ள சிவகங்கை தலையாகும். தன்பதத்தை கடந்து நிற்பவர்கள் உறையும் இடம் தில்லையாகிய

சிதம்பரமாகும். அங்குள்ள சபையே சித்தர்கள் கூடுமிடமாகும். ஈஸ்வரர் நடனமாடும் கனக சபை அதுவே ஆகும்.

(251) சிவனைவிட்டால் வேறுவழியுண்டோ அகங்காரம், சலனம் ஆகியன தீர்ந்து பொறிபுலன் ஆகியன அறிவது எல்லாம் ஆங்காரத்தினாலல்ல. சிதம்பரத்தை அறிபவர்கள் வல்லவர்கள். சிவன் இந்த அண்டசராசரத்தில் அனைத்தையும் ஆண் பெண் என்று ஆக்கினார்.

(252) பார்வதியை பூசைசெய்து வாசியை மேலேற்றவும். சிதம்பரத்தில் நடனத்தைக் கண்டு தேறி சிவனை தரிசிக்கவும். லாகிரியில் மனத்தை செலுத்தி மற்ற கெட்ட எண்ணங்களில் மனதை ஓடவிடாதே. உடலில் உள்ள மூலத்தை உணர்ந்து பின்பு மேல் மூலம் பார்க்கவும்.

(253) மூலத்தின் கீழ் அக்கினி மண்டலத்தில் மூழ்க்கி ஆறாதாரத்தையும் கடந்து சிகார வீட்டில் ஆதித்த மண்டலத்தில் நடுமூலம், பிராணமூலம், சிதம்பரபாதம் ஆகியவற்றைப் பார்த்து மேல் மூலமாகிய சந்திர வீட்டில் மூழ்க மூன்று யுகமும் நொடியில் ஆகும்.

(254) அப்பொழுது மனதை கடிவாளம் கொண்டு பூட்டி குருபதத்தில் சூத்திரத்தைக் காட்டி உண்டாகும் ஒளியை கருத்திலுணர்ந்து சைதன்யப் பாலை உண்பாய். தாயாகிய பார்வதிக்கு மலர்களால் பாதத்தில் அர்ச்சனை செய்வாய்.

(255) எளிமையாக பூசைசெய்து எட்டெழுத்தை கும்பித்து நடுமூலத்தில் அமர்ந்து சிவனின் பாதத்தினைப் போற்றி காயசித்தி, யோகசித்தி, வாதசித்தி ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் எனக்குத் தரவேண்டும் என்று கூறி தொழவேண்டும்.

(256) உப்புக்கட்டினைக் கூறுகிறேன். வெடியுப்பு எட்டுபலம், சீனம் இரண்டு பலம், சாரம் இரண்டு பலம், எலுமிச்சம் தோல் நாலு பலம் ஆகியவற்றை நன்றாகக் கல்லுரலில் போட்டு இடித்து புதுச்சட்டியில் வைத்து எரிக்க சுண்ணமாகும்.

(257-258) இச்சுண்ணத்தை பனியில் வைக்க செயநீராகும். பிறகு கடல் நுரையை ஊதி சுண்ணமாக்க வேண்டும். இதனை இரண்டு படி ஒரு சட்டியிலிட்டு ஒரு சேர் கல்லுப்பை கட்டியாக அதில் வைத்து மேலும் அந்த கடலநுரை சுண்ணம் இரண்டுபடி போட்டு அழுத்தி பிறகு வேறு சட்டியை மூடி சீலைமண்செய்து நாலுசாமம் எரித்துப் பார்க்க உப்பு தெறிப்படங்கி கட்டும். நீர்சுண்டி வரண்டு இருக்கும். அதனை எடுத்து முன்பு செய்த செயநீரில் தோய்த்து காய வைக்கவும். பிறகு மீண்டும் சட்டியில் வைத்து முன்போலவே இரண்டு சாமம் எரிக்கவும்.

(259-260) இப்பொழுது கல்லுப்பை எடுத்துப்பார்க்க தந்தம் போலிருக்கும். இந்த உப்புக்கு சமஅளவு ரசபதங்கம் சேர்த்து செயநீரால் அரைத்து சட்டியில் வைத்து மேல்சட்டியில் மூடி எரிக்கவும். பிறகு இறக்கி

எடுத்துப் பார்க்க உப்பும் இரசமும் சேர்த்து கட்டுப்பட்டிருக்கும். இதனை கரியில் வைத்துருக்கினால் வைரம்போல கண்விட்டாடும். செம்பை உருக்கி நாலுக்கு ஒன்று இவ்வுப்பை தர பத்து மாற்றாகும் லட்சமி உன் முன்னே வந்து நிற்பாள். இத்தங்கத்தை செந்தூரித்து உண்பாயானால் காயசித்தி யோகசித்தி உடனே ஆகும்.

(261) கல்லுப்பு சூதத்தைக் கட்டும். கடைகெட்ட வாதிகளே இதனால் வாதம் சித்தியாகும். தங்கம் கிடைக்கும். 18 சித்தர்களும் உப்பினால் இரசத்தைக் கட்டிப் பார்த்தனர். இதனால்தான் கல்லுப்பைக் கொண்டு வேதை மார்க்கம் செய்யக் கூறினேன். நுணுக்கமுடன் பார்த்துச் செய்வாயாக.

(262) சாத்திரங்கள் பலவற்றிலும் மறைத்ததை நான் வெளிப்படையாக உலகிலுள்ள மனிதர்கள் பிழைக்கக் கூறினேன். முறையாகச் செய்தால் எல்லாம் முடிவாகும். கல்லுப்பினைக் கொண்டு இரசவாதம்செய்து முன்னேறவும். இது பொய்யல்ல சிவன் மேல் ஆணையாக இது உண்மை.

(263) கல்லுப்பைக் கட்டிக்கொண்டு இரசத்தினை சமஅளவு சேர்த்து அரைத்து எரித்து எடுக்கக் கட்டிப்போகும். அவ்வுப்பு மணியை மாலையாகக் கோர்த்து செபத்தை செய்ய தேவி பிரசன்னமாவாள். இதன் போக்கு கணக்கிலடங்காது.

(264) கடல்தண்ணீரால் உப்பைக் காய்ச்சி அதனுடன் இலிங்க இரசத்தினை சேர்த்து எரிக்க பவழம்போல இறுகும்.

(265) கடலில் விளையும் உப்பினால் இரசம் கட்டும். சிவன் கூறியதுபோல் விரும்பி செய்தால் உலகை ஆளலாம்.

(266) படிகாரத்தை நன்கு ஊதிட கடும் சுண்ணமாகும். அச்சுண்ணத்தின் தாளகத்தின்மேல் கட்டி புடமிட தாளகம் நீறிப்போகும்.

(267) செம்பு கரியானால் தங்கம் கிடைக்கும், வம்பு பேசினால் நான் என்ன செய்வேன். நம்பினால் இரசவாதம் கிடைக்கும்.

(268) கடல்நுரை நன்கு ஊத கடும்சுண்ணமாகும் இச்சுண்ணத்தில் கல்லுப்பை வைத்து எரிக்க உப்பின் கசிவு போகும்.

(269) படிகாரத்தை முதலில் தனியே ஊத சுண்ணமாகும். அதனுடன் வெடியுப்பு சேர்த்து பழச்சாறுவிட்டு அரைத்து ஊத பூத்துவிடும்.

(270) இதனை பனியில்வைக்க செயநீராகும். இது வெடியுப்பைத் தோய்த்து வெயிலில் போட்டு காய்ந்த பின்பு கட்டிய உப்பில் வைத்து எரிக்கவும்.

(271) முழுமையாக எரிக்க வெடியுப்பு கட்டிவிடும். கரியில் நின்று ஆடும். இதனால் செம்பு வாதத்திற்கு ஆகும். சிவன் சொன்ன வித்தை இது.

(272) நான் பாடிய பதினாலாயிரம் பாடல்களில் இந்த ஆயிரம் பாடல்களில் எல்லாவற்றையும் கூறிவிட்டேன். இதனைக் கூர்ந்து பார்த்தால் எல்லாம் எளிதாக் முடியும்.

(273) இந்த ஆயிரம் பாடல்களை முதலிலிருந்து இறுதி வரை பார்த்து முறையுடன் செய்ய அருள் வாதம் ஆகியன கிடைக்கும்.

(274) யூகிமுனியாகிய நான் கூறிய இந்த நூலைப் பார்த்து விரும்பி செய்திட வாதம் சித்தியாகும்.

(275) வாதம் முடியும் முடியும் என்று வீணாக அலைய வேண்டாம். அயத்திலிருந்து செம்பை பிரித்து வாதத்தை முடிக்கவும்.

(276-277) செம்புக்கு கெந்தகத்தையும், சூடனையும் கூட்டி அரைத்து புடமிட கரியாகும். இதனுடன் அயத்தைச் சேர்த்து செவ்வல்லிப்பூச்சாற்றால் அரைத்து பத்து புடமிட நன்கு கருகிடும். இதனுடன் வெங்காரம் கூட்டி உருக்கி ஊத செம்பாகும்.

(278) செம்பு கருப்பாக இருக்கும். மீண்டும் மீண்டும் வெங்காரத்தை சேர்த்து அரைத்து ஊத சிவன் அருளால் சிவப்பாகும்.

(279) இந்த செம்பை நன்கு ஊதி எடுத்துக் கொண்டு வெள்ளி பத்துக்கு ஒன்று தர பொன் கிடைக்கும்.

(280-282) ஆறுமாற்றுள்ள இச்செம்பை நான்கு பங்கு எடுத்துக்கொண்டு ஒரு பங்கு தங்கம், நாகம் இரண்டும் சேர்த்து உருக்கவும். இரசம், கெந்தகம், வகைக்கு ஒரு பங்கு அயம் 1 பங்கு சேர்த்து முறைப்படி அரைத்து முன்பு செய்த களங்குக்கு கவசம் கட்டவும். பிறகு புடமிட சிவக்கும். இது கரியாக இருக்கும். இதனை மஞ்சள் கரிசாலை சாற்றில் அரைத்து பத்து புடமிட்டு எடுக்க செந்தூரமாகும்.

(283) இந்த செந்தூரத்தை நூற்றுக்கு ஒன்று தர பத்தரை மாற்றாகும். துக்கப்பட்டு திரிந்தால் பலன் ஒன்றும் கிடைக்காது. இந்த செந்தூரத்தை உண்ணவும்.

(284) இந்த செந்தூரத்தை உண்ண உடல் இறுகும். மேனி சித்தியாகும். நோய்கள் ஓடிவிடும்.

(285) நூலைப் பார்த்து முறையாகச் செய்ய இரசவாதம் பலிக்கும். ஊற்றுப்போல பெருகிவிடும். நாற்றிலிருந்து விளைவது போல் உண்மையாக விளையும்.

(286) இரசவாதம் பலித்தால் யோகம் வந்து கிடைக்கும். யூகிமுனியாகிய நான் கூறிய பாகத்தினைப் பார்த்து செய்யவும்.

(287) உழைத்தால் பலன் கிடைக்கும். பாக்கியங்கள் உண்டாகும். காயசித்தி உண்டாகும். யோகம் வரும். வீணாக அலைந்தால் பலனில்லை. சரக்கையெல்லாம் சுட்டுத் தேர்ந்தால் வகாரத்தை பாகமுடன் செய்து பார்க்கவும்.

(288) பொல்லாத பாவிகளுக்கு சொன்னாலும் தெரியாது. அதனை பொய்யென்பார்கள். அத்தகையவர்களுக்கு சொல்ல வேண்டாம். சாஸ்திரத்தை முயன்று பார்க்கும் நல்ல சீடர்களுக்கு மட்டுமே கூறவேண்டும். அத்தகையவர்களை சோதித்து அவர்களுக்கு முறையைச் சொல்லவும்.

(289) சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவனிக்கும், அசுவனி விசுவனிக்கும், விசுவனி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும் உபதேசித்தனர்.

(290) புலத்தியர் தேரருக்கும் தேரர் யூகிமுனிக்கும் கூற உலகம் பிழைக்க கூறினேன். இந்த நூலிலுள்ள 1000 பாடலை முதலிலிருந்து இறுதிவரை பார்த்தால் வகாரம் கைகூடும்.

(291) மனதை ஊன்றி நூலில் கூறியுள்ள பதினாயிரம் பாடலையும் பார்க்க வாதம் வைத்தியம் கைகூடும். பொருள் வந்து சேரும். தங்கம் உண்டாகும். புலம்பாமல் செய்து பார்க்க வகாரம் கைகூடும்.

(292) அயத்தையும் முதலிலும் அதன்பிறகு உப்பையும் பிறகு வழலையும் இறுதியில் சவுக்காரச் சுண்ணத்தையும் பார்க்கவும். மார்பை மறைக்க ரவிக்கை இட்டதுபோல் மறைப்பாக நான் கூறியதை இந்த நூலில் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

(293) வங்க செயநீரை கூறுகின்றேன். இரசம் ஒரு சேர் எடுத்து கல்வத்திலிட்டு இடையே வீரத்தை சேர்த்து ஒரு நாள் அரைக்கவும். அதை பனியில் வைக்க செயநீராகும்.

(294-295) துருசை பூநீற்றின் நடுவில் வைத்து ஒரு சாமம் எரிக்க வெளுத்துப்போகும். அதை எடுத்து செயநீரில் தோய்த்தது காயவைக்கவும். அண்டோட்டை ஊதி சுண்ணமாக்கவும். வீரம் நாலுக்கொன்று சேர்த்து அரைக்க மஞ்சளாகும். அதனை துருசின் மேல்கட்டி பத்தெருவில் புடமிட சுண்ணமாகும். இதனால் தங்கமும் குளிகையும் சித்தியாகும். சூதம் கட்டிப்போகும். இந்த முறையை முறையாக செய்து பார்க்கவும்.

(296-297) முன்புசெய்த துருசு சுண்ணத்தை விராலி இலையிலிட்டால் சாறுவரும். அதனைக் கரண்டியில் இட்டு அதில் இரசம் நாலுபலம் விட்டு கொதிக்க வைக்க இரசம் கட்டும். இச்சூதத்திற்கு சாரணை கொடுத்து தீர்க்கவும். சாரணை தீர்க்க ககனம் ஒடும். ஆரம் போல கோர்த்து வைத்துக் கொள்ளவும். சாரணை செய்ய செய்ய குளிகை சித்தியாகும். வாதிசித்தி, யோகசித்தி ஆகியன சாத்தியமாகும்.

(298) லிங்கத்துக்கு ரசத்தின் செயநீரால் ஒருசாமம் சுருக்கு தர லிங்கம் கட்டிப் போகும். தில்லையில் வாழும் நடராஜன் கூறிய வித்தையிது செம்பில் நூற்றுக்கொன்று தர தங்கமாகும்.

(299) நந்தீசர் கூறியதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். வழலையை மறைபொருளால் மறைத்து விட்டனர். வழலையை பிணம் என்று கூறிவிட்டார்கள். ஆனால் அயம் என்பதே வழலையாகும். எனவே உறுதியாகக் கூறுகிறேன் வழலை என்று பிணத்தை தோண்ட வேண்டாம்.

(300) உலகவாதிகள் முறையாக நூலை ஆராயமல் புத்தியில்லாமல் அலைவார்கள். உய்த்துணர்ந்து பார்த்தால் புத்தி தோன்றும். மதுவை குடித்துவிட்டு வழலையை பிள்ளைதான் என்பார்கள். தீட்சை செய்வேன் என்பார்கள். ஆனால் நூலை நன்கு பார்த்தவர்கள் அயத்தை மட்டுமே வழலை என்பார்கள். நிசமாக கூறிவிட்டேன் வழலை என்பது அயமாகும்.

(301) கருவித்தை என்று கூறி அலைவார்கள் அப்படி இல்லாமல் அயத்தைப் பார்க்கவும். கருவில் ஒன்றுமில்லை கரும் பொன்னாகிய அயத்தில் வேதையாகும். எனவே இரும்பைப் பார்க்கவும். அடிக்கடி கூறமாட்டேன் நூல் இறுதியில் சுருக்கமாக பாகத்தினை கூறிவிட்டேன்.

(302) திருமூர்த்திக்கு ஒப்பாகக் கூறிவிட்டேன். பிண்டவித்தை என்பது பொய்யாகும். நூலினை ஆராய்ந்து பார்க்கவும். அயத்தின் வித்தை உண்மையாகும். கஞ்சா, அபின் உண்பவர்கள் பிண்டவித்தையை செய்வார்கள். ஈஸ்வரன் அறியக் கூறுகிறேன். பிண்டவித்தை பொய்யாகும்.

(303) செம்பு முறை ஒன்றைக் கூறுகின்றேன். ஒரு பலம் செம்பை எடுத்து இராவி பொடியாக்கிக் கொண்டு லிங்கத்தினை சமஅளவு சேர்த்து மஞ்சள் கரிசாலை சாறுவிட்டு அரைக்கவும். அதனை வில்லைதட்டி காயவைத்து பெரும்புடமிட்டு உருக்கி காரீயத்தைச் சேர்க்கவேண்டும்.

(304) பிறகு ஈயத்தின் எடைக்கு இரும்பு சேர்த்து அரைத்து பத்து புடமிடவும். பிறகு சாரம் கூட்டி உருக்க செம்பாகும். இந்தச் செம்பை வெள்ளியில் பத்துக்கு ஒன்று தர ஏழு மாற்றாகும். இத்தங்கம் புடத்துக்கு இறங்கும்.

(305) அயத்தின் செம்பை பார்த்து எளிதென்று விட்டுவிட வேண்டாம். இச்செம்பினால் காயசித்தியாகும். அயத்தில் நல்லவேதை மார்க்கமுண்டு குடிகாரன்தான் வழலை என்று கூறி பிள்ளையைக் கொண்டா என்று சொல்லி தலை மண்டை ஓட்டை உடைத்து அதற்குள் சரக்கிருக்கிறது என்பான்.

(306) குடிகாரன் பேச்சை கேட்டுத் திரிய வேண்டாம். கருவில் வேதையில்லை. பாவமுண்டாகும் நரகம் கிடைக்கும். அப்பாவிக்கு உடன்படாமல் அயத்தைப் பார்த்துத் தேறவும். பொன் எல்லாம் கைக்குள்ளாகும். இரும்பை விட்டால் தங்கமில்லை.

(307) இவ்வுலகில் கெட்டவாதிகள் தங்கம் பிண்டத்திலிருக்கிற தென்று நாய் பசியில் வெள்ளெலும்பை கடிப்பதுபோல் அதைச் செய்வார்கள் எலும்பைக் கடிக்க வாயிலிருந்து இரத்தம் வருவதை எலும்பிலிருந்து இரத்தம் வருவதாக எண்ணிக் கொண்டு மேலும் மேலும் கடிக்கும் பிண்டத்தில் வித்தையில்லை.

(308) அயச்செம்பைக் கண்டால் முழுமையான செம்பு கிடைக்கும். இரும்பை முழுமையாகக் கண்டால் பொன்னாகும். இவைகளை விட்டுவிட்டு பிண்டத்தில் வாதம் பார்த்தால் கோடி நரகம் கிட்டும். இரும்பைப் பார்க்காவிட்டால் வாதம் எல்லாம் விழலாய்ப் போகும்.

(309) விழலாய்ப்போச்சு என்று எண்ணிவிடாமல் ஞானத்தை மனதில் எண்ணிப் பார்க்கவும். வாதத்தை விடவும் வேண்டாம். முயற்சித்தால் வாதம் எளிதிலாகும். பிணத்தை எடுத்து செய்தால் கோடி நரகம் கிட்டும். பிண்டத்தில் உறுதியாக வகாரம் இல்லை.

(310) ஞானத்தை முதலில் பார்த்து வகாரத்தை பின்பு பார்த்தால் உலகில் வாதம் கிடைக்காது. அவ்வாறு இல்லாமல் அயத்தைப் பார்த்தால் பொன் கிடைக்கும். உலகம் புகழும் அதன்பிறகு ஞானம் பார்க்க கிடைக்கும் என்று யூகி நான் கூறுகின்றேன்.

(311) சாத்திரநூல்களைப் பார்த்து செய்யவும். இன்னுமொரு முறையைக் கேட்பாயாக. செம்பை நீற்ற பதினெட்டுச் சித்தர்களும் மறைத்து விட்டார்கள். ஏன் மறைத்தார்கள் என்றால் வெளிப்படையாகச் சொன்னால் இடும்பர்கள் எல்லாம் பொன் செய்வார்கள் அவர்கள் மறைத்துக் கூறியதை வெளிப்படையாக யூகிமுனியாகிய நான் கூறிவிட்டேன்.

(312) செம்பை நீறுபண்ண உலகத்தினருக்கு சொல்லுகிறேன். தேரர் யூகிமுனியாகிய எனக்கு கூறிய பாகம் இது. பால்போல் செம்பு பற்பத்தை உலகத்துக்கு கூறுகிறேன். ஆத்தாள் கூறியதை சீடர்களுக்காக கூறுகிறேன்.

(313) தாம்பர பஸ்பத்தை உலகத்தினருக்கு கூறுகின்றேன். நான்கு பலம் செம்பை தகடாகத் தட்டிக் கொள்ளவும். ஒரு சேர் ஆட்டு மூத்திரத்தில் வெடியுப்பு, சீனம் வகைக்கு ஒரு பலம் எடுத்து கரைத்துக் கொள்ளவும்.

(314) மூன்றுநாள் கழித்து தெளிவை இறுத்து பீங்கானில் இட்டுக் கொண்டு, கரியோட்டில் செம்பைக் காய்ச்சி வைத்து நன்கு ஊதி எலிக்குஞ்சு வர்ணம் போல் வந்தவுடன் அதில் தோய்க்கவும். வெட்டையாகுமட்டும் மீண்டும் மீண்டும் தோய்க்கவும்.

(315-316) செம்பு வெட்டையாகுமட்டும் இவ்வாறு ஊதிவிட வேண்டும். செம்பிருந்தால் நீறாது. உமிருந்தால் கரியாகப் போகும். எதைக் கொண்டு கவசம்செய்து புடமிட்டாலும் கறுப்பேறும். வெளுக்காது. எனவே நன்கு தோய்த்து வைத்துக் கொள்ளவும். ஆட்டெலும்பைச் சுட்டுக் கொண்டு அதில் ஒரு சேர்

எடுத்து அடுப்பிலிட்டு முன்பு சித்தப்படுத்திய செம்பை நடுவில் வைத்து கோணியில் சுற்றிக் கொண்டு கடும்புடமாய் போடவேண்டும். செம்பு தந்தம்போல் நீறும். இதனை எடுத்து பூசை செய்து வைத்துக்கொள்ளவும்.

(317) இந்த செம்பு பற்பத்தை சூதத்தில் விட்டுக் காய்ச்ச இரசம் இட்டலிபோலாகும். அதை உருட்டி ஊமத்தங்காயில் அவிபுடமாய் நூறுபுடம் போட இரசம் மணியாகும். அதனை மணியாகக் கோர்த்து செபம் செய்ய லட்சுமி குடி கொள்வாள்

(318) ரசமணி இருந்தால் காயசித்தி, யோகசித்தி மற்றும் அட்டமா சித்திகளும் உண்டாகும். வாதம் ஏவல் கேட்கும். செம்பை யுருக்கி அதில் கொடுத்தால் தங்கமாகும். மணியின் நேர்மையை சத்தியமாகச் செய்து உணர்வாயாக.

(319) இரசமணியின் பெருமையை வாயினால் கூறமுடியாது. சுவாசத்தை நீ இறுத்த உதவும். நீரோரையின் குறுக்கே மறித்தால் என்ன வேகம் உண்டாகுமோ அதே வேகம் இந்த மணிக்கு உண்டாகும். குளிகையிட்டு ககனம் ஓடும்போது குணம் மாறாமல் இருக்க வேண்டும்.

(320) சாரக்கட்டு ஒன்று கூறுகின்றேன் அதைச் செய்வாயாக. ஆட்டெலும்பை சுட்டுக் கொண்டு அதில் இரண்டு படி அளந்து கொண்டு சட்டியில் இட்டு அதில் நடுவில் சாரக்கட்டியை வைத்து அதன் மேல் மேலும் ஆட்டெலும்பை மூடி மேல்சட்டி மூடி அடுப்பில் வைத்து எரிக்க உருகிக் கட்டும்.

(321) இந்த சாரத்தினால் வேதையில் கோடி முடிவுகளைக் காணலாம். துரிசினால் களங்கு நூறுமுறைகளில் உண்டாகும். கெந்தகத்தினால் வர்ணம் உண்டாகும். வங்கத்தினாலும் நாகத்தினாலும் தங்கம் உண்டாகும். உப்பினால் வர்ணம் உண்டாகும். மனம் வைத்துக் கட்டைப் பார்க்க எல்லாம் உண்டாகும்.

(322) நாகத்தை இலுப்பை நெய்யில் 20 முறை உருக்கிச் சாய்க்கவும். அவ்வாறு சாய்க்கையில் முன்பு கூறிய சாரத்தை முகத்தில் தூவ நாகம் கண்விட்டாடும். சீறல் அன்று எண்ணெய் கக்கும். அது, இறுகி புகைச்சல் அற்று சட்டமாக இருக்கும்.

(323) இவ்வாறு கட்டின நாகத்தை தங்கத்தில் சம எடை தர அதனை விழுங்கி விடும். கந்தகம் இரசம் முன் அளவே சேர்த்து மஞ்சள் கரிசாலை சாறுவிட்டு அரைத்து உலர்த்தி அதில் வைத்து எரிக்க சிந்தூரமாகும்.

(324) இந்த செந்தூரத்தினால் செம்புக்கு நூற்றுக்கு ஒன்று தர பத்தரைமாற்றுள்ள பொன் கிடைக்கும். செந்தூரத்தை தேனில் உண்ண உடல் இறுகும். மேனியானது செவ்வலரி பூபோல சிவக்கும். பூநாகம் ஆடும் ஆட்டம் தங்கத்தைத் தரும்.

(325) நாகம் ஆடும் ஆட்டம் அண்டரண்டத்தைக் கிழித்துக் கொண்டு ஓடும். கடினம் என்றால் தங்கத்தின் வேதையை காண முடியாது. நாகத்தினால்

நவலோகமும் தங்கமாகும். நாகம் சேராவிட்டால் ஒன்றுமில்லை சித்தியில்லை இந்த ஆயிரத்தில் முயன்று பார்த்தெடுக்க சித்தியாகும்.

(326) வாதத்தை செய்துகொண்டு ஞானயோகங்களையும் பார்க்கவும். கற்பத்தை உண்டு உடலைப் பேணிக் காக்கவும். நூல்களை ஆராய்ந்து படிக்கவேண்டும். சிவயோகி என்று பெயர் எடுக்கவும். அதனை அடுத்து பதமாய் நிற்க வேண்டும். புத்தியுடன் செய்தால் எல்லாமாகும். புத்தியில்லார்க்கு ஒன்றும் சித்தியாகாது.

(327) முன்சொன்ன உப்புக்கு இரச பதங்கத்தைக் கேட்பாயாக நாலுபடி உப்பை இருபது படி கடல்நீரில் கரைத்துக் காய்ச்சவும். கடல் நுரையில் ஊதி சுண்ணமாக்கி அரைபடி அதனுடன் கூடப் போட்டு பொங்காமல் அடிபிடிக்காமல் காய்ச்சிக் கொள்ளவும்.

(328) நன்கு காய்ச்சிய பின்பு ஒரு சட்டியில் கல்லுப்பை வைத்து நடுவில் சூதத்தினை விட்டு மேல்சட்டி கொண்டு மூடி ஏழுசீலைமண் செய்யவும். பிறகு நூறு நாழிகை எரிக்கவும். இரசம் தந்தம்போல் பஸ்பம் ஆகும்.

(329-330) இந்த பஸ்பத்துக்கு சமஎடை கல்லுப்பு சேர்த்து அரைத்து உருண்டைசெய்து இதமாகத் துணியில் வைத்து பந்துபோல் இறுக்கக் கட்டிக் கொள்ளவும். பிறகு சுண்ணாம்புக் கவசம் செய்து பத்தெருவில் புடமிடவும். இவ்வாறு நான்கு புடமிட இரண்டும் சேர்ந்து உருகி திரண்டு மணிபோலாகும். இந்த மணியை எடுத்து செம்பில் கொடுக்க ஏழு மாற்றுள்ள பொன்னாகும்.

(331) இவ்வாறு செய்தால் மட்டுமே கல்லுப்பு கட்டும். இதை விட்டுவிட்டு வெறும் உப்பைக் காய்ச்சி புடமிட்டு எடுத்தால் வெள்ளையாயிருக்கும். கரியில் வைத்து உருக்கினால் கரிகுடித்துவிடும். வீணாகப் போகும். மனது எரிச்சலடையாமல் சூதத்தைச் சேர்ப்பாயாக

(332) சூதம் வாதத்திற்கு ஆதியாச்சு சூட்சுமமாய் அதனை அடக்க கல்லுப்பாகும். சொன்னபடி செய்தால் தங்கம் அரிதல்ல வாதம் என்பது ஐந்தாம் வேதமாகும். வீணாகச் சுட்டலைந்தால் என்ன செய்வேன். நிதியாக இந்த நூலை நிர்ணயமாய்ச் சொல்லிவிட்டேன்.

(333) கெந்தகச் செம்பைச் சொல்லுகிறேன் கெந்தகத்தை பாலில் சுத்தி செய்து அந்த எடை சூதபஸ்பத்தை சேர்த்து முலைப்பாலாலாட்டி குன்றி அளவு உருண்டை செய்து வெயிலில் காய வைத்துக் கொள்ளவும். அதில் இரண்டு பலம் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(334) இரண்டுபலம் எடுத்து உருக்கினால் பச்சை நிறம் வரும். அந்த சமயத்தில் கந்தக உருண்டையை கிராசமிடவும். அதரதராகப் போகும். அந்த அதரை எடுத்து அப்பால் வைத்துக் கொள்ளவும். மீண்டும் ஒருமுறை கிராசங் கொடுக்க அதராகிப் போகும்.

(335-336) இந்த அதரை எல்லாம் எடுத்து வெங்காரம் சேர்த்து உருக்க களங்காகும். அதனை உருக்கி கல்வத்திலிடவும். களங்கின் எடைக்கு அயப்பொடியை சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து கழுவி களங்கில் சேர்த்துக் கொள்ளவும். இதனை செவ்வல்லிப்பூச் சாற்றால் அரைத்து வில்லை செய்து காயவைத்து கஜபுடமாக போட்டு எடுத்து மீண்டும் ஒருமுறை அரைத்து வில்லை செய்து சிவக்குமட்டும் புடத்தைப் போட்டு அதனை எடுத்து உருக்கி எடுக்க செம்பாகும்.

(337-339) அலரிப்பூப்போலுள்ள அயச்செம்பிற்கு சம எடை தங்கத்தை சேர்த்து வெள்ளி எட்டு பங்குக்கு இரண்டு பங்கு தர ஏழு மாற்றாகும். இதை விற்று செலவு செய்து கொள்ளவும். இதனை செந்தூரம் செய்யக் கூறுகின்றேன். அயச்செம்பு 1 பலம் தங்கம் ஒரு பலம் சேர்த்து தகடாக்கிக் கொள்ளவும். தகட்டின் எடைக்கு இரண்டு பங்கு கெந்தகமும் கெந்தகத்திற்கு கால்பங்கு வீரமும், கெந்தகத்தின் எடை அயப்பொடியைச் சேர்த்து பழச்சாறுவிட்டு அரைத்து நீர்விட்டு இரண்டு சாமம் அரைத்து தகட்டின்மேல் பூசி காயவைக்கவும். அதனை நொறுங்கும் வரை மீண்டும் மீண்டும் புடமிட்டு எடுத்துக் கொள்ளவும். அயச்செம்பு செந்தூரம் முருக்கம்பூ போல சிவக்கும். கருஞ்சிவப்பாக இருக்கும். அதனை வெள்ளிக்கு எட்டில் ஒன்று சேர்க்க தங்கமாகும். அதனை செலவு செய்து ஞானம் பார்த்து சுழிமுனைபினை நாட வேண்டும்.

(340) இந்தமுறை நந்தீசர் மேல் ஆணையாக உண்மையாகும். முன்காண்டத்தில் மறைத்துவிட்டேன் வரிவாகக் கூறிவிட்டேன். இதைப் பார்த்து குழந்தைகூட செய்யும். முறையாகச் செய்தால் வேதை பாகம் முடியும்.

(341) வாதம் என்றால் எளிதல்ல எனவே சித்தர்கள் மறைத்துவிட்டனர். வீதிக்கு ஒருவர் செய்தால் தலை காணாமல் போகும். இந்த நூலை முழுமையாக படிப்பவர்கள் நிமிடத்தில் வேதை பாகத்தை முடிப்பார்கள். ஒரே நோக்கத்துடன் இருந்து செய்தால் எல்லாம் முடியும் புரட்டு செய்பவர்களுக்கு வகாரம் நிலைக்காது.

(342-346) சிலர் நான் வாதம் செய்வேன் என்று கூறி அபின், கஞ்சாகள், சாராயம் ஆகியவற்றை வைத்தும் கோழி, ஆடு ஆகியவற்றை சமைத்து வைத்தும் பூசை செய்தும், பெண்ணில் பாதம் தொட்டும் பூசை செய்வார்கள். பூசை செய்த எட்டு நாளில் வாதம் வரும் என்று கூறி நாகத்தினை செம்பில் கொடுத்துக் கொண்டு பணம் பிடுங்கிக் கொண்டு ஓடுவார்கள். அவன் பின்னே பணம் கொடுத்தவன் ஓடுவான். இறுதியில் அவன் மடியைப் பிடித்து என்னை மோசம் செய்து விட்டாய் என்று கூறி எனக்கு வாதம் வேண்டாம். செலவழித்த பணத்தைத் தாரும் என்று கேட்டால், என்னை விட்டால் தருகிறேன் என்று கூறி மீண்டும் ஓடிவிடுவான். பிறகு வேறு ஒருவனிடத்தில் சென்று தங்கம் செய்யத் தெரியும் என்று சொல்வான். பிண்டத்தை கொண்டுவா என்று கூறி அதனை அறுத்து

கொடிச் சுண்ணம், ஈரல்சுண்ணம் என்று கூறுவான் சுண்ணம் செய்து சரக்கினைக் கட்டி செம்பிலே கொடுத்து ஒன்றும் வரவில்லை என்று பிண்டம் கொண்டுவா செய்து தருகிறேன் என்பான். வகைகெட்ட மானிடர்கள் அலைந்து திரிந்து வசவு செய்து இறுதியில் மாண்டு போவார்கள்.

(347) மாண்டு இறந்துபோகாமல் யூகிமுனியாகிய என் நூலைப்பார்த்தால் வாதவேலைகள் தோன்றும். புத்தியுடன் இருந்து எல்லாம் செய்தால் வகாரம் ஆகும். பதினாறு ஆண்டு இந்த நூலை படித்து சோதித்துத் தேறி சிறிதளவு சரக்கெடுத்து செய்து பார்க்கவும். இவ்வுலகில் அரசாளலாம்.

(348-349) இது அகத்தியர் கூறிய மார்க்கம். சூத்திரத்தை உட் பொருளாய் மறைத்துப் பாடினார்கள். அதைவிட்டு பிண்டம் என்றும் ஐங்கோலம் என்றும் கூறினார். இதை கருத்தில் வைத்து அவலை நினைத்து உரலை இடித்ததுபோல வாத வேலைகளை மாற்றிச் செய்வார்கள். கருவைக் கூறுவார்கள். வேதையைக் கூற மாட்டார்கள். அண்டம் பிண்டம் என்பார்கள். அதுவல்ல இதுவல்ல என்று அலைய விடுவார்கள். கருக்கிடையும், குருக்கிடையும் சொல்வார்கள். பரிபாஷை தெரியாமல் சுட்டு சுட்டு கெட்டுப் போவார்கள்.

(350-351) இறுதியில் வாதம் இல்லை என்பார்கள். பிண்ட வித்தை செய்தேன் என்பார்கள். கருவைக் கொண்டு வந்து, நான் சுட்டுப் பார்த்தேன் ஒன்றும் கிடைக்கவில்லை என்பார்கள். ஆராய்ந்து பார்க்காமல் பரிபாஷை தெரியாமல் வாதிமார்கள் அலைவார்கள். வாதிகள் சாத்திர நூல்களை ஆராயாமல் சுட்டு சுட்டு நான் கெட்டேன் என்பார்கள். சாத்திரம் புரட்டு என்பார்கள். நெறியுடன் பூசிப்பவர்கள் கோடி பேர். நிர்மூடத்தனம் செய்பவர்கள் கோடி பேர். இந்த நூலை முழுமையாக பார்த்துச் செய்தால் ஏதேனும் ஒரு முறையில் வாதத்தின் பலன் கிடைக்கும்.

(352-353) ஒரு சேர் காரீயத்தை மூசையில் வைத்து உருக்கும் பொழுது அதே அளவு எடையுள்ள கந்தகத்தை தூள் செய்து சிறிது சிறிதாக கிராசம் கொடுக்கவும். கரிபோல தூளாகிப் போகும். அத்துடன் பதினைந்துபலம் துருசை சேர்த்து கற்றாழம்பால்விட்டு அரைத்து, வில்லைதட்டி காயவைத்து கசபுடம் போடவும். மருந்து சிவக்கும்வரை கற்றாழம் பால் விட்டு அரைத்து மீண்டும் மீண்டும் புடமிடவும். பிறகு அதை எடுத்து உருக்கி ஊத காரீயச்செம்பு கிடைக்கும்.

(354) மேற்கண்ட செம்பை கிண்ணம் செய்து அதில் இரசத்தினை விட்டு எரித்தால் இரசம் கட்டிப் போகும். பிறகு என்ன செய்வது என்று எண்ணாமல் அச்செம்பை மோதிரம், குண்டலம் ஆகியன அணிந்து செபம் செய்யவும். லட்சுமி குடி கொள்வாள்.

(355) கெந்தகம் இரசம் ஆகியவற்றை சேர்த்து காரீயத்தைக் கொல்லவும். அதை செம்புடன் எடைக்கெடை சமமாய் சேர்த்து பெரும்புடமாய் போட செம்பு

மடியும். அவ்வாறு செம்பு செத்திருக்குமானால் வெள்ளி பழுத்துவிடும். இச்செம்பில் வேதையை அதிகமாகச் செய்யலாம்.

(356-357) சாத்திரங்களில் சித்தர்கள் களங்கு சிந்தூரங்களை எல்லாம் வீணாகப் பாடியுள்ளனர். கலக்கமில்லாமல் ரிஷிகள் கூறியவாறு காரீயச்செம்பினை வெள்ளி எட்டில் சேர்த்து, தங்கம் ஒன்றும் சேர்த்து உருக்க ஏழுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும். இவ்வுலகுக்கு காரீயச் செம்பின் போக்கினை சொல்லிவிட்டேன். அதைச்செய்து கொண்டு மேலும் மேலும் செல்வாயாக. கெந்தகத்தால் இரசத்தினைக்கொன்று அதன்மூலம் காரீயத்தைக் கொன்றால் இரசவாதத்தின் முடிவைக் காணலாம். இந்த நூலை ஆராய்ந்து செய்தால் சகல சித்தும் ஆடலாம்.

(358) சரக்குகளில் உழைத்தால் பொன்னைக் காணமுடியும். அதை விட்டுவிட்டு வழலைப் பிண்டத்தில் உழைத்தால் பலன் கிடைக்காது. மகனே இந்த நூலை பார்த்து உழைத்தால் நல்லறிவு தோன்றும், வேர் இருந்தால்தான் மரம் இருக்கும். வேரில்லா மரம் இவ்வுலகிலுண்டோ?

(359-360) விதியுள்ளவன் வேதையின் முடிவை காண்பான். ஆனால் கருத்தில்லா விதியாளி காணமுடியாது. சரக்கை சுட்டுச் சுட்டு அலைபவன் காணமாட்டான். அனைத்தையும் தொட்டுத் தவித்து மனம் கலங்கி அலைவான். முறையாகப் பார்த்தால் எல்லாம் அமையும், மனதிலே வேதை தோன்றும். ஆனாலும் அதனை உணராமல் கெட்டலைவார்கள். அவ்வாறு கெட்டவர்களும் நூலைப் பார்த்து சுட்டுச் சுட்டு கெட்டவர்களும் அனேகர். மேலாகப் பார்த்தால் எல்லாம் சுலபமாகத் தோன்றும். சோதித்துப் பார்க்கப் பார்க்க இரசவாதம் தோணும். அதற்கு என்னூலை முழுமையாக பார்க்கவேண்டும்.

(361) எனனூலை ஆராய்ந்து செய்தால் பொன் கிடைக்கும். வாதம் கைகூடும் யோகமார்க்கம் தெளிவாகும். களங்கும் செம்பும் கிடைக்கும். இவை சேராவிட்டால் ஒன்றும் கிடைக்காது. அவ்வாறு கிடைத்தாலும் சிறப்பிருக்காது. என்னூலின் சூட்சுமங்களை புரிந்துகொண்டால் வேதைபாகம் கைகூடும். இல்லாவிட்டால் குடிகெடுத்த வாதிகள் போல பொருள் கொள்ளை போகும். எனவே செம்பை நன்கு முடித்துக்கொள்.

(362) உன்னுடைய அகங்காரத்தினால் வித்தையை வெளியே சொல்லாதே. செம்பின் களிம்பை நீக்கினால் இரசவாதம் கைகூடும். இரசவாதம் தெரியுமென்று வெளியே சொன்னால் உயிருக்கு ஆபத்தாகும். எனவே உலகுக்கு தெரியாமல் மனதை அடக்கி வாழ்வாயாக.

(363) வேதை மார்க்கத்தை யாரும் மனமிறங்கி கூற மாட்டார்கள். பெரிய யோகிகளே கூறுவார்கள். வில்லை வளைத்தால்தான் அம்பு பாயும் வளைக்காமல் வைத்திருந்தால் என்ன பயன்? கல்லை எறிந்தால்தான் தூரப் போய் விழுமே தவிர திரும்பி வராது. மனதை ஊன்றி கவனித்தால் எப்பொருளையும் காணலாம்.

(364) தன் சொந்த பொருள் கொண்டு வேதை செய்ய முற்படின் சாத்திரத்தை ஆழ்ந்து கவனித்து செய்யச் சொல்லும். தன்னுடைய பொருள் என்றால் அயம் கெந்தி செம்பு ஆகியவற்றில் உழைத்துப் பார்க்க வேண்டும்.

(365) பிண்டத்தைக் கொண்டு வேதை செய்ய முற்பட்டால் நரகம் கிட்டும். பிண்டவுப்பை எடுத்தால் அவன் குடும்பம் நிச்சயம் நரகில் விழும். யூகிமுனி சொன்ன இவ்வார்த்தை உண்மையாகும் பொய்யில்லை, வாதத்திற்கு முதலில் செம்பை செய்து முடிக்கவேண்டும்.

(366) அயச்செம்பை கண்டவுடன் தங்கம் இரையும். உனக்கு ஏவல் நிறைய உண்டு என்பதால் பொய் பேசாமல் இருக்கவும். கல் எறிந்தால் தான் தூர ஓடிப்போய் விழுமேயன்றி எரியாவிடின் உன்னுடனே இருக்கும். அதுபோல இந்த இரகசியம் உன்னிடமே இருக்கட்டும். இந்த நூலை முறையாகப் பார்த்தால் வேதை தோன்றும்.

(367) இன்னொருவகை செம்பைக் கேளு ஒருபலம் அயப்பொடிக்கு கால்பலம் வீரத்தினை இட்டு நான்கு சாமம் அரைத்து பின்பு இளவறுப்பாக வறுக்க செந்தூரமாகும். அதன் எடைக்கு சமமாக தொட்டிப் பாடாணத்தை சேர்த்துக் கொள்ளவும்.

(368) அயச்செந்தூரத்துக்கு சமமாக செம்புத் தொட்டிப் பாடானத்தை சேர்த்து செவ்வல்லிப் பூச்சாற்றால் ஒரு சாமம் அரைத்து வில்லை செய்து காயவைத்து முறைப்படி புடம்போட்டு எடுக்கவும். இதனை மூசையிலிட்டு உருக்க அயச்செம்பு களிம்பற்று கிடைக்கும்.

(369) செம்பின் மகிமையை என்னவென்று கூறுவது? இச்செம்பை வெள்ளிக்கு பத்தில் ஒன்று தர ஏழு மாற்றுள்ள தங்கம் கிட்டும். இது கணபதியின் மீதும் அசுவினி மீதும் ஆணை. வழிபாடு உடையவனே செய்து முடிப்பான்.

(370) வாதம் அமையாவிட்டால் வைத்தியத்தை முறையாக செய்தாயானால் பணம் கிடைக்கும். புத்திசாதுர்யத்துடன் செய்தால் எல்லாம் கிடைக்கும். ஆணவத்தால் அலையாமல் நூல்களை ஆராய்ந்து செய்யவும். அறிவுகெட்ட வாதிகளுக்கு புத்திசொல்லி நூல்களை ஆராயச் சொல்லவும்.

(371) சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனியாகிய எனக்குச் சொல்ல திருமூலர் சாட்சியாக நான் உலகத்தில் உள்ளவர்களுக்கு கூறினேன்.

(372) இவ்வுலகில் வாதம், ஞானம், யோகம், சாத்திரங்கள், கலைக்குகள் யாவும் பொய்யல்ல முறையாகப் பயின்றால் எல்லாம் கிடைக்கும். கண்கெட்ட வாதிகள் மட்டுமே வாதங்கள் பொய்யென்பார்கள். சுட்டு செய்து பார்த்தால்

இவ்வாறு பேச மாட்டார்கள். அறைகுறை அறிவுடையவனே அவ்வாறு பேசித்திரிவான்.

(373) மனதை ஊன்றிப் பார்த்துச் செய்தால் வாதம் சித்தியாகும். இங்கு கைபாகம் முக்கியமாகும். வாதசித்தி காயசித்தி இருந்தால் வாதம் கிட்டும் ஞானத்தை உழைத்துப்பெற வேண்டும். எவருக்கும் சொல்லாமல் செய்து பார்க்கவும். அலைந்து உளைந்து போகாமல் விதியைப் பார்க்கவும்

(374) வேதைபாகம் வேண்டுமானால் அ்யத்தைப் பார்க்கவும். விதிகெட்டு திரியவேண்டுமென்றால் பிண்டத்தினைப் பார்க்கவும். நந்தீசர் கூறியபடி பெரியோர்கள் கூறியுள்ள நூல் என்னும் நதியில் மூழ்கினால் பலனுண்டு. செம்பை விட்டால் வேறி கதியில்லை. கர்வத்தினால் அலைந்து திரியாதே.

(375) சிவன்மேல் ஆணையாக முன்பே கூறியதுபோல் அயத்தினை நாடிப்பார்க்கவும். தன்பேச்சு பெரிதென்று பேசவேண்டாம். முப்பு மார்க்கங்களையும் இனி கூறுவேன். மோசம் வராமல் செய்து பார்க்கவும், துரிசு குருவாகிவிடும். அறிவு கெடாமல் சுண்ணம் செய்து பார்க்கவும்.

(376) உலகிலுள்ள வாதிகளே அனைத்தும் சுண்ணமாவதற்கு சவுக்கார சுண்ணத்தினை கூறுகிறேன். அதுவே சுண்ணங்களுக்கு திறவு கோலாகும். அந்த சுண்ணத்தினை மனது ஊன்றி செய்து பார்க்க பலன் கிடைக்கும். எளிதென்று நினைத்து ஒதுக்கி விடவேண்டும்.

(377) சவுக்கார சுண்ணத்தினைக் கேட்பாயாக. பூநீறு விளையும் நிலத்தில் பதினாறு முழம் கீழே குழிவெட்டி உள்ளே உள்ள கல்லை எடுத்து சுண்ணாம்புக் காளவாயில் இட்டு சுட்டு எடுக்கவும். அதில் ப்தினெட்டுபடி கடல் நீரை ஊற்ற நீறிப் போய்விடும். (அமுரி-கடல்நீர் பாடல் 386 - 387)

(378) இதனை மண்கலத்தில் வைக்க உப்பாகிவிடும். அதில் நான்குபடியும் கல்லுப்பு ஒரு படியும் சேர்த்து நன்கு அரைத்து வில்லைசெய்து வெயிலில் காயவைக்கவும். அதனை ஐந்து சுண்ணக்குகையில் வைத்து புடம் இட்டு எடுத்துக் கொள்ளவும்.

(379) புடமிட்டு எடுத்த சரக்குடன் கால்பாகம் வீரம் சேர்த்து அரைத்து முன்போல் ஐந்து சுண்ணகுகையில் இட்டு புடமிடவும். ஆறியபின் எடுத்த சரக்குக்கு கால்பாகம் வீரம் சேர்த்து முன் போல அரைத்து புடமிடவும். இவ்வாறு மொத்தம் ஐந்து புடமிட சவுக்கார சுண்ணமாகும்.

(380) இச்சவுக்கார சுண்ணத்தினால் சரக்கு எல்லாம் நீறிப்போகும். காரசார சரக்குகள் இருபத்தைந்தும் ஏவல் கேட்கும். முன்பு செம்பை முடித்து பின்பு சவுக்காரம் செய்யவும்.

(381) முன்பு செய்த சவுக்காரத்தை வாய்நீரால் அரைத்து துருசுக்கப்பி கவசம் செய்து புடம் போட துருசுநீறும் சவுக்கார சுண்ணம் தொட்டு புடமிட் ஐம்பூத

சரக்குகளும் கட்டிப்போகும். எனவே எல்லாவற்றிற்கும் ஆதியாக 'உள்ள சுண்ணத்தை செய்து பார்க்கவும்.

(382) சுண்ணங்களுக்கெல்லாம் இதுவே முதல்படியாகும். இதனைக் கொண்டு துருசை நீற்றி இரசத்தைக் கட்டு. குளிகைக்கு இதுவே மூலமாகும். இதனையே வழலை, பிண்டம், மூதண்டகுரு என்று பரிபாஷையாக சித்தர்கள் கூறினார்கள்.

(383) சித்தர்கள் மறைத்தவற்றையெல்லாம் வெளிப்படையாக கூறுகின்றேன். சிவனுக்கு ஒப்பாக இருந்து கூறுகின்றேன். முப்புவின் மார்க்கத்தை கேளு. கற்சுண்ணம், கல்லுக்குள் இருந்து விளைந்த சுண்ணம் கல்லுப்பு ஆகிய மூன்றும் சேர்ந்ததே முப்புவாகும்.

(384) முன்பு கூறிய முப்புவும் சமுத்திரத்தில் இருந்து விளையும் உப்பும் சேர்வதால் வழலையாச்சு. இதனை மறைத்து சித்தர்கள் தவறாக கூறியதை நான் இங்கு பிரித்து கூறியுள்ளேன்.

(385) சித்தர்கள் அனைவரும் சவுக்காரத்தை மறைத்துக் கூறினார்கள் எண்ணையை சேர்த்து மருந்து செய்யச் சொல்லி, பின்பு எண்ணெயை வாங்க மல்லிகை இலையை பரப்பி அவித்து, எண்ணெய் கழலாமல் பரிதவித்து நிற்பார்கள். உள்ள பொருளை எல்லாம் விட்டுவிட்டு கலங்கி போவார்கள்.

(386-387) அமுரி என்பதனை மனிதமூத்திரம் என்று பல பெரியோர்கள் கூறினர். அவர்களை கட்டி வைத்து அடித்தாலும் பாவமில்லை மூத்திரநீர் என்றால் சமுத்திர நீரேயாகும். ஆலம்பழம் பழுக்கும்வரை காத்துநின்ற கிளிக்குத்தான் ஆலம்பழத்தின் ருசியின் மகிமை தெரியும். அதுபோலவே முறையாகச் செய்தால்தான் பால் நிறத்துடன் உள்ள சவுக்காரச் சுண்ணம் கிட்டும்.

(388) இந்த நூலில் கூறியுள்ள சவுக்கார சுண்ணத்தினால் வங்கம் நீறிப்போகும். வங்கம் நீறினால் துரிசு நீறிப்போகும். எளிதாக நினைத்து விடாதே. என்னை ஆண்ட தேரர் சொன்ன சொல்லை விரும்பிப் பார்த்தால் முழுப் பொருளும் கிட்டும்.

(389) உலகவாதிகள் பொய்யை உண்மை என்றும் உண்மையை பொய் என்றும் சொல்வார்கள் அரும்பாக இருந்தால் மலரும் போது கண்டிப்பாக வாசனை வரும். சாத்திரங்களை முறையாகப் படித்தால் முறையாகப் படித்தால் துரும்பு தூணானதுபோல் எல்லாம் சித்தியாகும். செல்வம் வந்து குவியும்.

(390) கரிபோட்டால்தான் உலையில் சரக்கு உருகும். அதுபோல முயற்சி செய்தால்தான் இரசவாதம் யோகமார்க்கம் கிட்டும். பாஷாண்டியாக அலையாமல் கொக்கு காத்திருந்து மீனைப் பிடிப்பது போல முயற்சி செய்து பலனைப் பெறவும்.

(391) பலநூல்களை படித்து ஆராய்ந்து செய்தால வாதவித்தை கைகூடும். சவுக்கார சுண்ணத்தை செய்ய வேண்டும். பிரட்டுருட்டு பொய்கள் பேசக்கூடாது. முறையாக கருணை வைத்துப் பார்த்தால் எல்லாம் சித்தியாகும். வாதவித்தையை வெளியே சொல்லாமல் தனியே செய்து பார்த்தால் பலன் கிட்டும்.

(392) வாதிகளே வாதவித்தைகள் எல்லாம் கருத்தாநுமித்து செய்தாலே முடியும். புரட்டுகள் சொன்னால் என்ன லாபம்? கழுதைபோல் கத்தித் திரிய வேண்டியதுதான். செம்பிலும் இயத்திலும் வாதவித்தைகளை முயற்சி செய்யவும்.

(393) கல்லுப்பு சவுக்காரத்தினை கூறுகின்றேன். இதை கட்டினால் எல்லாம் சித்தியாகும். பாடாணங்கள் துருசு ஆகியன கட்டிப்போகும். சுண்ணமாகும். தொட்டது எல்லாம் பழுப்பாகும். உப்பைவிட்டால் சுண்ணம் மற்றும் கட்டினங்களுக்கு வேறு வழியில்லை.

(394) கடல்நீர் இருபதுபடியில் கல்லுப்பு நான்கு படியையும் கடல்நுரை சுண்ணம் ஒரு படியையும் அளந்து போட்டு கலக்கி அடுப்பில் ஏற்றவும். முதலில் சிறிது கொதிக்க வைத்து வடிகட்டி அழுக்கைப்போக்கி, மீண்டும் அடுப்பிலேற்றி காய்ச்சி துழாவிக் கொண்டே வரவும்.

(395) துழாவிக் கொண்டே வர தந்தம்போல் இறுகிவிடும். பிறகு அதை வேறு சட்டியில் இட்டு தெறிப்படங்க வறுக்கவும். மீண்டும் வேறுசட்டியில் இட்டு எரிக்க உப்பு உறுகி கட்டிவிடும். பாஷாணக்கட்டு வந்த இடத்தில் எல்லாம் இதனை சட்டியில் இட்டு குழிசெய்து அதில் பாஷாணத்தை வைத்து எரிக்கவும்.

(396) அவ்வாறு எரிக்க உயர ஏறி பதங்கம் ஆகியிருக்கும். பதங்கத்தை எடுத்து மீண்டும் அரைத்து வில்லைதட்டி முன்போலவே உப்புக் கட்டில் வைத்து எரிக்க நெருப்புக்கு ஓடாது இருக்கும். இரசத்தைக் கட்ட செம்பு பழுக்கும்.

(397) வெள்ளி மார்க்கத்தை சொல்கிறேன். அண்டவோடு பத்துபலம் எடுத்து வெண்கருவால் அரைத்து வெயிலில் காயவைத்து கரியில் வைத்து ஊத நீறிப்போகும். மீண்டும் அதை எடுத்து முன்போலவே வெண்கருவாலாட்டி மீண்டும் கரியில் வைத்து ஊதவும்.

(398) ஐந்து முறை முன்போல அரைத்து அரைத்து ஊத அண்டமானது கடுஞ்சுண்ணமாயிருக்கும். அண்டச்சுண்ணத்துக்கு சம அளவு வெள்ளைப்பாடாணம் சேர்த்து அரைத்துக் கொள்ளவும். இரண்டு சட்டிகளின் வாய்பக்கத்தை இடை வெளியில்லாமல் நன்கு உராய்ந்து நடுவில் சரக்கை வைக்கவும்.

(399) சட்டிக்கு ஏழுசீலைமண் செய்து அடுப்பேற்றி இரண்டு சாமம் எரிக்க சரக்கு மேல்சட்டியில் பதங்கமாகியிருக்கும். மேல்சட்டியில் உள்ள மருந்தினை வழித்து எடுத்துக் கொள்ளவும்.

(400) முடடை வெண்கருவையும் எருக்கம்பாலையும் எடைக்கெடை சேர்த்து மூன்றுநாள் வைத்திருக்க முறிந்துபோகும். அதைவிட்டு பதங்கத்தை அரைத்து வில்லைசெய்யவும். கல்லுப்பை சட்டியிலிட்டு நடுவில் குழிசெய்து அதில் வில்லையை வைத்து எரிக்கவும்.

(401) எரித்தபின்பு மருந்து பதங்கமானால் அதனை வழித்து முன் போலவே அரைத்து வில்லை செய்து வெயிலில் காயவைத்து கல்லுப்பின் நடுவில் வைத்து இரண்டு சாமம் எரிக்க மருந்து அடியில் தங்கி இருக்கும். அம்மருந்து சுண்ணமாகி இருக்கும்.

(402) பத்துபலம் வெள்ளீயத்தை மூசையிலிட்டு உருக்கும்போது முன்பு சொன்ன அண்டசுண்ணத்தை போட்டுக் கிண்ட வெட்டையாகும். அதனுடன் மேலும் சாரம் போட்டு ஊதிவிட வெள்ளீயம் சுத்தியாகும்.

(403) அந்த வெள்ளீயத்தை உருக்கிக்கொண்டு நூற்றுக்கு ஒன்றாக முன் சொன்ன பாஷாணச் சுண்ணத்தைப் போட வெள்ளீயம் நீரை வாங்கி பத்து மாற்றுள்ள வெள்ளியாகிவிடும். இந்த வெள்ளியானது வாத வேலைக்காகும்.

(404-405) இரசவாதிகள் வெள்ளி செய்ய வெள்ளைப் பாடாணத்தைக்கட்ட அதனை கட்டியாக எடுத்து சுண்ணாம்புக்குள் வைத்து பணங்கள்ளைவிட்டு நீற்றி கசடகற்றிச் சுருக்குப்போட்டு புத்தியில்லாமல் கட்டத் தெரியாமல் அலைவார்கள். முதலில் செம்பில கொடுக்க உண்டாகும். வர்ணத்தை கண்டு மகிழ்ச்சி கொள்வார்கள். பின்பு வங்கத்தை கொடுத்து ஊத ஓடிவிட்டதைக் கண்டு வாதம் பொய் யென்பார்கள். சாத்திரத்தில் மறைத்துவிட்டார்கள் என்று கூறித்திரிவார்கள்.

(406-407) வெள்ளை பாஷாணத்தை பதங்கம் செய்து, அண்டவோட்டை சுண்ணம்செய்து இரண்டையும் சேர்த்து அரைத்து கல்லுப்பில் வைத்து எரிக்க அதுவிரண்டும் கட்டி சுண்ணமாகிவிடும். வெள்ளீயத்தை சுத்திசெய்து உருக்கி அதில் சுண்ணத்தைத் தர வெள்ளீயம் நீரைவாங்கி சுத்த வெள்ளியாக இருக்கும். இந்த வெள்ளிவித்தையை நூல்களில் கூறவில்லை. யூகிமுனியான நான் பதினெட்டு சித்தர்களுக்கும் தொண்டு செய்து இந்த பாகத்தை அறிந்து கொண்டேன். எனவே கல்லுப்பை முறையாக செய்து கொள்ள வேண்டும்.

(408) கல்லுப்பை முறையாகக் கட்டிக்கொள்ள வெள்ளி கிடைக்கும். இல்லாவிடில் சரக்கெல்லாம் கரியாய்போகும். கட்டு வகை இங்கு முக்கியம் இல்லாவிடில் வகைகெட்டுப் போகும்.

(409) சிவன் பார்வதிக்கு கூறிய பாகத்தை அடியார்களுக்கு காட்டி தேரரும் நானும் சேர்ந்து சோதித்துப் பார்த்த பாகமிது. பிறகு குளிகையை கட்டி பொதிகை மலை வந்து சேர்ந்தோம்.

(410) வாதகாண்டம் ஆயிரம் என்ற இந்நூலில் எல்லாவற்றையும் தெளிவாகக் கூறியதால் சித்தர்கள் என்னிடம் வந்து இந்த நூலை மறைத்துவிட-

கூறினார்கள். ஆனால் நானோ மறைத்தால் பாவமென்று இந்நூலை உலகத்துக்கு வெளியிட்டு விட்டேன்.

(411) பார்வதி எனக்குக் கூறிய வீரரச செந்தூரத்தை இவ்வுலகிலுள்ள எல்லோர்க்கும் உதவ வேதை மார்கத்துக்காக விவரமாக கூறுகிறேன்.

(412) பத்துபலம் வீரத்துக்கு தண்டவாளப் பொடி ஒரு பலம் சேர்த்து இரண்டு சாமம் அரைத்து வைத்துவிட இரசம் கக்கிவிடும். சட்டியில் உப்பினை இட்டு அதன் நடுவில் இரசத்தினை வைத்து மேல்சட்டி மூடி சீலைமண் செய்து எரிக்கவும்.

(413) நூறுநாழிகை கமலாக்கினியாக எரிக்க தந்தம்போல மேல்சட்டியில் பதங்கமாகி இருக்கும். அதனை மயிர்க்குச்சியினால் சுரண்டி எடுத்துக் கொள்ளவும். பிறகு வெடியுப்பு திராவகத்தை தயார் செய்யவும்.

(414-415) வெடியுப்பு பத்துபலம், சீனம் இருபத்தைந்து பலம் எடுத்து இரண்டையும் நன்கு பொடித்து ஒரு பானையில் அரைவாசி இருக்கும் அளவு போடவும். வாலையினால் மூடி எரிக்கவரும் முதல்நீரை விட்டுவிட்டு சிவந்த நீர்வருவதை பிடித்து வைத்துக் கொள்ளவும். இந்த நீர்க்கு அண்டநீர், வாலைநீர், வாய்நீர், குமரிநீர், ஆகாயகங்கை என்று பலபெயர்களுண்டு. ஒரு பீங்கான் பாத்திரத்தில் வீரரச பற்பத்தைவிட்டு அதில் வேண்டிய அளவு வெடியுப்பு திராவகத்தை விடவேண்டும்.

(416) இம்மருந்தை உமி அனலில் வைத்து வறுக்க வேண்டும் பிறகு சட்டியில் முன்சொன்ன உப்பை இட்டு குழிசெய்து நடுவில் இரசத்தை வைத்து மேல்சட்டி மூடி ஏழுசீலைமண் செய்யவும். நான்கு சாமம் எரிக்க அடியில் முருக்கம்பூ போல இருக்கும். இதற்கு பத்திலொன்று தங்கம் சேர்த்துக் கொள்ளவும்.

(417) முன் தங்கத்தை தகடடித்து கரியோட்டில் வைத்து நன்கு பழுக்கக் காய்ச்சி கற்காவியை எலுமிச்சம் பழச்சாறு விட்டு அரைத்த குழம்பில் தோய்க்கவும். ஏழுமுறை இவ்வாறு செய்யவும். ஒரு பலம் நாகத்தை இலுப்பை நெய்யில் இருபத்தி ஒருமுறை உருக்கி சாய்க்கவும். இவ்வாறு சுத்தி செய்ததுடன் இருபதுக்கு ஒரு பங்கு முன்பு செய்த தங்கத்தை சேர்க்க நாகம் கட்டிப்போகும்.

(418) கட்டிய நாகத்திற்கு சமமாக தங்கத்தினை தர வெள்ளியாகிப் போகும். இதற்கு பத்துபங்கு வீரசெந்தூரத்தை திராவகம் விட்டு வறுத்துக் கொள்ளவும். அதனை சட்டியில் உப்பின் நடுவில் வைத்து மேல்மூடி வைத்து சீலைமண் செய்து எரிக்க சிந்தூரமாகும்.

(419) இந்த செந்தூரத்தின் மகிமையை ரிஷிகள், தேவர்கள், பதினெட்டு சித்தர்களும் கூற:மாட்டார்கள். ஆனாலும் உலக நன்மைக்காக நான் வெளியில் கூறுகின்றேன்.

(420) செம்பு நூறுசேர் எடுத்து உருக்கிக் கொண்டு அதில் ஒரு சேர் இந்த செந்தூரத்தை கூடப்போட சிவன்மேல் ஆணையாக செம்பு பத்து மாற்றுள்ள தங்கமாகும். பெண்ணாசை, கள்-சாராயம், இவற்றை விலக்கவும். இல்லாவிட்டால் தங்கம் எளிதில் கிட்டாது.

(421-422) இந்த நூலை பார்த்தால் தடையில்லாமல் சிறுபிள்ளைகூட நந்தி மேல் ஆணையாக தங்கம் செய்துவிட முடியும். இந்த வீரரச செந்தூரத்தை பணவெடை பாலிற்கொள்ள என்றும் இளமையுடன் இருக்கலாம். இந்த செந்தூரத்தினால் வேதை மார்க்கமும், காயசித்தியும் கிடைக்கும். பொன் எளிதில் கிட்டும். பொருள் தேடி வரும்.

(423) சிலவாதிமார்கள் வீரத்துக்கு இலைதழைகளால் சுருக்கிட்டு சுண்ணத்தில் வைத்து எரித்து சிந்தூரம் செய்ய புடமிட்டால் வீரம் ஓடிவிடும். அதனால் மருந்து கிடைக்காமல் ஏங்கி ஏங்கி அலைவார்கள்.

(424) வீரத்தை வைத்து செந்தூரம் செய்தால் வேதை மார்க்கம் எளிதில் கைகூடும். நோய்கள் அனைத்தும் தீரும். காயசித்தி நொடியில் ஆகும். இந்த செந்தூரத்தை செய்து உடன் தராமல் பல நாட்கள் வைத்திருந்து நோயாளிக்கு தரவேண்டும்.

(425) வாதிகளில் சிலர் பதைபதைத்து செய்வதும், சிலர் இலைதழைகளில் செய்தும், சிலர் வழலையில் செய்தும், சிலர் வகையறியாமல் செய்தும் கெட்டுப்போனார்கள்.

(426) கெட்டுப்போகாமல் வீரத்தை செந்தூரம் செய்துண்ண உடல் தங்கம் போலாகும். உதாசீனப்படுத்தி தள்ளிவிட வேண்டாம். உறுதியாய் கருத்துவைத்து செய்தால் வேதை மார்க்கத்தில் வெற்றியுண்டு. புத்தி தெளிவுறும் ஞானம் கிட்டும்.

(427) வீரரசசெந்தூரத்தை பணவெடை ஒரு மண்டலம் உட்கொண்டால் காயசித்தியாகும். இம்மருந்துண்ணும்பொழுது புளி கடுகு, எருமை மோர் பெண்போகம் ஆகியவற்றை நீக்கவேண்டும்.

(428) பத்துபலம் லிங்கத்தை கல்வத்திலிட்டு வெடியுப்பு திராவகத்தால் இரண்டு சாமம் அரைத்து பீங்கான் பாத்திரத்திலிட்டு நெருப்பில் வறுத்து எடுத்துக் கொள்ளவும்.

(429) இரண்டு பானைகளை வாய்மட்டம் சரியாக இருக்கும்படி உராய்ந்து லிங்கத்தை அதனுள்போட்டு ஏழுசீலைமண் செய்யவும். நான்கு சாமம் எரிக்க கரியாக மேலேறி நிற்கும். விரலினால் தேய்க்க இரசம் விழும்.

(430) முன்மருந்தில் கால்பாகம் கரியாகவே இருக்கும். அதனை முன்போலவே திராவகம்விட்டு அரைத்து முன்போலவே பானையிலிட்டு எரிக்க கறுப்பாக பதங்கமாக ஏறியிருக்கும். அதனை தேய்க்க இரசமாகும்.

(431) முழுவதும் ரசமாகிவிடும் இல்லையென்றால் மீதியுள்ள கரியை முன்போலவே எரிக்க இரசமாகும். இதுவே வாலை இரசமாகும்.

(432) இந்த லிங்க இரசத்தை சட்டியில் கட்டிய உப்பிற்கு நடுவில் வைத்து மேல்மூடி வைத்து ஏழுசீலைமண்செய்து நூறுநாழிகை எரித்திட பதங்கமாகும். அதனை மயிர்க்குச்சியில் வழித்து எடுக்கவும்.

(433) லிங்க இரசத்தினை திராவகம் விட்டு அரைத்து உமி நெருப்பில் வறுக்கவும். பிறகு முன்போல சட்டியில் உப்பிட்டு நூறு நாழிகை எரித்தால் மேலேறி செந்தூரமாகி இருக்கும்.

(434) இவ்வாறு செந்தூரம் மேலே ஏற ஏற செந்தூரத்தை மீண்டும் முன்போல் திராவகம் விட்டு எரிக்கவும். முடிவில் அடியில் நிற்கும். செம்பு நூறு சேருக்கு ஒரு சேர் இந்த செந்தூரத்தை தர அனைத்தும் எட்டரை மாற்றாகும். இந்த சிவசொத்தை வைத்து பிழைத்துக் கொள்ளவும்.

(435) உப்பை கடல்நீர்விட்டு காய்ச்சி மருந்துகள் செய்தால் பாஷாணங்களும், காராசாரங்களும் கட்டாகும். வேதையாகும் இந்த முறையை செய்து பார்க்கவும். அனைத்தும் சுண்ணமாகும் இது வழக்கத்திலில்லாது.

(436) ஒரு களங்கிற்கு சொன்ன மார்க்கம் அனைத்து களங்குகளுக்கும் ஆகும். இதுபோலவே ஒரு சிந்தூரத்துக்கு சொன்னதும், ஒரு சுண்ணத்துக்கு சொன்னதும் அனைத்து சிந்தூரங்களுக்கும், சுண்ணங்களுக்கும் ஆகும்.

(437) வெறும்பேச்சு பேசாமல் இந்த நூலில் கூறிய முறைகளை கருத்து வைத்து செய்து பார்க்கவும். முன்பாகங்களில் சொன்ன கல்லுப்பு மிகவும் வேகமானது. அதை குறித்துக்கொண்டு கைபாகமாக செய்தால் வேதை மார்க்கம் எளிதாகும்.

(438) இந்த நூலில் அயச்செம்பு, உப்பு மார்க்கம், சவுக்காரச்சுண்ணம், வீரசெந்தூரம், லிங்க செந்தூரம், கட்டுவகை மார்க்கம் ஆகியவற்றை கூறினேன். இதனை முறையாக கற்றால்தான் அனைத்தும் கிடைக்கும்.

(439) இந்த நூலினை ஆதிமுதல் அந்தம்வரை பார்க்க எல்லாம் தோன்றும். கலக்கமாக நின்று கொண்டிருந்தால் எதுவும் தோணாது. ஆணவத்தை விட்டு விட்டு சிந்தூரம் செய்து உண்ணவும்.

(440) செந்தூரத்தை உண்ண உடல்கற்றூண் போலாகும். பலகாலம் தேகம் அழியாமல் இருக்கும். மலையில் குடியிருந்து பாகம் தப்பாமற் செய்து பார்க்கவும். இந்த நூலின் வரிசை தப்பினால் பாகம தப்பும்.

(441) ஒரு முறை தப்பினால் மீண்டும் செய்ய மூன்றாம் முறையிற் பாகம் சரியாய் விடும். மதம் பிடித்து திரியாமல் இருக்க வேண்டும். கலங்கிப்போய் வேதை மார்க்கம் பொய்யென்று எண்ணிவிடாதே. குறிப்பாக இருந்து செய்தால் வாதம் கிட்டும்.

(442) கல்லுப்பைக் கட்டினால் வாதம் எளிதாக அமையும். இந்த வழி தப்பினால் எல்லாம் தொலைந்து போகும். கடினம் என்று இந்த வழி நடக்காமல்

இருந்துவிடக் கூடாது. நீதியுடன் நடந்தால் எல்லாம் நம்புவார்கள். வேதம் சொன்ன புத்தி மார்க்கத்தில் நடந்தால் சித்தியாகும்.

(443) இந்த ஆயிரம் பாடல்கொண்ட நூலில் செம்பு வகை அனைத்தையும் கூறிவிட்டேன் இறுதியாக இன்னொரு செம்பு மார்க்கத்தை கூறுகின்றேன். பாகத்துடன் செய்வாயாக. என்னைப்போல் தெளிவாக யாரும் கூறமாட்டார்கள். இதன்படி செய்தால் எல்லாம் சித்தியாகும்.

(444) - (448) அரப்பொடி பத்துபலத்தையும் வெங்காரம் பத்துபலத்தையும் எடுத்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு அரைத்து அரைத்து ஐந்து முறை புடமிடவும். இறுதியில் வெங்காரம் பாதி அளவு சேர்த்து எரித்திட கறுப்பாகும். கருப்பாகிவிட்டது என்று எண்ணிவிடாதே இதனால் தங்கம் கிடைக்கும். இதனை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். கெந்தகத்தினால் செம்பைக் கொன்று செவ்வல்லி பூச்சாறுவிட்டு அரைத்து உருண்டை செய்து காயவைக்கவும். இந்த உருண்டைக்கு முன்பு கூறிய அயத்தினைக் கவசம்செய்து அதன்மேல் சுண்ணக் கவசம் செய்து அதன்மேல் மீண்டும் மண்கவசம் இட்டு உலர்த்தி கசபுடம் போட கறுப்பாக மருந்து இருக்கும். இதற்க பாதி வெங்காரம் சேர்த்து மூசையில் இட்டு உருக்கிப்போட மணிபோல உருகும். வெங்காரத்தினை மீண்டும் மீண்டும் பாதிஅளவு சேர்த்து ஊதி எடுக்க பொன்போல ஆடும். இச்செம்பை வெள்ளியில் பத்துக்கு ஒன்று தர ஏழுமாற்று ஆகும். இந்த பொன்னைவிற்றுக்கொண்டும் செந்தூரம் செய்து உண்டுகொண்டும் வீணாக அலையாமல் குபேரனைப்போல் வாழவும். பூத்தால்தான் தாழம்பூ வாசம் வீசும். அதுபோல் செய்தால்தான் வாதவித்தை கைகூடும்.

(449) - (451) அயம் பத்துபலம் வீரம் இரண்டரை பலம் எடுத்து கல்வத்திலிட்டு காட்டாமணக்குப் பால்விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து இலகுபுடம் போட்டு எடுக்கவும். இதனை செம்புக்கரியுடன் சேர்த்து உருக்கிட பாகம் கிட்டும். அயத்தைக் கொன்றுவிட்டால் கிடைக்கும் சிவந்த செம்பினால் தங்கம் விளையும். இச்செம்பை வாதம் செய்து பார்க்கவேண்டும். மித்துருவினால் எல்லாம் கிடைக்கும். கன்றைவிட்டு விட்டு பால்கறந்து குடிப்பதுபோல அயத்தையும் செம்பையும் ஒன்றோடு ஒன்று சேர்க்கவேண்டும். அயத்தை முதலில் பார்த்தால் பிழைப்பு கிட்டும். சீவனம் எளிதாகும். செலவுக்குப் பணம் வந்து சேரும். உலகத்தில் வாழ்வு உண்டாகும். குணம் கிடைக்கும். இம்முறையை ஒருவரிடமும் சொல்லாமல் பலநூல்களை கற்றுணர்ந்தால் புத்தி உண்டாகும்.

(452) அரப்பொடி பத்து பலமும் கெந்தகம் பத்து பலமும் எடுத்து கல்வத்திலிட்டு செவ்வல்லி பழச்சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து புடத்தை போட்டு எடுத்துப்பார்க்க கரிபோல் இருக்கும். இதனை மூசையிலிட்டு உருக்கி தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(453-454) அயவுருக்கையும், செம்புக்கரியையும் சம அளவு எடுத்து செவ்வல்லிப் பூச்சாறுவிட்டு அரைத்து புடமிட கரியாக இருக்கும். இதனுடன்

வெங்காரம் சேர்த்து உருக்கி எடுக்க சூரியன்போல் சிவந்து காணப்படும். இதனை வெள்ளியில் பத்துக்கும் சம எடையாக தர தங்கமாகும். இதனை செலவுக்கும் வைத்துக் கொண்டு சிறிது செந்தூரமும் செய்து உண்ணவும். நவலோகங்களும் எட்டி ஓடும். தங்கம் எளிதிலாகும். செம்பில் கரியெடுக்கும் முறையை சொல்லிவிட்டேன். செம்புடன் இரும்பைக் கரியாகச் செய்து ஒன்றாகச் சேர்த்துப் புடமிடவும்.

(455) புடமிட்டு அதை எடுத்து உருக்க செம்பாகும். கொல்லுவதற்கு முன்பு சொன்னதை கருத்தாக இருந்து தேறவும். இரும்பைக் கொல்லவும். முறையை கூறிவிட்டேன். இரண்டையும் சேர்க்க வாதவித்தை எளிதிலாகும்.

(456) கருத்துக்களை முன் பின்னாகச் கூறியுள்ளேன். அதை முறையாக அறிந்தால் தங்கமாகும். பாகத்துடன் செய்ய பொன்னாகும். ஒருவரிடமும் சொல்ல வேண்டாம். குணம்கெட்டு திரிய வேண்டாம். மமதையுடன் இருக்க வேண்டாம். மமதையுடன் இருந்தால் அரசரால் துன்பம் விளையும்.

(457) தில்லுமுன்னு சொய்யாமல் ஒருவரிடமும் பேசாமல் அயத்தில் வேதையை செய்யவும் அயத்தில் பலனைப் பெற்று வாழ்க்கையை நடத்து. வாழ்க்கைக்கு அயம் பலத்தைத்தரும். வீணாகத்திரியாமல் நூலைப்பார்த்து செய்தால் எல்லாம் கிட்டும்.

(458) ரோமம் ஐம்பது பலத்தை எடுத்து சியக்காய் கியாழத்தில் கொதிக்கப்போட்டு எடுக்க சுத்தியாகும். அதனை உலர்த்தி அயச்சட்டியில் இட்டு பத்துபலம் அயத்தூளை சேர்த்து நல்லெண்ணை விடவும்.

(459) சட்டியினை அடுப்பில் வைத்து எரிக்கவும். மெல்ல மெல்ல புரட்டிவர ரோமத்தின் தைலத்தை அயம் இழுத்துக்கொண்டு கரியாகிப்போகும். இந்த கரியை எல்லாம். எடுத்துக்கொண்டு செம்புக்கரி சமஅளவு வெங்காரம் பாதியும் சேர்க்கவும்.

(460) அதனை கல்வத்திலிட்டு செவ்வல்லிச் சாறுவிட்டு அரைத்து புடமிட்டு எடுத்து குகையிலிட்டு உருக்க கறுப்பாக இருக்கும். இதனை மீண்டும் வெங்காரம் சேர்த்து மூரையில் இட்டு ஊத சூரியன்போல் சிவந்த செம்பு கிடைக்கும்.

(461) இந்த செம்பை நொறுக்கு வெள்ளி எட்டுக்கு ஒன்று தர ஏழுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும். அதனைச் செந்தூரம் செய்து நூற்றுக்கு ஒன்று கொடுத்தால் தங்கமாகும். கூட்டம்கூடி பேசினால் ஒன்றும் ஆகாது. உறுதியாக இருந்து வகாரத்தைப் பார்க்கவும்.

(462) அயமானது செம்பைக் கொடுக்காவிட்டால் வெங்காரத்தை கொடுத்து ஊத செம்பு கிடைக்கும். காரம் கொடுக்காவிட்டால் செயமில்லை. வெங்காரம் எல்லாவற்றையும் வடிவாக உருக்கும்.

(463) திறமையான வாதி என்றால் வெங்காரத்தை கொடுத்து ஊதினால் செம்பு கிடைக்கும். வெங்காரம் அயத்தைக் கொன்று தவிடுபொடியாக்கும்.

முறையாகச் செய்தால் வாதமாகும். பேய்த்தனமாக அலையாமல் கருத்தாக இருந்து செய்யவேண்டும். இதுபோல் செம்பையும் கொல்லவும்.

(464) செம்பைக் கொன்றால் தங்கம் கிடைக்கும். முறையாகக் கண்டுகொண்டால் பசும்பொன் கிடைக்கும். பசுவிடம் கன்றைவிட்டு பால்கறந்தாற்போல வேதைமார்க்கம் சித்தியாகும். உழைத்தால் எல்லா சித்தும் கிடைக்கும்.

(465) முயற்சிசெய்தால் வேதைமார்க்கம் எளிதாகும். இனிமையாக முடியும். முதலில் சிறிதளவு பொன் போட்டால் தான் பொன்கிடைக்கும். பொன் போடாவிட்டால் பொன் கிடைக்காமல் பொரிந்துபோகும். உண்மையாக கடைசியில் கூறினேன். உன்னிடத்தை சரக்குகளை வைத்துக்கொண்டு சோதிக்கவேண்டாம்.

(466) பொய்வாதிகள் செம்பை பார்க்கமாட்டார்கள் வேதை மார்க்கத்தில்தான் செம்புகளிம்பு நீங்கும். போதித்தால்தான் மந்திரம் புரியும். இல்லையெனில் பொருள்தெரியாமல் பைத்தியம் பிடிக்கும். சாதித்தால் யோகசித்தி காயசித்தி எல்லாம் கிடைக்கும்.

(467) செம்பு காந்தியில்லாமல் இருந்தால் உள்ளுக்குச் சென்ற பழுக்காது புடத்திற்கு இறங்காது. களிம்பு நிற்கும். கசடினால் பொரிந்து போகும். வர்ணம் கொடுக்காது. வேலைக்கு ஒத்துவராது.

(468) நன்மையுடவர்கள் உறுதியாக இருந்து முடித்துக் கொள்வார்கள் நன்மையில்லாதவர்கள் குணமில்லை என்று ஒதுங்கி விடுவார்கள். நில முள்ளவர்களே வீட்டினைக் கட்டுவார்கள். நிலமில்லாதவர்களுக்கு வேலை கிடையாது. கலத்தினைப் பெற்றவர்கள் ஒன்றும் செய்யமாட்டார்கள். கலத்தினை பெறாதவர்கள் செய்து பார்ப்பார்கள். இடமுள்ளவர்கள் அவ்விடத்தில் மட்டுமே வசிப்பார்கள். இடமில்லாதவர்கள் உலகெல்லாம் அலைவார்கள்.

(469) இந்த நூலில் உப்புக்கட்டு, செந்தூரம், அயச்செம்பு, திராவகம், லிங்க இரசபற்பம் ஆகியவற்றை கூறியுள்ளேன். இறந்து போகாமல் இருக்க மருந்துகளை செய்து உண்ண கூறினேன். இவ்வுலகில் திரிந்து சுற்ற வேதை மார்க்கம் கிட்டும்.

(470) சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி விசுவினிக்கும், விசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், வாத வித்தைகளை முறையே கூறினர்.

(471) தேரர் யூகிமுனிக்கும் வாதவித்தையை கூற, யூகிமுனியாகிய நான். உலகத்திலுள்ளவர்கள் பிழைத்துக் கொள்ள வாதம் வைத்தியம் ஆகியவற்றைக் கூறினேன். கருணை வைத்துப் பார்த்தால் எல்லாம் சித்தியாகும். சூட்சுமங்கள் இல்லாத என்னூலைப் பார்த்து வாதவித்தையை செய்வாயாக.

(472) அகத்தியர் கூறிய களங்கு ஒன்றை கூறுகின்றேன். பத்துபலம் அரப்பொடி, பத்துபலம் செம்புப்பொடி, ஏழரைபலம் கெந்தகம், ஐந்துபலம் வீரம், இரண்டரை பலம் சூடன் ஆகியவற்றை கல்வத்திலிட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டுவிட்டு அரைக்கவும்.

(473) அகத்தியரை தொழுது ஒரு சாமம் ஆட்டி வில்லைதட்டி சூாய ஒளியில் காயவைக்கவும். பிறகு அதன்மேல் சுண்ணாம்புக் கவசம் செய்து பிறகு அதன்மேலே மண்கவசத்தை இட்டு உலர்த்தி பத்து எருவில் புடமிடவும். ஆறினபின் எடுக்க மருந்து கரிபோல் இருக்கும். இதற்கு சமனாய் வெங்காரம் எடுத்துக் கொள்ளவும்.

(474) வெங்காரத்தைப் பொரித்து ஒருசாமம் அரைத்து உருண்டை செய்து வெயிலில் வைத்து மூசையில் இட்டு நன்கு உருக்க செம்பு கிடைக்கும். காரமிட்டு மீண்டும் மீண்டும் உருக்க செம்பாகும்.

(475) சூரியன்போல் செம்பு கிடைக்கும். வெள்ளியில் பத்துக்கு ஒன்றுதர ஏழு மாற்றுள்ள தங்கம் கிடைக்கும். காவிக்கு நன்கு இறங்கும். கருத்துடன் அதனை செந்தூரம் செய்து உண்ண வேண்டும். உடல் திடமாகும்.

(476) முதலில் தங்கம் ஒருபங்கு நாகம் ஒருபங்கு இரண்டையும் சமனாகச்சேர்த்து உருக்கிக் கொண்டு அதனுடன் நான்கு பங்கு அயச்செம்பினை சேர்த்து உருக்கிக் கொள்ளவும். பிறகு அதனை எடுத்து கல்வத்திலிட்டு உடைத்துக் கொள்ளவும்.

(477) கெந்தகம் பத்துபலம், இரசம் பத்துபலம், இரண்டையும் சட்டியில் இட்டு உருக்கும் பொழுது தாளகம் நாலில் ஒன்று சேர்த்து நன்கு அயக்கரண்டியினால் கிண்டவும். சிந்தூரம் முருக்கம்பூபோல சிவந்து காணப்படும்.

(478-480) இந்த செந்தூரம் பத்துபலம், செம்பு, நாகம், தங்கம் சேர்ந்த களங்கு பத்துபலம் இரண்டையும் சேர்த்து திராவகத்தால் அரைத்து பார்க்க முருக்கம்பூபோல இருக்கும். இதனை வறுத்துக் கொண்டு சட்டியில் முன்பு கூறிய உப்பினை வைத்து எரிக்கவும். 12 சாமம் எரிக்க சிந்தூரமாகும். இதனை நவலோகம் நூற்றுக்கு ஒன்று தர பத்து மாற்றாகும். உப்புக்கும் காவிக்கும் நிற்கும் தரமுடையதாகி இருக்கும். நவலோகமும் பொன்னாகும். இச்செந்தூரத்தை ஒரு குன்றிஅளவு ஒரு மண்டலம் உண்ண மேனிசட்டை கக்கும். உடலில் கஸ்தூரி வாசம் வீசும், தேகத்தில் ஒளி வீசும், விந்து கீழே விழாது. அயத்தினால் எல்லாமாகும். இவ்வித்தையை எவருக்கும் சொல்ல வேண்டாம்.

(481) இரசவாதிகளே களங்கு செந்தூரம், உருக்கினங்கள் ஆகியவற்றுக்கு, ஒரு முறைக்கு கூறியதுபோலவே எல்லாவற்றுக்கும் செய்யவும். மாறுபட்டு செய்தால் எல்லாம் அழிந்து போகும்.

(482) நூல்களில் பெரியோர்கள் கூறியது எல்லாம் நம்முடைய புத்திக்குத்தான். எனவே பொறுமையுடன் செய்ய வேண்டும். தேரர் எனக்கு கூறிய வெடியுப்புச் சுண்ண மார்க்கத்தைக் கூறுகிறேன், கேட்பாயாக.

(483-484) வெடியுப்பால் வேதையும், சீனத்தால் கட்டும், சாரத்தால் செயநீரும், கெந்தகத்தால் சிந்தூரமும் அயத்தினால் செம்பும் கல்லுப்பினால் கட்டும் பாஷாணத்தால் வெள்ளியும் சாத்தியமாகும். வெடியுப்பு சுண்ணமானால் அண்டரண்டம் துளைத்து ஆடும். சரக்கு எல்லாம் கட்டிப்போகும். லோகம் எல்லாம் செத்துப்போகும். பூநீறு சுண்ணமாகும் வாதம் சித்தியாகும்.

(485-487) வெடியுப்புச் சுண்ண செய்முறையை கூறுகின்றேன். வெடியுப்பு எட்டுபங்கு, சீனம் இரண்டு பங்கு, நவச்சாரம் இரண்டுபங்கு, இவற்றை நன்கு பொடியாக்கி, எலுமிச்சம்பழத்தோல் நான்கு பங்கு கூடப் போட்டு உரலில் வைத்து இடித்து வில்லை தட்டவும். வில்லையை நன்கு வெயிலில் காயவைத்து சட்டியில் இட்டு எரிக்கவும். சுண்ணமாகிவிடும்.

(488) இதனைப் பனியில்வைக்க ஆறுபோல் செயநீர் பெருகிவிடும். அதனைப் பீங்கானில் சேகரித்துக் கொள்ளவும்.

(489) ஒரு சேர் படிகாரத்தை சட்டியிலிட்டு பொரித்து, வெடியுப்பு சுண்ணம் சமமாக சேர்த்து அரைத்து வில்லைதட்டி காயவைக்கவும்.

(490) வெயிலில் காய்ந்தபின் புடம்போட சுண்ணமாகும். சுண்ணத்துக்கு கால்பங்கு சாரம் சேர்த்து அரைத்து பனியில் வைக்க செயநீர் பெருகும்.

(491-492) இந்த செயநீரினை ஒருசேர் வெடியுப்பில் இட்டு அரைத்து கரியோட்டில் வைத்து ஊத கடுஞ்சுண்ணமாகும். இதில் மேலும் வெடியுப்பு சேர்த்து முன்போல் ஊதவும் இவ்வாறு பத்துமுறை ஊதி எடுக்கவும்.

(493) இதனைப் பனியில் வைக்க இரவில் சந்திரன் ஒளிபட செயநீராகும். இதனைத் தனியே பத்திரப்படுத்தவும்.

(494) இந்த நீரில் உறுதியாக உப்பும் வெடியுப்பும் கட்டும். யூகிமுனி கூறிய இந்த முறை பொய்யாகாது.

(495) நந்தீசர் எனக்குக் கூறியதுபோல் துரிசை இந்த செயநீரில் துவைத்து வெயிலில்போட நீறிப்போகும். அதுபோலவே சாரத்தை இந்த செயநீரில் துவைத்து வெயிலில் போடவும்.

(496) இந்த சாரத்தை கற்சுண்ணம் நடுவில் வைத்து எரிக்க சாரம்கட்டி உருகி நின்றுவிடும்.

(497-498) நாகத்தை உருக்கி உருக்கு முகத்தில் இந்த சாரத்தினை இட நாகம் கட்டி கரியில் நின்று ஆடும். புகையடங்கி கட்டிப் போகும். இப்படிக் கட்டியதை செம்புக்கு மத்தில் ஒன்று தர பழுத்துவிடும்.

(499) இந்த நாகத்தினால் செம்பு பழுத்துவிடும். உப்புக்கும் காவிக்கும் உருகி புடமிறங்கும். இதனை செய்து ஞானத்திலும் யோகத்திலும் நிற்கவும்.

(500-510) கல்லுப்பை கட்டும் மார்க்கத்தை கூறுகின்றேன். யூகிமுனி காட்டின வேதையாகும். உப்பினை கடல்நீரினால் காய்ச்சிட கட்டிப்போகும். கல்லுப்பை கடல்நீரில் கரைத்து மெதுவாக நான்கு சாமம் எரிக்க நீர்வற்றி உப்பு கிடைக்கும். இதனை வெடியுப்பு செயநீரில் தோய்த்து எட்டுநாள் வெயிலில் வைத்து கற்சுண்ணத்துள் வைத்து எரிக்க தந்தம்போல் இறுகிக் காணும். இதற்கு சமமாக ரசபதங்கத்தை சேர்த்து வெடியுப்பு செயநீரால் அரைத்து உருண்டை செய்து கொள்ளவும். இதனை முன்பு செய்த உப்பை சட்டியில் கொட்டி நடுவில் உருண்டையை வைத்து மேல்சட்டி கொண்டு மூடி ஏழு சீலைமண் செய்யவும். இதனை அடுப்பிலேற்றி நூறு நாழிகை எரிக்க கட்டிப்போகும். இதனை கரியில் வைத்து உருக்க பொன் போல ஆகும். இதனை செம்பில் நூற்றுக்கு ஒன்று தர பத்து மாற்றுள்ளதாகும். இதுவே சிவசொத்தாகும். யூகிமுனி சொன்ன இந்த வித்தையை புத்தியுடன் செய்து கொள்ளவும். இந்த உப்பின் மகிமையை யாராலும் கூற முடியாது. தவறில்லாமல் நான் கூறியுள்ளேன். செம்பினால் வேதை கோடியாகும்.

(511-512) துருசு ஒரு பலத்தை எடுத்து கரியில் வைத்து ஊத நீறிப்போகும். அதனை வெடியுப்பு செயநீரில் தோய்த்து வெயிலில் வைக்கவும். எட்டு நாள் இப்படி வைக்கவும்.

(513) வங்கம் ஒருபலத்தை கல்வத்திலிட்டு வெடியுப்பு செயநீரால் அரைத்து கரியில் வைத்து ஊத கடும் சுண்ணமாகும்.

(514-515) வங்க சுண்ணத்தை துருசின்மேல் கட்டி பத்து எருவில் புடமிட சுண்ணமாகும். நீறிப்போகும். இது மிகுந்த காரத்துடன் இருக்கும். இதனை தேரர் எனக்கு கூறியது நான் வெளிப்படையாக கூறினேன். யூகிமுனி கூறிய இந்த முறை தப்பாது.

(516-519) சாறுவராத தழைகளில் இத்துருசினை இட சாறுவரும். அயக்கரண்டியில் இச்சாற்றினை விட்டு அதில் இரசத்தையும் விட்டுக் காய்ச்ச இரசம் இட்டலி போலாகும். அதனை எடுத்து உருண்டை செய்து கொண்டு எலுமிச்சம் பழத்துள் வைத்து பத்துபுடம் இட மணியாகும். நல்ல கட்டாகும். இதனால் ககனம் சாத்தியமாகும். இந்த இரசமணியால் மாலை செய்து உரு செபிக்க எண்வகை சித்துக்களும் கைகூடும். நாற்பத்து முக்கோணமும் சித்தி அஷ்ட கர்மமும் கைகூடும்.

(520-524) இந்த இரசக்கட்டு நாலுபங்கு எடுத்து உருக்கிக் கொண்டு உருக்கு முகத்தில் தங்கம் ஒரு பங்கு, நாகம் ஒரு பங்கு, சேர்த்து உருக்கவும். இதனை செம்பில் நூற்றுக்கு ஒன்று தர பத்து மாற்றாகும். வீணான வாதிகள் இதைச் செய்யாமல் வீணாக புலம்பி அலைந்து திரிவார்கள். யோகம் ஞானம் இவற்றினை

செய்து சிதம்பரத்தை நாடவேண்டும். நல்ல ஆண்மையும், வாத வித்தையும் சித்தியாகும். புத்திக்கூர்மையும் மனதை ஒரு நிலைப்படுத்தி பரம்பொருளை துதித்து வழி தேட்க முறையாகச் சொல்வார். புத்தியாக இருந்து பாகத்துடன் செய்ய முடிவு நலமுடன் இருக்கும். குருமருந்தை தாக்கினால்தான் வாதம் கைகூடும்.

(525) உப்பைக்கட்டி வாதி என்றால் உப்பைக் கட்ட வேண்டும். அவ்வாறு உப்பை சட்டியிலிட்டு அதன்மேல் பாஷாணத்தை வைத்து எரிக்க பாஷாணம் கட்டிப்போகும். இம்முறையில் தங்கம் வந்து சேரும்.

(526) முதலில் வெடியுப்பையும் படிகாரத்தையும் தனித்தனியே சுண்ணம் செய்து பிறகு அச்சுண்ணம் இரண்டையும் சேர்த்து அரைத்து சுண்ணம் செய்யவும். அதனால் பாஷாணத்தைக் கட்டினால் தங்கம் எளிதில் அமையும். சகலசித்தும் கிடைக்கும். முறைதப்பினால் பாகம் தப்பாகும்.

(527) சூட்சுமமாய் எல்லாவற்றையும் சித்தர்கள் மறைத்தார்கள். புளியென்று மறைத்ததால் ஆச்சரியமாக இவ்வெடியுப்பு பூக்காது. இரசவாதிகள் இதனை அறியாமல் கெட்டலைந்து புலம்பித் திரிவார்கள். இடுப்பிலே பிள்ளையை வைத்துக் கொண்டு மற்ற எல்லா இடத்திலும் தேடியது போல வீணாக அலைவார்கள்.

(528) வெடியுப்புச் சுண்ணம் செய்ய வந்த இடத்தில் எல்லாம் புளியைச் சேர்க்க வேண்டும். இங்கு புளி என்பது படிகாரமும் எலுமிச்சம் பழத்தோலுமாகும். இப்புளியானது சேரவில்லை என்றால் வெடியுப்பு சுண்ணமாகாது.

(529) வீணாகச்சுட்டலையும் இரசவாதிகள் மலத்தை புளியென்றும் மூத்திரத்தை அமுரி என்றும் வேறு அர்த்தம் கொள்வார்கள். உண்மையான அமுரிக்கு அர்த்தம் கண்டு அதனை வெடியுப்புடன் சேர்த்து அரைத்து புடமிட சுண்ணம் ஆகும்.

(530) வீணாக அலையாமல் இருக்க அமுரியின் மறைப்பையும் புளியின் மறைப்பையும் தெளிவாக எல்லோருக்கும் புரியும்படி கூறியுள்ளேன். செந்தூர செய்முறைகளை கூறியுள்ளேன். இவற்றை முறையாகச் செய்தால் பலன் கிட்டும். சிலைபோல இருப்பதால் என்ன லாபம்?

(531) உலகத்திலுள்ள வாதிகளே பிறர் பேச்சைக் கேட்காமல் நூல்களைப் பார்க்கவும். முட்டாளாக இருந்து விடாமல் புத்தியுடன் செம்பைக் கொன்றுவிட்டால் கோடி பொருள் கிடைக்கும். இதை விட்டு விட்டு நாடெல்லாம் அலைந்தால் வாதம் சித்தியாகுமா?

(532) பருவமடைந்த பெண்ணுடன் கூடினால்தான் இன்பம் கிட்டும். பருவமடையா பெண்ணுடன் கூடினால் என்ன இன்பம் கிட்டும். உணவு உண்டபின்பு பசியடங்குவது போல என்னூலைப் பார்த்து சூட்சுமங்களை அறிந்து கொள்வாயாக.

(533) மண்டபத்தில் சித்திரமாய் இருக்கும் நாயை உண்மை நாயென்று எண்ணி பேசாத அந்த நாயை ஊளையிட்டு வேறு நாய் அழைத்ததுபோல சாத்திரத்தை படித்து அதைச் செய்யாமல் வாதிகள் வீணாக அலைவார்கள்.

(534) வாதம் செய்ய வேண்டுமானால் கல்லுப்பைக் கட்ட வேண்டும். வெடியுப்பைச் சுண்ணம் செய்ய வேண்டும். என் நூலிலுள்ள லிங்க செந்தூரத்தை செய்ய வேண்டும். செம்பை செய்தாயானால் வருத்தப்படாமல் இருக்கலாம். வீணாகத் திரியாமல் அயத்தில் உழைத்துப் பார்க்கவேண்டும்.

(535) மோகமுற்ற பெண்ணைப்போல குறிக்கோளுடன் அலைந்தால் வாதம் சாத்தியமாகும். அயத்தில் உழைத்தாற் போல் செம்பை முதலில் கொல்ல வேண்டும். குருவிடம் கருணை வைத்து என்னூலை ஆராய்ந்து செய்தால் அயச்செம்பு கிடைக்கும்.

(536) இவ்வுலகத்தோர்கள் பிழைக்க இந்நூலில் பரிபாஷைகளை நீக்கி பொருள் தெளிவுறும்படி பாடியுள்ளேன். அதை படித்துச் செய்தால் எல்லாம் சித்தியாகும். உப்பை முதலில் கட்டிக் கொண்டால் வாதவேலைகள் எளிதில் சாத்தியமாகும்.

(537) சித்தி கிடைத்தால்தான் வாதம் கிட்டும் என்று வீணாக புலம்பி அலைவார்கள் மூடவாதிகள். வாதம் சாத்தியமானால் தான் ஞானம் பின்னே தானாக வரும் என்று அவர்களுக்கு நான் உறுதியாக கூறுகிறேன்.

(538) சிலர் ஞானத்தை தேடுகின்றேன் என்ற மடங்களைக் கட்டி அதில் காவி உடை அணிந்து வசிப்பர். யாசித்துப் பிச்சையெடுத்து உண்டு இரவில் பெண்ணைக்கூடி வாழ்வார்கள். அதனால் ஞானம் யோகம் இரண்டும் கைவரப் பெறாமல் வீணாக திரிவார்கள்.

(539) சித்தர்கள் தங்கள் நூல்களில் மறைத்து பாடியதை எல்லாம் என்னூலில் வெளிப்படையாகக் கூறியுள்ளேன். அதனால் எல்லாம் சித்தியாகும். சரக்குகளைக் கட்டி செய்தால் சித்தர்கள் மறைத்ததெல்லாம் நிசமதாகும். வீணாக அலையாமல் என்னூலைப் பார்க்கவும்.

(540) வாதத்தின் பலனைக் கண்டதாலே ஞானம் வந்தது. கடல் நீரினாலும் கடல் நுரையினாலும், கல்லுப்பு கட்டு கிடைத்தது. கல்லுப்பு கட்டினால் லிங்கம் நெருப்புக்கு புகையாமல் கட்டி நின்றது. இவற்றை முறையாக அறிந்தால் செம்பொன்னை பார்க்கலாம்.

(541) உண்மையுடன் உழைத்தால் வாதம் சாத்தியமாகும். அதனை வெளியில் சொன்னால் தோஷமாகும். சேர்க்கின்ற முறையில் சரக்குகளை சேர்த்தால் தங்கம் கிடைக்கும். சாத்திரத்தைப் படித்து அதனை செய்து பார்த்தால் பொன் கிடைக்கும். முறையாகச் செய்தால் சிறுபிள்ளைகூட வாதவேலை செய்து பலனை காணலாம்.

(542-543) இன்னொரு செம்பு மார்க்கத்தை கூறுகிறேன். இருபது பலம் துருசுடன் சமஅளவு வெங்காரத்தை சேர்த்து அரைத்து புடமிட்டு எடுக்கவும். அதன் பிறகு மூசையிலிட்டு உருக்கி எடுத்துக் கொள்ளவும்.

(544-549) இதில் இரண்டரைபலம் எடுத்து தகடாகத்தட்டிக் கொள்ளவும். இதன் எடைக்கு முக்கால்பாகம் கந்தகம், அரைபாகம் சூடன், கால்பாகம் வீரம் ஆகியவற்றை எடுத்து செவ்வல்லிப்பூச்சாறு விட்டு அரைத்து தகட்டிற்கு கவசம் செய்து காயவைக்கவும். அதன்மேல் கற்சுண்ணத்தையும் உப்பையும் சமஅளவு சேர்த்து அரைத்து கவசம் செய்து உலர்த்திப் புடமிடவும். இதனை எடுக்க அதரதராய் விழும். மீதியுள்ள தகட்டில் முன்போல கெந்தகம் சேர்த்து அரைத்துப் பூசி பத்தெருவில் புடமிடவும். அதிலும் நொறுங்காத செம்பை மீண்டும் முன்போல கந்தகத்தை அரைத்துப் பூசி புடமிடவும். கறுத்துப்போகும். அதனை உருக்கி எடுக்கவும்.

(550-552) ஈயம்போல் சத்தாயுருகும் அச்சரக்கை மேலும் வெங்காரம் சேர்த்து உருக்கவும். அதனை எடுத்து அதற்கு சமனாக பழச்சாற்றில் ஊறவைத்து கழுவி எடுத்த அயத்தினை சேர்த்து நான்கு நாழிகை அரைக்கவும். இதனுடன் ஒரு பங்கு காரீயம் சேர்த்து அரைத்து மூசையில் வைத்து உருக்கவும். அதில் தங்கம் ஒரு பங்கு போட்டு மேலும் ஊத உருகி நிற்கும்.

(553 -556) கணபதியை பூசைசெய்து வெள்ளி பத்துக்கொன்று காரீயம் சேர்த்து உருக்கி தகடாக அடித்துக் கொள்ளவும். அதன் எடைக்கு முக்கால்பங்கு கந்தகமும் அரைபங்கு சூடமும் கால்பங்கு வீரமும் சேர்த்து நீர்விட்டரைத்து தகட்டின்மேலே பூசி புடத்தைப் போடவும். இதனை வெங்காரம் சோத்து உருக்க பசும்பொன்போல் உருகி நிற்கும். சோம்பல் படாமல் உருக்கவேண்டும்.

(557 - 561) இந்த வெள்ளி பத்துபங்கும் முன்பு செய்த களங்கு நாலுபங்கும் சேர்த்து ஊத எட்டுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும். இது உப்புக்கும் காவிக்கும் புடமிறங்கி நிற்கும். இப்பொன்னை விற்று செலவுசெய்து ஞானவழியில் நிற்கவும். இதனை செந்தூரம் செய்தால் செம்பில் நூற்றுக்கு ஒன்று இட எல்லாம் தங்கமாகும். செந்தூரம் செய்து உண்டால் காயம் சித்தியாகும். தேகம் இறுகும். இரும்பைப் பார்க்க தங்கமாகும். இரும்பை எளிதென்று எண்ணாமல் செய்தால் இன்பமாக பொன்னாகும்.

(562) உப்பை முறையாக முதலில் செய்தால் சித்தியாகும். கடல் நீரினால் உப்புக் கட்டிப் போகும். அதில் பாஷாணம் முப்பத்து ரெண்டும் கட்டிப்போகும்.

(563-565) முப்பூவை முதலில் செய்யாதே. குருவை முதலில் செய்யத் தோன்றினால் தவறு நேர்ந்திடும். சவுக்காரத்தை செய்து பார்த்து தவிக்க வேண்டாம். யூகிமுனி கூறியபடி பாகம் தவறாமல் செய்ய வாதம் எளிதாகும்.

(566) ரிஷிகளும் தேவர்களும் சித்தர்களும் கூடி உலகில் எல்லோரும் இன்பமயமாயிருக்க நல்வழி காட்டச் சொல்லி யூகிமுனிக்கு ஆசிர்வாதம் செய்தனர்.

(567) உலகத்தில் வாதிகளுக்கு பிழைப்புக்காக வகாரவித்தை காட்டச்சொல்லியும், வைத்தியத்தின் முறைகளையும், வியாதிகளை அறியும் முறைகளையும் வைத்தியர்களுக்கு கற்றுத்தர யூகியை வாழ்த்தி அனுப்பினர்.

(568) என்னை ஆண்ட குருவின் பாதத்தினைத் தொட்டுச் சொல்லுகிறேன். நூல்களில் கறந்த பால்போல தெளிவாகக் கூறியுள்ளேன் விதியிருந்தால் அவன் கண்டு கொள்வான் விருப்பமில்லா வாதிகள் கண்டு. கொள்ள மாட்டார்கள்.

(569 -570) சிவன் தேவிக்கும், தேவி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி விசுவனிக்கும், விசுவனி தன்வந்தரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனியாகிய எனக்குக்கூற, உலகத்திலுள்ள மனிதர்கள் பிழைத்துக் கொள்ள வித்தைகளை கரும்புபோல இந்நூலில் பாடினேன். இந்தநூலை படித்துத்தேற வாதசித்தியாகும். காயசித்தியாகும்.

(571) அயச்செம்பு பாகத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. இது எனக்கு புலத்தியர் மலையுச்சிக்கு கூட்டிப்போய் கைபாகமாக கூறிய பாகமாகும். இந்த செம்பினால் சிவன்மேல் ஆணையாக தங்கம் சாத்தியமாகும்.

(572 -573) பத்துபலம் அயத்தினையும், பத்துபலம் காரீயத்தையும் கல்வத்திலிட்டு கற்றாழஞ் சாற்றில் ஒரு சாமம் அரைத்து வில்லைதட்டி வெயிலில் காயவைக்கவும். இதனை புடமிட்டு எடுத்து மீண்டும் கற்றாழம் பாலால் ஒரு சாமம் அரைத்து புடமிடவும் மொத்தம் மூன்றுபுடம் போட்டு எடுக்க மஞ்சளாக இருக்கும்.

(574 -575) ஏழரை பலம் கந்தகம், ஐந்துபலம் வெடியுப்பு, இரண்டரை பலம் வீரம் ஆகியவற்றை சேர்த்து பழச்சாறுவிட்டு அரைத்து பத்துபலம் செம்புக்கு கவசம்கட்டி வெயிலில் காயவைக்கவும். இதற்கு உப்பையும் கற்சுண்ணத்தையும் சம அளவு எடுத்து அரைத்து கவசம்செய்து அதன்மேல் சீலைமண் செய்து கசபுடம் போட்டு எடுக்கவும். உள்ளே உள்ள செம்பு அதராகி இருக்கும்.

(576) மீதியுள்ள செம்பினை முன்போல கெந்தகத்திளால் கவசம் கட்டி புடமிட கரியாக நொறுங்கும். எல்லா செம்பும் இறந்து போனால் அடுத்த பாகத்தை கேட்பாயாக.

(577) முன்பு செய்த செம்புக்கரி இரண்டு பங்கும் அயக்காரீயக்கரி அதனுடன் நாலில் ஒரு பங்கு சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு சாமம் அரைத்து வில்லைசெய்து காய வைத்து புடமிடவும். அதனை எடுத்து அத்ற்கு சமனெடை வெங்காரம் சேர்த்து உருக்கிட தூய செம்பு கிடைக்கும்.

(578) நொறுக்குவெள்ளி பத்துபலம் எடுத்துக்கொள் அதில் செம்புக் களங்கு இரண்டரை பலம் கொடுத்து ஊத ஏழுமாற்றுள்ள தங்கமாகும். அதனை விற்று சிவயோகத்தை பார்க்கவும். அதனை சிந்தூரம் செய்து உண்டு உடலைக் காக்கவும்.

(579) இரும்பையே முப்பூவென்றும், வழலையென்று பிண்டம் என்றும் கூறியுள்ளார்கள். எனவே வேறெங்கும் அலையாமல் இரும்பைப்பாரு. அயச்செம்பின் வேதையால் எல்லாம் ஆகும். இதுவே ஞானமார்க்கத்திற்கு வழியாகும். இந்த நூலை அறிந்தாலே வாதியாகலாம்.

(580) அறிந்தவன்தான் வாதம் செய்ய ஆசைப்படுவான். அறியாவிட்டால் வாதம் பொய்யென்று கூறியலைவார்கள். எறிந்தால்தான் கல் தூரப்போய் விழும். எறியாவிட்டால் என்ன பயன்? பரிகாசம் செய்தால் நரகமாகும். பார்த்து செய்தால் ஞானம். வாதம் எல்லாம் கைகூடும்.

(581) இந்த உலக வாழ்க்கையை பொய் என்பதனை பாஷாண்டி கூட நினைத்துப் பார்க்க மாட்டான். ஞானத்தைப்பற்றி பேசுவார்கள் ஆனால் சகசாலம் என்னுடைய தென்பார்கள் துடிப்பாக பேசுவார்கள் ஆனால் வெறும் பொய்யாகப் பேசுவார்கள் அயச்செம்பை கண்டு கொள்ள மாட்டான். எனவே சரக்கை முதலில் செய்து ஞானத்தைப் பார்க்கவும்.

(582) அயக்காரீயச் செம்பில் உழைத்தால் கிடைக்கும் தங்கமானது காவிக்கு புடமிடறங்கி நிற்கும். பிழைப்புக்கு வழி கிடைக்கும். தழைத்த மரம்போல புதிதாக வாதவித்தையைப் பார்க்கவும். இந்நூலை இறுதிவரை படித்துப் பார்த்தால் பொன் செய்யலாம்.

(583) செம்பைக் கட்ட வகையைக் கேட்பாயாக. அயம் காரீயம் இரண்டையும் சேர்த்து புடம் போட்டால் மஞ்சளாகும். அதனை செம்பில் சேர்த்தால் செம்பு கட்டும். அதனை முறையாகச் செய்து பார்த்தால் வாதம் சாத்தியாகும். இதை விட்டால் வாதம் பொய்யாகிப் போகும்.

(584) தங்கம், காரீயம், செம்பு, அயம், நாகம் இவைகள் ஐந்தும் பஞ்சபூதங்களாச்சு. இவை சேர்ந்தால் தங்கமாகும். இதை செய்தால் இவ்வுலகில் உனக்கு ஈடு எவருமில்லை. வகைகெட்டுத் திரியாதே. பஞ்ச பூதத்தையும் சேர்த்தாயானால் ஏவல் கேட்கும்.

(585) மூன்று பூதங்களை கேட்பாயாக. அயம், காரீயம், செம்பு ஆகிய மூன்றும் ஆகும். இவற்றுடன் கெந்தகம், வீரம் சேர்க்க இவ்வைந்தும் சேர்த்து ஏழு மாற்றுள்ள தங்கமாச்சு. நாகம், தங்கம் சேர்ந்தால் அது பத்து மாற்றாகும்.

(586) பஞ்சபூதங்களில் ஒன்று குறைந்தாலும் மாற்று குறைவாகும். கல்லுப்பும் இரசமும் சேர்த்து உருவினால் தங்கமாகும். துள்ளித் திரியாமல் உப்பைப் பார்க்கவும். அதனால் செலவு அதிகமில்லை. நான் கூறியபடி உலகத்திலுள்ளவர்களுக்கு ஆயுள் வேதத்தை செய்து காட்டவும்.

(587) வாத வித்தை என்பது எளிதல்ல ஆனாலும் முறையாக கருத்தை ஊன்றிப் பார்த்து செய்தால் எளிதாகும். ரிஷிகள், சித்தர்கள் கூறியதை நான்

இங்கு கறந்தபால் போல எளிதாகக் கூறினேன். நான் கூறியது அத்தனையும் உண்மை. உப்பைக் கட்டினால் வாதம் வந்து நிலைக்கும்.

(588) உலகத்து வாதிகள் பலர் உப்பைவிட்டு விட்டு வாதத்தைப் பார்க்க அலைந்து திரிவார்கள். சுட்டு சுட்டு கெட்டுப் போய் சாத்திரம் பொய் என்பார்கள். மலைகளைச் சுற்றினாலும் காடுகளைச் சுற்றினாலும் ஒருவரும் சொல்லாததால் ஓரிடத்திலேயே இருக்கலாம் என்பார்கள்.

(589) சங்கரன் திராவகத்தை உலகத்துக்கு கூறுகின்றேன் கேட்பாயாக வேறு சாத்திரங்கள் கூறாத பாகமிது. இந்த புகைநீரினால் சரக்குகள் கட்டும். வேதை எளிதிலாகும். சுண்ணமாகும் நவலோகமும் நீறும்.

(590) வெடியுப்பு அறுபதுபலம், இந்துப்பு முப்பதுபலம், சாரம் இருபதுபலம், அன்னபேதி ஒருபலம், துருசு அரைபலம், படிகாரம் முன்னூறுபலம், பூநீறு ஒரு பலம் ஆகிய எடை அளவில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(591) சரக்குகளை கல்லுரலிலிட்டு மாப்போல இடித்து பானையில் அரைவாசி இடவும். அதன் மேல் வாலையினால் மூடி உளுந்து மாவினால் சீலை செய்து அடுப்பேற்றி கமலாக்கினியாக எரிக்கவும். முந்நீரைத் தள்ளிவிட்டு பின்னீரை பி்டிக்கவும்.

(592) இத்திராவகத்தை அடுக்குக் குப்பியில் அடைத்து வைக்க வேண்டும். உலோகம் என்றால் கரைந்து போகும். எனவே அதில் வைக்காமல் இருக்கவும். தூங்கித் திரியாமல் இத்திராவகத்தை வைத்து முன்னேறவும். திரிபுரத்தை சிவன் எரித்தாற்போல் இதற்கு வேகம் அதிகம்.

(593) இரசத்தை பீங்கானிலிட்டு புகைநீரினை ஊற்றி வெயிலில் வைக்க இரசம் நீறிப்போகும். லிங்கம் நீறும். தங்கத்தில் இட தங்கமும் நீறிப்போகும். அயப்பொடியும் நீறிப் போகும்.

(594) உப்புவகை இருபத்தைந்து, உலோகம் ஒன்பது, பாஷாணம் 64ம் இதில் நீறும். இதனால் வேதை மார்க்கம் சாத்தியமாகும். கட்டு, மெழுகு ஆகியவை எளிதிலாகும். கல் கூட நீறிப் போகும். நீறிய சரக்கை எல்லாம் கல்லுப்பில் வைத்து எரிக்க மேலும் நீறிப்போகும்.

(595) மூலிகையில் அரைக்கச் சொன்னேன். அவுரி ஓரிலைத்தாமரை, செவ்வல்லி, புளிநரளை, கோவை, கொடிவேலி, செந்திராய், செம்பரத்தம் பூ, ஆகியவற்றை அயச்செம்பு வந்த இடத்தில் எல்லாம் இவைகளை விட்டு அரைக்கவும்.

(596) மேற்கூறிய மூலிகைகளில் கையில் கிடைத்ததைக் கொண்டு அரைக்க சித்தியாகும். செம்பாகும். செம்பு செத்துப் போனால் அதனை எழுப்பக்கூடிய

மூலிகை எலுமிச்சம் பழச்சாறு ஆகும். எனவே அதைவிட்டு அரைக்கவும். யூகிமுனி சொன்ன இந்த சொல் உண்மையாகும். வேதை எளிதிலாகும்.

(597) பழச்சாறு பிழிந்து அரைப்படி பீங்கானிலிட்டு செம்பரத்தம் பூவை இட்டு வைக்க இரத்தம் போல் ஆகும். கண் கூசும் ஒளியுண்டாகும். அயச்செம்பு வந்த இடத்தில் எல்லாம் இச்சாறுவிட்டு ஆட்ட செம்பு பலப்படும்.

(598) செம்பரத்தம் பூவை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊற வைக்க இரத்தம் போல ஆகும். இதனை செய்து கொண்டு செம்பு வந்த இடத்தில் எல்லாம் இதனை விட்டு அரைக்கவும்.

(599) சுடுவாதியே செம்பு சேர்ந்தால்தான் அயச்செம்பாகும் வெறும் அயத்தை மூலிகையால் அரைக்க அரைக்க கரியாகப் போகும். பொய் என்று சொல்பவன் புத்தி இல்லாதவன். மடையைக் காத்த கொக்கைப்போல வீணாக அலைந்து திரிந்து மாண்டு போவான்.

(600) அயமும் செம்பும் சேர்ந்த பொழுது பொன்னாகும். செம்புக்கரி சேர்ந்த உடனே நிமிடத்தில் வேதையாகும். ஆணும் பெண்ணும் சேர்ந்தால் கருவுண்டாவது போல அயமும் செம்பும் சேர்ந்தால் மட்டுமே செம்பு கட்டுப்படும். தனி அயத்தில் செம்பு விளையாது.

(601) கட்டிய செம்பை வெள்ளியில் தர வேதை பாகம் முடியும். வாய்ப் பேச்சினால் என்ன லாபம் தடையில்லாமல் செய்தாலே தங்கம் ஆகும். மனம் வைத்து செய்தால் வேதை கோடியாகும். துடிதுடித்து திரியாமல் சூட்சுமத்தை பார்க்க வேண்டும்.

(602) கட்டிய உப்பை உருக்கினால் பொன் போலாகும். அந்த உப்பினால் இரசத்தைக்கட்டி குளிகை செய்து நாங்கள் மறந்தோம். பொன் செய்து ஆடிப் பார்த்தோம். அண்டத்தின் உச்சிக்கேறி நின்று எல்லாவற்றையும் பார்த்தோம்.

(603) ஆறு ஆதாரங்களையும் தாண்டி ஏறிநின்று மாசில்லாத தூய குணத்தை அடைந்து மனதை ஊன்றிப் பார்த்து தலத்தில் நின்று செபித்து ஏறவும் சாஸ்திர நூல்களை பாடித்தேறி குணத்தின் வழிநின்று நந்தியின் நாவினால் துதித்தேன்.

(604) நந்தீசரை துதி செய்தபின்பு அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டேன். மரபு பிறப்பு ஆகியவற்றைக் கேட்டுக் கொண்டு எனக்கு யூகியென்று பெயரிட்டு அழைத்தார். நானும் ஒப்புக் கொண்டு திருவண்ணாமலையில் இருந்து வெகுகாலம் உரை செய்தேன்.

(605) நான் செய்த சாத்திரங்களை சொல்லக் கேட்பாயாக. பதினாயிரத்துச் சொச்சம் பாடல்களை நூற்றாறு மண்டலத்தில் பாடினேன். பார்வதியிடம் காட்டி பின்பு நூலெல்லாம் சுருக்கி சூட்சுமமாய் சொல்லிவிட்டேன்.

(606) மனிதர்கள் இந்நூலை உண்மையாக காப்புமுதல் கடைசி வரை பார்த்தால் வாதம் எளிதில்ஆகும். கவசம் செய்யத் திரிந்தவன் அலையற்ற இடத்தில் மீன்கள் தோன்றாதது போல வாதம் சாத்தியமாகாது.

(607) கட்டிய உப்பை பத்துபலம் எடுத்துக் கொண்டு சமஎடை நாயுருவிக் கொழுந்தினைச் சேர்த்து அரைத்துப் புடமிடவும். மீண்டும் முன்போலவே புடமிட கடுஞ்சுண்ணமாகும்.

(608) இந்த சுண்ண எடைக்கு சமமாக சாரஞ் சேர்த்து நெடி அடங்குமட்டும் அரைத்து கலையத்தில் வைத்து புடத்தைப் போடவும். அதனை எடுத்து பனியில் வைக்க செயநீராகும். இந்த நீரில் வீரம் பூரம் ஆகியவற்றை போட்டால் அந்த நீரின் பெருமை என்னவென்று கூறுவது?

(609) செயநீர் இப்பொழுது சிகப்பு நிறமாகிவிடும். பச்சை கற்பூரம் ஒருபலம் சூடன் ஒருபலம் இரண்டையும் கல்வத்திலிட்டு ஒரு பலம் செயநீர் விட்டு ஆறு சாமம் அரைக்கவும்.

(610) ஆறுசாமம் அரைத்து வில்லைதட்டி காயவைத்து ஐந்து சுண்ணக் குகைக்குள் வைத்து பத்தெருவில் புடமிட சுண்ணமாகும். இந்த சுண்ணத்துக்கு சமஎடை சாரம் சேர்க்க செயநீர் கிடைக்கும். இதன் பெருமையை என்னவென்று கூறுவது?

(611) இந்த செயநீரில் நிமிளையை தோய்த்து ஊத கடுஞ் சுண்ணமாகும். இதனை துருசின்மேல் கவசம் செய்து பத்தெருவில் புடமிட துருசு நீறும். இந்த துருசினை இரசத்திற்கு கொடுக்க இரசம் கட்டி மணியாகும்.

(612) கட்டிய சூதத்தை செயநீர்விட்டு அரைத்து கரியில் ஊத இரசம் சுண்ணமாகும். அயம் சுண்ணமாகும். சகலமும் சுண்ணமாகும். இதனால் ககனம் சூட்சுமமாய் விளங்கும். இச்செயநீரால் தொட்டதெல்லாம் சுண்ணமாகும்.

(613) பாஷாணங்கள் அறுபத்திநான்கும் உபரசங்கள் நூற்றி இருபதும் சுண்ணமாகும். உப்பைக்கட்டக் கூறினேன். உப்பைக்கட்டி சுண்ணம் செய்து வேதை செய்ய எல்லாம் எளிதிலாகும்

(614) கல்லுப்பு வெடியுப்பு ஆகியவற்றால் வேதை மார்க்கம் கோடி வகையாகும். அயச்செம்பு மற்றும் சீனத்தால் கவறுகோடி கடல் நுரையால் சுண்ணம் கோடி வகையாகும். திராவகத்தால் அநேக முறைகள் கைகூடும். காரீயத்தால் செம்பு பலப்படும்.

(615) பஞ்சபூத உலோகங்கள் சேர்ந்த களங்கை கூறுகின்றேன். இந்த களங்கை முறையாகச் செய்தால் எல்லாம் தங்கமாகும். இவ்வைந்தைவிட்டால் எல்லாம் பாழாகும். இச்சரக்குகள் முறையாகச் சேர்ந்தது என்றால் அஷ்ட சித்தி ஆடலாம்.

(616-618) சிவன் கூறிய இன்னொரு களங்கைக் கூறுகிறேன். கந்தகம், வீரம், மனோசிலை, தாளகம் ஆகியவற்றை வகைக்கு ஒரு பலம் எடுத்து திராவகத்தால் நான்கு சாமம் அரைத்து காயவைத்துக் கொள்ளவும். எலுமிச்சம் பழச்சாற்றாறில் ஊறவைத்து கழுவி எடுத்த அயத்தூள் நான்கு பலம் எடுத்து முன் மருந்தில் பிசறி குகையில் வைத்து உருக்க ஒரே மணியாக உருண்டு திரளும். இந்த மணியை எடுத்து உடைத்து திராவகத்தை விட்டு ஆட்டி உருக்க ஈயமாகும். அந்த ஈயத்துடன் வெங்காரம் சேர்த்து திராவகம்விட்டு அரைத்து மூசையில் வைத்து உருக்க வெள்ளிபோல் கண்விட்டாடும். இதனால் அயத்திலுள்ள கசடு நீங்கி தங்கமாகும்.

(619-620) இந்த அயச்சத்தை தனியே எடுத்து அப்பால் வைக்கவும். வெள்ளீயம் ஒரு பலமெடுத்து அயக்கரண்டியில் உருக்கிக் கொண்டு அதற்குப்பாதி இரசம் சேர்த்து புட்டாகச் செய்யவும். அதனை அயக்கரண்டியில் உருக்கிக்கொண்டு மனோசிலை அரை பலம் போட்டு திராவகத்தால் அரைத்துக் கொள்ளவும். அதனை வில்லைதட்டி காயவைத்து பத்தெருவில் புடமிடவும். இதில் வெங்காரஞ் சேர்த்து உருக்க வெட்டையாகும். வெள்ளீயம் செத்துப்போகும். புதுமையாய் உலோகத்தை உண்டாக்கும் முறை இதுவாகும். இந்த சத்தை எடுத்து தனியே வைத்துக் கொள்ளவும்.

(621-624) காரீயம் ஒருபலம் எடுத்து அயக்கரண்டியில் இட்டு உருக்கி அதற்குப் பாதி இரசம் சேர்த்து பிட்டாக்கவும். அதில் கெந்தகம் அரை பலம் சேர்த்து கல்வத்திலிட்டு திராவகம் விட்டரைத்து வில்லைதட்டி காயவைத்து பத்தெருவில் புடமிடவும். இதனை குகையிலிட்டு உருக்க சத்தாகிப் போகும். இக்காரீயச்சத்தை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். செம்பு ஒருபலம் எடுத்து தகடாய்த் தட்டி திராவகம்விட்டரைக்க களிம்பு ஊறும். களிம்பில் அரைபலம் சாதிலிங்கம் சேர்த்து அரைத்து வில்லை செய்து பத்தெருவில் புடமிடவும். அதை எடுத்து குகையில் வைத்து உருக்க ஈயமாகும். ஈயந்தான் நல்ல சத்தானது. வாதமெல்லாம் இதற்குள் ஆகும். இச்சத்தை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(625-626) ஒரு பலம் நாகத்தை இலுப்பை நெய்யில் பத்துமுறை உருக்கி சாய்க்கவும். அதனை கரண்டியிலிட்டு உருக்கும் பொழுது சூதம் அரைபலம் சேர்த்து பிட்டாக்கவும். அதனை எடுத்து கல்வத்திலிட்டு திராவகத்தால் அரைக்கவும். அச்சமயம் அயசத்தினை சமஎடை சேர்த்து அரைத்து வில்லை தட்டி காய்ந்தபின்பு பத்தெருவில் புடமிடவும். அதனை குகையிலிலிட்டுருக்க நாகம் நல்ல வெட்டையாகும். இந்த நாகச்சத்தை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(627) தங்கம் ஒருபலம், கெந்தகம் ஒருபலம், இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து உருக்கிக் கொண்டு தகடாகத் தட்டவும். கந்தகமும், வீரமும் வகைக்கு ஏழு பலம் எடுத்து திராவகத்தால் அரைக்கவும்.

(628-629) அரைத்த மருந்தை தகட்டின் மேல் தடவி புடமிட நொறுங்கிப்போகும். அதனை எடுத்து உருக்க சத்தாகும். அதனைத் தனியே

எடுத்து வைத்துக் கொள்ளவும். சத்துக்களை சேர்க்கும் வகையைக் கேட்பாயாக. அயச்சத்து வெள்ளீயச்சத்து, காரீயச்சத்து, செம்புசத்து, நாகச்சத்து, தங்கசத்து ஆகிய ஆறுவகை சத்துக்களையும் வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொள்ளவும். இதில் தங்கம் மண் பூதமாகவும், காரீயம் வெள்ளீயம் ஆகிய இரண்டும் நீர் பூதமாகவும், செம்பு தீ பூதமாகவும் அயம் வாயு பூதமாகவும், நாகம் ஆகாய பூதமாகவும் கொள்ள மொத்தம் பஞ்சபூதங்களாச்சு.

(630) அறிவுகெட்ட வாதிகளே நான் கூறுவதைக் கேளுங்கள் நம் உடலில் பஞ்சபூதத்தில் ஒன்று தப்பினாலும், உயிர் பிரியும். அதுபோலவே பஞ்சபூதங்களையும் விட்டுவிடாமல் செய்தால் தங்கம் உண்டு.

(631) பஞ்சபூத உலோகங்களின் சத்துக்களை ஒன்றாகக் குகையிலிட்டு வெங்காரம் சேர்த்து உருக்க களங்காகும். இந்த களங்கை வைத்து பூசை செய்யவும். விடத்தை தொண்டையில் அடக்கிய சிவன் சித்தர்களுக்கு கூறிய பாகமிது.

(632) எட்டுபலம் துரிசையும் எட்டுபலம் வெங்காரத்தையும் சேர்த்து கல்வத்திலிட்டு திராவகம் விட்டரைத்து உருக்க செம்பாச்சு. இதனைத் தகடாகத் தட்டிக் கொண்டு விடவும். கந்தகம் ஒருபலம், சூடன் அரைபலம் ஆகிய இரண்டையும் திராவகம் விட்டரைக்கவும்.

(633) அரைத்த சரக்கை செம்பின்மேல் கவசமிட்டு காயவைத்து பெரியபுடமாய்ப் போடவேண்டும். நொறுங்கி தூளாகிப்போகும். இந்த தூள் இரண்டுபங்கு பஞ்சபூத களங்கு ஒரு பங்கு இரண்டையும் உருக்கி சேர்த்துக் கொள்ளவும்.

(634-635) திராவகத்தினை விட்டு அரைத்து காயவைத்து பத்து எருவில் புடமிடவும். அதனை எடுத்து உருக்கிக் கொள்ளவும். நொறுக்கு வெள்ளி எட்டுபங்கும் களங்கு ஒரு பங்கும் சேர்த்து உருக்க கறுப்பாக இருக்கும். அதை எடுத்து ஓட்டில் வைத்து ஊத தங்கமயமாகும். இதனை காவிக்குள் வைத்து புடமிட புடமிறங்கும். இந்த போக்கை யூகிமுனி கருத்தாக கூறினேன். இது சிவன் மேல் ஆணையாகும்.

(636-638) களங்கை சிந்தூரம் செய்யும் வகையை கூறுகிறேன். துரும்பு தூணானது போல் களங்கை அயத்தில் சேர்த்து குகையில் இட்டு உருக்கிட மணியாகும். அந்த மணியை உடைத்து புகைநீரில் அரைத்து வில்லைதட்டி காயவைத்து பத்தெருவில் புடமிட செந்தூரமாகும். செந்தூரத்தை செம்பில் நூற்றுக்கு ஒன்று போட செம்பு கட்டி தங்கமாகும். இதனை எடுத்து விற்று ஞானத்தினை பார்க்கவும். இதுவே சூட்சுமமாகும். இதனை வெளியில் சொன்னால் தலை வெடிக்கும். இச்செந்தூரத்தை ஒரு மண்டலம் பணவெடை தேனில் உண்ண தேகம் இறுகும் என்றும் பதினாறு வயதுபோல் இளமையோடு இருக்கலாம். மன்மதன்போல் அழகுண்டாகும். உறுதியாக இதனை உலகத்துக்கு கூறிவிட்டேன். இதனை சுருக்காக செய்து கொள்ளவும்.

(639) வாய்பேசாமல் தினந்தோறும் பூசைசெய்யவும். நாற்பத்து முக்கோணத்தில் தரிசித்து ஏறவேண்டும். மனதை ஒரே நிலையாக நிறுத்தி தங்கத்தை உண்டு நலம் பெற்று பொய் சொல்லி திரியாமல் புரட்டு செய்யாமல் இருக்க வேண்டும்.

(640) பூசை செய்யவென்றால் சாராயம், கள், கஞ்சா, அபின் ஆகியவற்றை விலக்க வேண்டும். சிவபூசை செய்ய சிதம்பரத்தில் நடனமாடும் சித்தர் எல்லாம் வந்து சேர்வார்கள். எளிதாக நினைக்காமல் தொந்தத்தில் ஆடி நிற்கவும்.

(641) அரக்கில் சாயமெடுத்து நூலுக்கு இடுவது போல் செய்தால் வாதமாகும். இரும்பில் சாயம் ஏற்றினால் தங்கமாகாது. இதனை நம்பி செய்தால் தொலையாது, தங்கத்தினை செய்தவுடன் எளிதாக மனிதரைப்போல வாழ வேண்டும்.

(642) நவலோக சிந்தூரத்தின் மகிமையை கூறுகின்றேன் கேட்பாயாக. அச்செந்தூரத்தை உண்டால் உடல் சட்டை கக்கும். தேகம் கல்போல் இறுகும். மேனி சிவந்து பசு நரம்பு ஓடும். உடலில் கஸ்தூரிவாசம் வீசும். ககனவழி செல்லலாம்.

(643) சூதத்தை கட்டினால் வாதமாகும். சுடுவாதி கட்டமாட்டான். மனது ஊன்றி செய்யாவிடில் என்ன பயன்? பெண்ணைக் கூடாமல் இருந்து இரசவாதத்தினை செய்ய வேண்டும். தேடாவிட்டால் எதுவும் கிட்டாது.

(644) இரசத்தைக் கட்டினால் பொன்னுண்டு அறிவுடன் செய்தால் எல்லாம் செயமாகும். துளி அளவு பாய்ந்தால்கூட போதும் எல்லாம் உருகும். உலகவாதிகள் தூக்கத்திலிருப்பார்கள். மனதை ஒரு நிலைப்படுத்தி சுழியிலேற்ற வேண்டும்.

(645) பொன்னைக் கட்டிக்கொண்டு பணம் பண்ண வேண்டுமென்று துக்கப்பட்டு திரியக்கூடாது. சாத்திர நூல்களை பார்த்துத்தேறி கொண்டாட்டம் செய்ய வேண்டாம். வாதசித்தி செய்தால் சீடர்கள் உடனே வருவார்கள் இவ்வுலகில் அரசாளலாம்.

(646) உப்பிலிட்டு இரசக்கட்டை எரிக்க இரசம் நீறிப்போகும். வீண்வாதிகள் உப்பை விட்டுவிட்டு மூலிகையைத் தேடி அலைவார்கள். உப்பில்லா வாதிகள் கையில் வெறும் இரசம் மட்டுமே இருக்கும். பாஷாணத்தை உப்பில் கட்ட வேதையாகும்.

(647) மூலிகையில் இரசத்தைக் கட்டும் மார்க்கத்தைக் கூறுகின்றேன். பதினெட்டு சித்தர்களும் மறைத்ததை வெளியாகக் கூறுகின்றேன். சிவயூகிமுனியாகிய நான் கூறுவதை பாகமாக செய்தால் வாதம் சித்திக்கும்.

(648) கல்லுப்பு ஒருபடி செங்கல்மா ஒருபடி எடுத்து பொடித்துக் கொண்டு இரண்டையும் கலந்து சட்டியிலிட்டு அமுக்கி நடுவில் பள்ளம் செய்து இரசம் ஒரு சேர் இடவும்.

(649) மேல்சட்டிமூடி ஏழுசீலைமண் செய்து அடுப்பிலேற்றி இருபத்தியோரு சாமம் சமலாக்கினியாக எரித்து ஆறவைத்து எடுக்கவும்.

(650) மேலே பதங்கமாகி இருக்கும் இரசத்தினை வழித்து எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை அரைக்கும் மூலிகையைக் கேட்பாயாக. நூறாண்டு வேம்பின் இலைகளை உருவிப்போட்டு குறுக அரிந்து பானையிலிட்டு தண்ணீர் ஊற்றவும்.

(651) தண்ணீரைவிட்டு எட்டில் ஒன்றாகக் காய்ச்சி சட்டியில் பிழிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ரசபஸ்பத்தை இலைக் கியாழத்தினுள்ளே விட்டு குழம்பாகிக் காய்ச்சிக் கொண்டு கல்வத்தில் வழித்துப் போட வேண்டும்.

(652) நாலுசாமம் அரைத்து வில்லைதட்டி காயவைத்து முன்போலவே சட்டியில் உப்பின் நடுவில் வைத்து எரிக்க உயர ஏறி பதங்கமாகும். அதனை வழித்து முன்போலவே வேப்பிலை கியாழத்தில் அரைத்து முன்போலவே உப்பில் வைத்து எரிக்க பஸ்பமாகும்.

(653) அதனை எடுத்து மெழுகுலோட்டி எடுத்து வைத்துக் கொள்ளவும். இதனை வெள்ளியில் இருபதுக்கு ஒன்று தர ஆறுமாற்று ஆகும். இது மிகவும் பசுமையாக இருக்கும். கற்பத்துக்கு இதுவே ஆதியாகும். நோய்கள் அனைத்தும் விலகி ஓடும். புதுமையான முறைகளைக் கூறியுள்ளேன். சித்தர்கள் எல்லோரும் இப்படி செய்தார்கள்.

(654) நந்திதேவர் அகத்தியர், தன்வந்திரி, புலத்தியர், தேரர் ஆகியோர் வழிவழியாகப் பார்த்துத் தேறியதை வைத்துக் கூறினார்கள். இதனை கைபாகமாக செய்து கொள்ளவும்.

(655) இன்னொரு வேதை மார்க்கத்தைக் கூறுகிறேன். காரீயம் பத்து பலத்தை கற்றாழம்நீரில் உருக்கிச் சாய்த்து சுத்தி செய்து கொள்ளவும். அதனைத் தகடாசுத்தட்டி பியத்துப்போட்டு கல்வத்திலிட்டு அதற்கு நாலில் ஒரு பங்கு வெடியுப்பு சேர்த்து கற்றாழம் சாற்றால் அரைக்கவும்.

(656) இரண்டுசாமம் அரைத்து வில்லைதட்டி காய வைத்து, பெரிய புடமாகப் போட்டு எடுக்க மஞ்சளாகும். கற்றாழம் பாலில் மீண்டும் மீண்டும் ஐந்துமுறை புடம் போட சிவந்து போகும்.

(657) இரசம் பத்துபலம் எடுத்துக்கொள்ளவும். வெடியுப்பு பத்துபலம், படிகாரம் இருபத்தைந்துபலம் ஆகிய இரண்டையும் ஒன்றாக இடித்து பானையிலிட்டு வாலையினால் மூடி எரித்து திராவகத்தை இறக்கவும்.

(658) திராவகத்தினை அரக்குக் குப்பியில் அடைத்து வைக்கவும். பீங்கானில் இரசம் ஒரு சேர்விட்டு அரைத்து திராவகத்தை கொஞ்சம் கொஞ்சமாக

விட்டு வெயிலில் வைக்க பூத்து நிற்கும். இந்த பூவை எல்லாம் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(659) மீண்டும் மீண்டும் திராவகம்விட்டு இரசத்தை எல்லாம் பூக்கச் செய்து எடுத்துக் கொள்ளவும். முன்செய்த காரீயச் செந்தூரம் ஐந்துக்கு ஒன்று பூத்த இரசத்தினை சேர்த்து ஒரு சட்டியில் உப்பை இட்டு நடுவில் வைத்து மேல் சட்டி கொண்டு மூடி ஏழு சீலைமண் செய்யவும்.

(660) இதனை அடுப்பிலேற்றி பனிரெண்டு சாமம் எரித்து ஆறவைத்துப் பிரித்துப் பார்க்க உயரே ஏறி நிற்கும். அதனைச் சுரண்டி கீழுள்ள மருந்துடன் சேர்த்து திராவகம் விட்டரைத்து முன்போலவே சட்டியில் உப்பின் நடுவே வைத்து மேல்சட்டியினால் மூடவும்.

(661) சட்டிக்கு ஏழுசீலைமண் செய்து எரிக்க இரசம் சட்டி அடியில் தங்கி நிற்கும். அச்செந்தூரம் முருக்கம்பூ போல சிவந்து நிற்கும். எங்கு திரிந்தாலும் இந்தமுறை அகப்படாது. இந்த வங்க இரசசெந்தூரத்தை செம்பில் முப்பதுக்கு ஒன்று தர தங்கமாகும்.

(662) வங்கத்தினால் கிடைக்கும் தங்கம் பசும்பொன்னாகும். ஆணவத்தால் கர்ச்சனை செய்யக் கூடாது. உலகமனிதர்கள் சொல் என்பார்கள் சொல்லவேண்டாம். உலகத்தில் இருந்து கொண்டே எவருடனும் பேசாமல் ஞானத்தைப் பார்க்கவும்.

(663) ஞானத்தைப்பார்த்துக் கற்றுக் கொண்டு மௌனமாக இருந்தால் தலைதப்பும், வெளியே சொன்னால் கொன்று விடுவாரப்பா. இப்பூமியும் வானமும் வசப்பட்டுவிடும். வாதம் அனைத்தும் எளிதில் அமையும் வகாரத்தைச் செய்தால் லோகம் திடப்படும்.

(664-665) வகார மார்க்கத்தில் எடை தப்பினால் பாகம் கெட்டுப் போகும். எரிப்பினுடைய பாகம் தப்பினால் இரசம் தப்பி ஓடிவிடும். சீலைமண் குறைபாடு இருந்தால் இரசம் தப்பி ஓடிவிடும். சுத்திமுறை தப்பினால் வாந்தி உண்டாகும். புடபாகம் தப்பினால் கருத்துப் போகும். குகை உடைந்து போனால் இறுகிப்போகும். கெந்தகம் முறையாகச் சேர்ந்தால் தங்கமாகும். ஊற்றும்பொழுது வகைதப்பினால் கிட்டமாகி இறுகிப்போய்விடும் வகை தப்பினால் பாகம் தப்பாகப் போகும் முறையாக பலனை ஆராய்ந்து பார்க்கவும்.

(666) அயச்செம்பு, காசிச்செம்பு ஆகியவற்றை எடுத்தால் தங்கத்துடன் முதலில் சம எடையாகி சேர்த்துக் கொள்ளவும். அதன்பிறகு வெள்ளியில் தர முழுதும் தங்கமாகும். இதனால் எல்லாம் எளிதிலாகும். அயச்செம்பை எடுத்து வெள்ளியில் கொடுத்தால் ஒன்றும் ஆகாது.

(667) ஒன்றுமாகவில்லை என்று மலைக்க வேண்டாம். மனதை ஊன்றிப் பார்த்துத் தேறவேண்டும். வேகாக்கால் என்றால் துருசு. சாகாத்தலை என்றால் அயம். இந்த இரண்டினாலும் வாதமாச்சு. இதனை அறிந்தால் வாதி ஆவான்.

(668) வாதவித்தைகளை சிவன் பார்வதிக்குச் சொல்ல பார்வதி நந்திக்கும், நந்தி அசுவினிக்கும், அசுவினி விசுவினிக்கும், விசுவினி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும் கூறினர்.

(669) தேரர் யூகிமுனிக்கு கூற யூகிமுனியான நான் உலகத்தோருக்கு கரும்பு போல் வேதத்தை கூறிவிட்டேன். இந்த நூலை முழுதும் பார்த்தால் கருவும் தோன்றும், தேரருடைய நூலைப் பார்த்தால் வாதம் எல்லாம் சாத்தியமாகும்.

(670) மகாதிராவகத்தின் பாகத்தினைக் கூறுகிறேன் கேட்பாயாக. இதில் இரசம் கட்டிவிடும். தேரர் எனக்கு கூறியதை வாய்பொத்தி கேட்டுக் கொண்டேன். திராவத்தை பாகமாக செய்து கொண்டால் இரசம் சுத்தியாகும் பார்.

(671) கல்லுப்பு திராவகத்தினால் வகாரத்தைப் பார்ப்பாயாக. இத்திராவகத்தால் சரக்கு எல்லாம் கட்டிப்போகும். உலோகங்கள் எல்லாம் தானே நீறிவிடும். சித்தர்கள் மறைத்து விட்ட முறையை தெளிவாக இறுதியில் நான் கூறிவிட்டேன்.

(672) கல்லுப்பு பத்துபலம், வீரம் பத்துபலம் ஆகிய இரண்டையும் கல்வத்திலிட்டு இரண்டு சாமம் அரைக்க மெழுகு போலாகும். அத்துடன் படிகாரம் இருபத்தைந்து பலம் பொடித்து சேர்த்து பானையில் இடவும்.

(673) பானையில் இட்டபின்பு வாலையினால் மூடி உளுந்து சீலைமண் செய்து காயவைத்து பின்பு அடுப்பில் வைத்து எரிக்கவும். முதலில் வரும் நீரைவிட்டுவிட்டு கடைசியில் வரும் நீரை பிடித்து குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

(674) துருசை ஒரேக் கட்டியாக வாங்கி கல்லுப்புத் திராவகத்தில் தோய்த்து எட்டுநாள் வெயிலில் போடவும். அதனை எடுத்து வைத்துக் கொள்ளவும். பிறகு வங்கம் பத்து பலமும் வெடியுப்பு பத்துபலமும் எடுத்துக் கொள்ளவும்.

(675) வங்கத்தை இராவி தூளாக்கி வெடியுப்பைச் சேர்த்து அண்ட எருக்கன் செயநீரால் எட்டு நாள் அரைத்து பெரியபுடம் போட்டு எடுக்கவும். அத்துடன் இரசபற்பம் சேர்த்து வெண்கருவால் அரைக்கவும்.

(676) அதனை அரைத்து வில்லைதட்டி காயவைத்து, இரண்டு வாய் பொருந்தும் சட்டிக்குள் வைத்து ஏழுசீலைமண் செய்யவும். பிறகு அடுப்பிலேற்றி நூறு நாழிகை எரித்துப் பிரித்துப் பார்க்க உயரே ஏறி இருக்கும். அதனை வழித்து கீழுள்ள வங்கத்துடன் சேர்த்து அரைக்கவும்.

(677) அண்ட எருக்கம் செயநீரால் அரைத்து வில்லைதட்டி காயவைத்து முன்போலவே எரிக்கவும். இவ்வாறு ஐந்துமுறை எரிக்க அடியில் தங்கம். இந்த கடுமையான வங்கசுண்ணத்தை மீண்டும் அண்ட எருக்கம் செயநீரினால் அரைத்து வில்லைதட்டி காயவைக்கவும்.

(678) வில்லையை ஐந்து சுண்ணக் குகைக்குள் வைத்து பத்தெருவில் புடமிட இரசமும் வங்கமும் சேர்த்து கடும் சுவையாக மாறியிருக்கும். இதனை முன்பு சித்தப்படுத்திய துருசுக்கு கவசம் செய்து புடமிட துருசு சுண்ணமாயிருக்கும்.

(679) துருசு சுண்ணாமானல் இரசத்தை கவ்விக் கொள்ளும் இரசமணி உருகிக் கட்டும். ககனம் ஓடலாம். லோகம் சித்தியாகும். செம்பு பழுத்துப்போகும். இந்த சிவன் எனும் இரசத்தால் வாதம் எளிதாகும்.

(680) இரசம் கட்டிவிட்டால் முத்தியாகும். நவலோகம் அனைத்தும் பழுத்துவிடும். கோடிமுறைகளில் வேதை மார்க்கம் முடியும். வங்கத்தால் துருசு நீறும் பசும்பொன் உடனே கிடைக்கும். யூகிமுனியாகிய நான் உலகத்துக்கு அருள் பாலித்து இதனை கூறினேன்

(681) முன்செய்த் துருசு சுண்ணத்தில் ஒரு கழஞ்சு எடுத்து விராலி இலைக்கு இட்டு இடித்து வைக்க சாறுவரும். அதனை அயக்கரண்டியில் ஊற்றி அதனுடன் இரசம் ஒரு சேர் ஊற்றிக் காய்ச்சவும். இரசம் உருகி மணியாகும்.

(682) அந்த இரசத்தை உருட்டி ஊமத்தங்காய்க்குள் வைத்து நூறுபுடம் போட்டு எடுக்க மணியாகிப் போகும். கரியில் வைத்து உருக்கினால் புகைந்து ஓடாமல் இருக்கும். இதன் பெருமையை வாயினால் கூறமுடியாது. இந்த இரசமணிக்கு சாரணை தீர்த்துக் கொள்ளவும்.

(683) இரசமணிக்கு சாரணைதர கங்கைவரை யெட்டியோடும். இரசம் நான்கு பங்கு எடுத்து குகையில் வைத்து உருக்கும் பொழுது தங்கம் ஒன்று நாகமொன்று கொடுத்து உருக்கவும் அடிக்கடி. வெங்காரம் சேர்த்துருக்கக் களங்காகும்.

(684) களங்கை எடுத்து எட்டுக்கு ஒன்று கெந்தகம் சேர்த்து மஞ்சள் கரிசாலை சாறுவிட்டு ஆட்டி புடமிட்டு எடுக்க எடை குறையாமல் செந்தூரமாகும். இந்த செந்தூரத்தை நவலோகத்திலும் நூற்றுக்கு ஒன்று தர பத்துமாற்றுள்ள தங்கம் கிடைக்கும்.

(685) இந்த செந்தூரத்தை தேனிலுண்டுவர மரமில்லை. தேகம் இறுகும். உடல் சிவக்கும் விந்திறுகும். நோயெல்லாம் ஓடிப் போகும் வகாரப்போக்கிற்கு உதவும்.

(686) என்னைப் பண்புள்ளவன் என்று கூறி தேரர் அகத்தியரிடம் கூட்டிப்போய் விட தான் கண்ட செய்பாகங்களை அகத்தியர் காட்ட நான் திருவண்ணாமலையில் இருந்துவிட்டேன். இந்த செந்தூரத்தை கருத்தாகச் செய்து சிந்தூரம் செய்து உண்ணவும்.

(687) வங்கத்தை சுண்ணம்செய்து துருசின் மேல் கவசம்கட்டி புடமிட துருசு நீறும் துருசு நீறினால் சூதம் கட்டும். அதனை ஊமத்தங் காய்க்குள் வைத்து புடமிட மணியாகும். யோகசித்தி காயசித்தி செய்து வரவேண்டும்.

(688) சூதத்தைக் கட்டிச்சேர்த்து சுட்டால் எல்லாமாகும். சித்தர்களைத் தேடி கீர்த்தி பெற்றால் வாதம் எல்லாம் எளிதிலாகும், எட்டு வகை சித்திகளையும் அடையலாம் நூலைப்படித்துப் பார்த்து செய்ய வாதம் எல்லாம் எளிதாகும்.

(689) முப்புவின் கருவைக் கேளு கல்லுப்பு முப்பாகும். சூதமும் முப்பாகும். இரும்பும் முப்பாகும். இந்த மூன்றும் கண்டால் முப்புவென பெயராகும். வழலை என்று இதற்குப் பெயர்.

(690) இதனை கருத்தாகப் பார்க்காமல் உலகவாதிகள் வழலை பிண்டம் என்று அலைவார்கள் வாதம் பொய் என்பார்கள். பொருத்தமாக கூற மாட்டார்கள், எதுவும் காணமுடியாமல் அலைவார்கள்.

(691-692) கல்லுப்பை வாங்கி மேல்தூசியை துடைத்து விட வேண்டும். கடல் நுரையை கரியில் வைத்து கடுமையாக ஊத வேண்டும். கடும் சுண்ணமாகிவிடும். அதனை எடுத்து வெண்கருவில் அரைத்து கல்லுப்பின் மேல் கவசம் கட்டி அதன்மேலே மண் கவசம் செய்து பெரிய புடமாக இட வேண்டும். பிரித்துப் பார்க்க கல்லுப்பானது நீரை வாங்கி உருகி மணிபோலாகும். இனி இரசத்தினை பஸ்பம் செய்ய கூறுகிறேன்.

(693-694) கல்லுப்பு எட்டுபடி, செங்கல் மாவு இரண்டுபடி ஆகிய இரண்டையும் இடித்து சட்டியில் இட்டு நடுவே பத்துபலம் இரசத்தினை நடுவில் இட்டு, மேல் சட்டியிட்டு சீலை மண் செய்து நூறு நாழிகை எரித்து பிரித்துப் பார்க்கவும். தந்தம்போல் மேல்சட்டியில் இரசம் ஏறியிருக்கும். இதனைச் சுரண்டி எடுத்துக் கொள்ளவும். அரப்பொடி பத்துபலம் எடுத்துக் கொள்ளவும்.

(695) கல்லுப்பு ஒருபலம், இரச பஸ்பம் ஒருபலம், அயம் ஒருபலம், வெங்காரம் ஒருபலம், இந்த சரக்குகளுடன் துருசு நான்குபலம் எடுத்துக் கொள்ளவும். துரிசினை முதலில் நெருப்பில் வைத்து ஊத பசுமையோடும்.

(696) முன்சொன்ன நான்கு சரக்குகளையும் செவ்வல்லிப் பூச்சாறுவிட்டு இரண்டு சாமம் அரைத்து துருசுமேல் கவசம் செய்து அதன்மேல் மேலும் சுண்ணத்தினால் கவசம் செய்யவும். அதன் மேல் மீண்டும் மண் கவசம் செய்து பெரிய புடம் இட துருசு குருவாகும்.

(697) குருவெடுத்து மூசையில் வைத்து உருக்க செம்பாகும். தங்கத்தில் சேர்த்து ஊத தங்கம் செம்பாகும். வெள்ளி எட்டில் ஒன்று சேர்த்து ஊத மாற்று எட்டாகும். இது உப்புக்கும் காவிக்கும் புடமிறங்கி நிற்கும்.

(698) சிவயோகிகள், நல்லவர்கள், தவசிகள், நூலைப்பார்த்த வாதிகளுக்கும் வாதம் சித்தியாகும். நூலைப் படிக்காதவருக்கும் தானாக வாதம் செய்து பார்பவர்க்கும் வாதம் சித்தியாகாது. உற்று அறிந்து பார்ப்பவரே வாதியாவான்.

(699) வாதிகள் என்று கல்லுப்பைவிட்டுவிட்டு மூலிகைகளைத் தேடி அலைந்து சுட்டு திரிவார்கள். நூலைப் பார்த்து செய்தால் செம்பு தோன்றும்.

செம்பைக் கொண்டு பொன்னை செய்து வாழ வேண்டும். குறைவில்லாத இந்த செம்பை பார்க்கவேண்டும்.

(700) செம்பு கல்லுப்பு, அயம் துருசு ஆகியவற்றைப் பார்க்க வேண்டும். அதனைக் கொண்டு வெள்ளியைப் பழுக்கச் செய்து சிறப்புடன் வாழ வேண்டும். செம்பைக் காண்பது சிவன் செயல் என்றவுடன் அதைவிட்டுவிட்டு விடுவார்கள். எம்பெருமான் அறிய கூறுகிறேன் ஓரிடத்தில் இருந்து செம்பைப் பார்.

(701) செம்பை செய்து சிவயோக வழியில் நிற்கவும். ஆணவத்தால் கர்ஜனை செய்ய வேண்டாம். நூலை விரும்பிப் பார்த்துத் தேறி கல்லுப்பை கட்டவேண்டும். வகாரம் ஏவல் கேட்கும். நாதாந்த பொருளில் நாட்டம் வைக்கவும். வடிவாக இருந்து பார்த்திட எல்லாம் சித்தியாகும்.

(702) இன்னொரு செம்பினைக் கூறுகின்றேன். பாகத்துடன் செய்து கொள். கட்டின கல்லுப்பை ஒரு பலம் எடுத்துக் கொண்டு கல்வத்திலிட்டு இரசபற்பம் சம அளவு சேர்த்து அரைக்கவும். அதனை இரண்டு பலம் துருசு மேலேக்கட்டி சுண்ணாம்பு கவசம் செய்து புடம் இட்டு எடுத்துக் கொள்ளவேண்டும்.

(703) புடமிட்டு எடுத்த மருந்துடன் சமமாக வெங்காரம் சேர்த்து உருக்க செம்பாகும். இந்த செம்பு மிகவும் சிகப்பாக இருக்கும். இச்செம்பை வெள்ளியில் எட்டுக்கு ஒன்று கொடுக்க பசுமையாகும். இந்த பசுமைக்கு செம்பு போலவே இரண்டு பங்கு பொன் சேர்த்து ஊத ஏழு மாற்றுள்ள தங்கம் கிடைக்கும். அதனை எடுத்து செலவுக்கு வைத்துக் கொள்ளவும்.

(704) தங்கத்தை செய்து ஞானத்தைப் பார்க்கவும். சிவனால் உண்டான இந்த சொத்தை உண்டு வறுமையை நீக்கிக் கொள்ளவும். இந்த சொத்தை உண்டு ஒருவருடனும் பேசாமல் உள்ளத்தின் நடுவில் நிற்கவும். குருவருளால் இந்த வித்தையை சிறப்பாக செய்ய வசியமாகும்.

(705) வாதத்தினால் உலகம் வசியமாகும். உலகத்தை மயக்கும். இதனை உள்ளபடி கூறினேன். செம்பை உறுதியாகச் செய்தால் உலகத்திலுள்ளவர்கள் வேதை பலனைக் காணலாம்.

(706) இவ்வுலகில் அகங்காரத்தை விட்டு மனதை ஒரு நிலைப்படுத்தி உழைத்தால் வாதமாகும். உழைக்காமல் போனால் வாத வேலைகளில் பலன் கிடைக்காது.

(707-708) இன்னொருவகைச் செம்பைக் கூறுகிறேன். தேரர் செய்து பார்த்து எனக்கு கூறிய வித்தை இதுவாகும். இச்செம்பு வாத வேலைக்காகும். கல்லுப்பு ஒருபலம், இரசபற்பம் முக்கால்பலம், சூடன் அரைபலம், வீரம் கால்பலம் எடுத்து திராவகம் விட்டு அரைத்துக் கொள்ளவும். அதனை நான்குபலம் துருசுக்கு கவசம்செய்து உலர்த்தி, அதன் மேல் மண்சீலை செய்து பத்து எருவில் புடமிடவும் அதனை எடுத்து வெங்காரம் சேர்த்து உருக்க செம்பாகும். இந்த செம்பை வெள்ளிக்கு எட்டில் ஒன்றாகக் கொடுத்து ஊத தங்கமாகும்.

(709) இங்கு இரசம் செமபாச்சு. இவ்வித்தையை கையிலையில் வாழும் சிவபெருமான் தேரருக்கு சொன்னார். அதை தேரர் எனக்குக் கூற அதை இவ்வுலகத்திலுள்ளவர்களுக்கு நான் கூறியுள்ளேன்.

(710) இம்முறையில் துருசியிலிருந்து செம்பெடுத்து கொடுத்தால்தான் வெள்ளி பழுக்கும். வீணாகச் சுட்டலைந்தால் வாதமில்லை மூலிகையில் செம்பு செய்தால் வாதம் கிட்டாது.

(711) முயன்று பார்த்தால் எல்லாம் தோன்றும். இல்லாவிட்டால் ஒன்றும் கிடைக்காது. செம்பை கட்டினால் வாத வேலைகள் கைகூடும். அவ்வாறு இல்லாவிட்டால் வீணாகச் சுட்டு அலைவதுதான் மிச்சமாகும்.

(712) முதலில் இரசபற்பம் செய்ய வேண்டும். பிறகு கல்லுப்பை கட்டிக் கொள்ள வேண்டும். இறுதியில் வெங்காரத்தை பொரித்துக் கொள்ள வேண்டும். இவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து குகையில் வைத்து உருக்க செம்பு உறுதிபடும்.

(713) நான் கூறுகின்ற பஞ்சபூத களங்கை செய்து விற்று செலவு செய்து கொள்ளவும். மமதையுடன் திரியாதே. அருள் செய்வோருக்கு அனந்தம் கோடி. சாத்திர நூல்களை முயற்சியுடன் படித்து செய்தால் தோல்வியில்லை.

(714) தங்கம் ஒருபலம் எடுத்து அதனுடன் சம அளவு செம்பு சேர்த்து உருக்கவும். பத்துபலம் லிங்கத்துக்கு பழச்சாறு முலைப்பால் ஆகியவற்றை சம அளவு எடுத்து நான்கு சாமம் சுருக்கு தரவும்.

(715) அப்ரகத்தகட்டை கரியோட்டில் வைத்து, அதில் தாளகத்தை பொடித்துப்போட்டு நெருப்பில் வைத்து ஊதவும் தாளகப்பொடி உருகும்பொழுது லிங்கத்தைப் போட்டு புரட்டி புரட்டி எடுக்க தைலத்தை உண்டுவிடும்.

(716) அப்ரகம் ஒருபலமும் வீரம் கால்பலமும் சேர்த்து செவ்வல்லிப் பூச்சாற்றால் நன்கு அரைக்க வெண்ணையாகும். அதனை லிங்கத்தின் மேலே கவசம் செய்து காயவைத்து உமிக்குள் வைத்து பின்பு அதன் மேலே வரட்டியினை இட்டு புடமிடவும்.

(717-718) புடத்திலிருந்து லிங்கக்கட்டை எடுத்து வைத்துக் கொள்ளவும். தங்கச் செம்பு உருகையில் பத்துக்கு ஒன்று இந்த லிங்க கட்டினை தர் உள்ளே வாங்கிக் கொள்ளவும். அதனை எடுத்து கல்வத்திலிட்டு அந்த எடைக்கு சமமாக அயத்தினையும் பாதி அளவு வெங்காரத்தையும் சேர்த்து செவ்வல்லிப் பூச்சாறுவிட்டு அரைத்து வில்லைதட்டி வெயிலில் காய போடவும். இதனை மூசையிலிட்டு உருக்க தங்கசெம்பு சிவந்து கிடைக்கும். இதனை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும்.

(719) கெந்தகம் பத்துபலம், சீனம் பத்துபலம் இரண்டையும் நன்கு பொடித்து ஓட்டிலிட்டு உருக்கையில் கௌரி பத்துபலத்தை புரட்டிவிட தயிலத்தை உண்டுவிடும்.

(720) முன்பு சித்தப்படுத்திய கௌரிக்கு அப்ரகத்தை கவசம் செய்து உமிநெருப்பில் புடமிட்டு எடுத்து தனியே வைத்துக் கொள்ளவும். பத்துபலம் காரீயம், நாகம் பத்துபலம், செம்பு பத்துபலம் ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும்.

(721) மேற்கண்ட மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து உருக்கும் பொழுது மொத்த எடைக்கு நான்கிற்கு ஒன்று கௌரியை கொடுக்க அனைத்தும் நொறுங்கி தூளாகப் போகும். இப்பொழுது கிடைத்த சரக்கின் எடைக்கு சமமாக அயமும், பாதிஅளவு வெங்காரமும் சேர்த்து அரைத்து வில்லைதட்டி காயவைத்து புடம் இடவும். இதனை எடுத்து மூசையில் வைத்து ஊத செம்பாகும்.

(723) இவ்வுலகில் சஞ்சரிக்கும் பொழுது கையில் செலவுக்கு பணமில்லாவிட்டால் வாழ்க்கைக்கு பணமில்லாவிட்டால் வெள்ளியில் எட்டுக்கு ஒன்று கொடுத்துவிட கிடைக்கும். எட்டு மாற்றுள்ள தங்கத்தை விற்று செலவு செய்து கொள்ளலாம்.

(724) தங்கத்தை செலவு செய்து மலைகள் தோறும் நடந்து கிடைத்த உபரசங்களை எல்லாம் கொண்டு குளிகைக்கு சாரணை தீர்த்து ககனமோடிப்பார்க்கவும். அதிகமாக சிந்தூரம் செய்து பாகமாக உண்டிடுவாயே.

(725) சுழிமுனையில் கருத்தை வைத்து விராட புருஷனை தேடவும். குடிகளைக் கெடுக்காமல் மனதைக்கட்டி மோட்சத்துக்கிதுவே யாதி என்று மனதை செம்மையாக்கு செந்தூரம் செய்து உண்டு காயசித்தியையும் பெறவும்.

(726) பஞ்சபூதத்தை அறிந்து செம்பை முறையாகச் செய்து வெள்ளியில் கொடுக்க தங்கமாகும். ஆணவத்தால் அலையாமல் நூலைப் பார்க்கவும். வெளியே சொல்லாமல் இருந்து வாதத்தை செய்யவும். வெளியே சொன்னால் வாதம் கிட்டாது.

(727-728) பஞ்சபூதத்தை பார்த்து தெளிந்துவிட்டால் வாதம் எளிதில் கிட்டும். மனதிலுள்ள அழுக்கை நீக்கினால் யோகம் ஞானம் ஆகியன வரும். ஓரிடத்தில் ஊன்றிப் பார்த்துச் செய்யவும். இல்லாவிடில் எதுவும் கிட்டாது. வாதம் என்பது எளிதல்ல அது சிவரூபமாகும். நூற்களை நன்கு ஆராய்ந்து பார்க்க தங்கம் கிட்டும்.

(729) தங்கத்தைக் கண்டவுடன் ஆணவத்தால் கர்ஜனை செய்யாதே எகிரித்திரியவேண்டாம். காமத்தை தள்ளி ஞானத்தை பார்க்கவும். மனதை ஒரு நிலைப்படுத்தி உய்த்துணர்ந்து பார்த்து அறிவைத் தேடு. அதனை நாடினால் சிவயோக நன்மை கிடைக்கும்.

(730) இன்னொரு செம்பு வகையை கூறுகிறேன் பத்துபலம் துருசுக்கு முக்கால்பங்கு கெந்தகத்தையும் அரைபங்கு சூடத்தையும் கால்பங்கு வீரத்தையும் எடுத்து செவ்வல்லிப்பூச்சாறுவிட்டு அரைத்து முன்னுள்ள துருசுக்கு கவசம் கட்டவும்.

(731) பிறகு அதன்மேல் சுண்ணாம்பு சீலைசெய்து அதன் மேலே மண்சீலை செய்து உலர்த்தி பத்தெருவில் புடமிடவேண்டும். புடமாறியபின் சரக்கை எடுத்து வெங்காரத்தை அந்த எடைக்கு சேர்த்து கல்வத்திட்டு அரைத்து உருக்கிப் பார்க்கச் செம்பாகும்.

(732) அயமுருக்கும் வித்தையை கேட்பாயாக. அயப்பொடி பத்து பலம் கெந்தகம் பத்துபலம், இரண்டையும் அரைத்து உருக்க கரிபோலாகும். அந்த எடைக்கு துருசுசெம்பை சேர்த்து உருக்கி எடுக்க களங்காகும்.

(733) வெள்ளி எட்டு பங்கு இந்த களங்கு இரண்டு பங்கு சேர்க்க ஆறுமாற்றுள்ள தங்கம் கிடைக்கும். முன் சொன்ன களங்கில் வெங்காரத்தை சேர்த்து ஐந்து முறை உருக்க கசடற்று மணிபோலாகும். அதனை குண்டலமாகச்செய்து காதில் அணிந்து கொள்ளவும்.

(734-735) சீவனத்துக்கு பணம் இல்லாவிட்டால் வெள்ளி எட்டில் களங்கு ஒரு பங்கு கொடுக்க கிடைக்கும். ஏழு மாற்றுள்ள தங்கத்தை விற்று செலவு செய்யவும். சீவனம் செய்து வாசி யோகத்தை பார்க்கவும். உழைத்தால்தான் செம்பு கிடைக்கும். வீணாக இருந்தால் எதுவும் கிடைக்காது. சாத்திரங்களில் செம்புமுறையை மற்ற சித்தர்கள் தலைகீழாகப் பாடியதை நான் வெளிப்படையாக கூறிவான். மலைத்துப் பார்த்தால் ஒன்றும் நடவாது. உழுதால்தான் பயிராகும். உழாவிட்டால் ஒன்றும் கிடைக்காது.

(736-737) அயத்திலும் கெந்தகத்திலும் உழைத்துப்பார்த்தால் வாதம் கிட்டும். வில்லை வளைத்தால்தான் அம்பு செல்லுமன்றி வில்லை வளைக்காவிட்டால் அம்பு செல்லாது. அயச்செம்பை கண்டால்தான் வாதம் சித்தியாகும். அயச்செம்பை காணும் வரை முயற்சி செய்ய வேண்டும். அதனை செந்தூரம் செய்துண்ண உடல் கல்தூணாக இறுகும். தங்கம் எளிதிலாகும். வேறெதிலும் மனதை செலுத்தாமல் செம்பு செய்வதை முயற்சியாகக் கொள்ளவும்.

(738-739) இன்னொரு செம்பை கூறுகின்றேன். துருசு பத்து பலத்துக்கு செம்பு முக்கால்பங்கும், சூடன் அரைப்பங்கும், வீரம் கால் பங்கும் எடுத்து செவ்வல்லி பூச்சாறுவிட்டு அரைத்து துருசின்மேல் கவசம் கட்டவும். அதற்கு பிறகு சுண்ணாம்பு சீலைசெய்து பத்து எருவில் புடமிடவும். புடமாறியபின்பு எடுத்துப் பார்க்க களங்காகும். அதை தனியே எடுத்து வைத்துக் கொள்ளவும். அயம் ஒரு பலமும் கௌரி ஒரு பலமும் எடுத்து நன்கு அரைத்து வைத்துக் கொள்ளவும்.

(740-741) மருந்தை மூசையில் இட்டு உருக்க மணியாகும். அயமணி பத்துபலத்தையும் களங்கு பத்துபலத்தையும், சேர்த்து அரைத்து மூசையிலிட்டு உருக்க மணியாகும். வெள்ளி எட்டு பங்கு களங்கு நான்கு பங்க சேர்த்து உருக்க மணியாகும். இந்த மணியை எடுத்து கரியில் வைத்து ஊதிவிட ஏழு மாற்றாகிவிடும். அதை விற்று செலவு செய்து ஞானத்தைப் பார்க்கவேண்டும். வாதம் எளிதிலாகும். உழைத்தால் அறிவில் தங்கும்.

(742-743) அயச்சவளை செய்முறையை கேட்பாயாக. அரப்பொடி பத்துபலம் இரசபற்பம் பத்துபலம் கட்டிய கல்லுப்பு ஐந்து பலம் ஆகியவற்றை நீர்விட்டு அரைத்து மூசைக்குள் வைத்து உருக்க அயம் ஈயம் போல ஆடும். இவ்வாறு ஐந்து முறை உருக்க சத்தாக மாறி நிற்கும். எங்கு அலைந்தாலும் இந்த அய ஈயத்துக்கு ஒப்பான சரக்கு கிட்டாது. வேதை மார்க்சத்துக்காக உலகிலுள்ளவர்களுக்கு கூறிய இதை அவர்கள் கடைபிடித்தால் சித்தியாகும்.

(744-745) கெந்தகம் ஏழு பங்கு, சூடன் ஐந்து பங்கு வீரம் நான்கு பங்கு ஆகியவற்றை எடுத்து செவ்வல்லிப்பூச்சாறுவிட்டு அரைக்க மெழுகாகும். அதனை பத்துபங்கு துருசின்மேல் கவசம் செய்து காயவைத்து சுண்ணச்சீலைசெய்து உலர்த்தவும். இதனை பத்து எருவில் புடமிட கரிபோல களங்காகி இருக்கும். இந்த களங்கு மூன்று பலம் அயச்சவளை ஒரு பலம் சேர்த்து அரைத்து ஊதவும். செம்பாகிவிடும். இந்த செம்பை வெள்ளியில் பத்துக்கு ஒன்று தர ஏழு மாற்றுள்ள தங்கமாகும்.

(746) செம்பை எடுக்க எல்லாம் வேதையாகும். எல்லாமும் ஏவல் கேட்கும். வாதம் என்றால் எளிதாக கிடைக்காது. சற்குருவின் நாட்டத்தை பார்க்கவேண்டும். தூள் படிந்தால் அழுக்காகும். வாதம் என்றால் சூட்சுமமாகும்.

(747) உடல் கருவிகளை பேணிக்காத்தால் சூட்சுமம் விளங்கும். சூதாக பேசக்கூடாது. அறிவை கூர்மையாக பயன்படுத்தினால்தான் பலன் கிடைக்கும். வெறுமையாக இருந்தால் வராது. செம்பு மார்க்கத்தை முறையாக செய்துகொண்டால் அந்த போக்கில் வேதை மார்க்கத்தின் பலன் கிடைக்கும்.

(748) அயச்செம்பை பாடுபட்டு முன்னே பார்த்தாக்கால் கயிலையில் வாழும் சிவன்வந்து முன் நிற்பார். வேதையினை ஒரே நோக்கத்துடன் செய்து முடித்தால் பலன் கிடைக்கும். சோம்பிக்கிடந்தால் பலன் கிடைக்காது.

(749 -750 - 751) இன்னொரு செம்புவகையை கூறுகிறேன். இந்த முறை எளிது. ஆனாலும் செம்பென்றால் எளிதல்ல. வாழ்க்கைக்கு இதுதான் ஆதியாகும். உலகத்தில் உள்ள வாதிமார்கள் இதை செய்தால் பொருளை ஈட்டலாம். அயம் இரண்டுபலம், கௌரி இரண்டுபலம், சூடன் ஒரு பலம், வீரம் கால்பலம் எடுத்து கல்வத்திலிட்டு செவ்வல்லிப்பூச்சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து பத்துபலமுள்ள துருசு கட்டிமேலே கவசம் கட்டி உலர்த்தி சுண்ணாம்பு சீலைசெய்து மண்கவசம் செய்பவும். பிறகு பெரும்புடமாய் போட களங்காகி இருக்கும். அதற்கு செங்காரம் சமஎடை சேர்த்து உருக்க மணியாகும்.

(752 -754) அந்த மணியை எடுத்து அடித்து பார்க்க வெள்ளையாகும். துருசில் இருந்து செம்பை எடுத்து மணியில் இரண்டுக்கு ஒன்று கொடுத்து ஊதி வெள்ளியில் கொடுக்க ஆறு மாத்துள்ள தங்கம் கிடைக்கும். அதனை விற்று செலவு செய்து ஞானத்துடன் யோகத்தை பார்க்கவும். செம்பை வைத்து சமாதியில் இருந்து வாசியை உள்ளே சேர்த்து உடலைக் காக்கவும். எட்டு

சித்திகளும் தானாக வந்து சேரும். சித்தி பெற்றிருக்க வேண்டுமானால் செம்பைப் பார்க்கவேண்டும். சிந்தூரம் செய்துண்ணவும். முத்தி பெற வேண்டுமானால் ஞானத்தை பார்க்க வேண்டும். உடல் உறுதியாகும். வேதத்திலுள்ள வார்த்தையை இக்காண்டத்தில் கூறியுள்ளேன். அதனால் வாதம் எளிதாகும்.

(755) எளிதாக எண்ணாமல் மனதை ஒருமித்து பாகத்தினை பார்ப்பாயாக. தெளிவில்லாத புத்தியை நீக்கி மரத்தின் உச்சியில் ஏறி வாதத்தினை பார்ப்பாயாக. இவ்வுலகினை அரசாளலாம். கள்ள மனத்தை விட்டு விட்டு வாத மார்க்கத்தை கண்டு தேறவும்.

(756) பெண்ணாசை விட்டுவிட்டு பொன்னை கண்டு பார்க்கவும். செம்பை முதலில் செய்து செலவுக்கு வைத்துக் கொண்டு கருத்துடன் இருக்கவும். கருத்தில்லாதவர்களுக்கு வாதமில்லை. சுழிமுனையில் இருந்து வாசியோட்டத்தை பார்க்கவேண்டும்.

(757) இன்னொரு செம்பு மார்க்கத்தை உலகத்தோர் வலிவாக இருக்க கூறுகின்றேன். வாதத்தினால் எல்லாம் எளிதிலாகும். வாதத்தை கண்டுவிட்டால் வெளியே சொல்லிக் கொண்டுத் திரியாதே. அவ்வாறு திரிந்தால் தலைகள் போகும்.

(758 -760) அரிதாரம் இரண்டுபலம், வெடியுப்பு அரைபலம், வீரம் கால்பலம் எடுத்து கல்வத்திலிட்டு செவ்வல்லிப் பூச்சாறுவிட்டு இரண்டு சாமம் அரைத்து பத்துபலம் துருசுக்கு கவசம் செய்யவும். அதன்மேலே மண் கவசம் இட்டு கசபுடம் இட்டு எடுத்துப் பார்க்க களங்காகி இருக்கும். இதனை வெண்காரமிட்டு உருக்க செம்பாகும். இந்த அரிதாரச் செம்பினை எடுத்து நொறுக்கு வெள்ளி இரண்டு சேர்க்க ஏழு மாற்றுள்ள பொன் கிடைக்கும். அப்பொன்னை விற்று வாசியோகத்தைப் பார்க்கவும். வாதத்தில் யோகசித்தி கிடைக்கும். உமையாள் வந்து தோன்றினால் வாதம் சித்தியாகும்.

(761) அயச்செம்பைக் கண்டால் வாதம் சித்தியாகி தங்கம் கிடைக்கும். உழைத்தால் செம்பு கிடைக்கும். உழைக்காமல் விட்டால் பாழாய்ப் போகும். முனைப்புடன் செய்தால் வாதத்தின் முடிவைக் காணலாம். யூகிமுனியாகிய நான் கூறியதை அறிந்து கொள்வாயாக.

(762) நான்கூறிய அயச்செம்பு புடத்திற்கு இறங்கும். செலவிற்கு வரும். கருணைவைத்துப் பார்த்தால் சித்தியாகும். பலனாகும். லாபம் உண்டாகும். தாறுமாறாகச் செய்தால் தடையுண்டாகி வாதம் சாத்தியமாகாது.

(763) சஞ்சலம் உண்டானால் வேதையில்லை. மிரண்டால் வாதம் சாத்தியமாகாது. மிரளாமல் இருந்தாலே வாதம் சித்திக்கும் வாய்ப்பேச்சால் ஒன்றுமில்லை. வலுவுமில்லை. அயச்செம்பை பார்த்து முன்னேறினால் பொன் கிடைக்கும்.

(764) மனதை ஊன்றி களங்கை முதலில் செய்து பார்க்கவும். ஞானத்தினை அறியவும். சிவமயமாய் இருந்து கருதிப் பார்த்தால் மனது உரத்தினால் சித்தியாகும். பொருளறிந்தால் வாதியாகும்.

(765) இரசவாதி என்று சொல்லி அலைந்து கெட்டவர்களே தங்கத்தை காணாததால் வாதத்தில் ஒன்றுமில்லை என்பார்கள். சூட்சுமத்தை அறியாமலலைந்து கெட்டு வழலையாலரைத்துக் கொண்டு அலைவார்கள். பலனின்றி அலைந்தால் வாதம் கிட்டுமோ? கருத்து வைத்தால்தான் சித்தியாகும்.

(766) வழலை என்று நினைத்துக் கொண்டு ஐங்காயப் பிண்டத்தினை கூறுவார்கள். இதுவே சவுக்காரம் என்று கூறித் திரிவார்கள். நூல்கள் பொய்யென்று கூறி தர்க்கம் பேசி துன்மார்க்க வாதிகள் அலைவார்கள்.

(767) இவ்வுலகில் புத்தியில்லாதவர்கள் உண்மையைக் காண்டாரோ? கண்டாலும் சொல்வார்களோ. சொல்லமாட்டார்கள். சாத்திரம் பொய்யென்று கூறி சூத்திரத்தை பார்க்கச் சொல்வார்கள். நான் நான் என்று கூறி தவிப்பார்கள்.

(768 -770) வீரச்செம்பு முறையைக் கூறுகின்றேன். வீரம் என்றால் எளிதல்ல. தங்கசித்தி உடனே கிடைக்கும். சூட்சுமம் எல்லாம் விளங்கும். பாகத்தை விட்டு விட்டு சொன்னால் என்னவாகும். வீரம் பத்துபலம், சூடன் ஐந்து பலம், கெந்தகம் நான்குபலம் ஆகியவற்றை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நான்கு சாமம் அரைத்து பத்துபலம் துருசின்மேல் கவசம் கட்டவும். அதன்மேல் சுண்ணாம்பு சீலைசெய்து உலர்ந்த பின்பு மண்கவசம் செய்யவும். அதனை பத்தெருவில் புடமிட்டு எடுத்து வெங்காரம் கூட்டி உருக்கச் செம்பாகும். வெள்ளி எட்டுபங்குக்கு செம்பு இரண்டு சேர்த்து ஊத பொன் கிடைக்கும்.

(771) பொன் செய்ய வேண்டுமானால் துருசினைக் கொண்டு செய்ய வேண்டும். பொன் எளிதில் கிடைக்கும். பாகத்தை விட்டு ஒன்றும் செய்ய வேண்டாம். தெரியவில்லை என்றால் கேட்கவேண்டும். வேதத்தில் கூறியது பொய்யாகாது.

(772-773) நீலன், கண்டன், கூத்தன் என்றெல்லாம் அழைக்கப்படும் துருசினால் தங்கம் சாத்தியமாகும். அதனால் செய்யப்படும் செம்பு செந்தூரத்தின் பயன் எண்ணிலடங்காது. துருசு சுண்ணத்தினால் எல்லாம் கிட்டும். துருசில் செய்தால் சிறுபிள்ளைகூட வாதத்தினை எளிதில் செய்து முடிக்கும். வடிவினை அறிந்தால் வாதி ஆவான். குணங்கெட்ட வாதி என்றால் ஒன்றையும் நினைக்கமாட்டான். சாத்திரத்தின் சூட்சுமம் தெரியாமல் சண்டித்தனம் செய்வான்.

(774) சண்டித்தனம் செய்யும் இரசவாதிகள் நான் கெட்டுப் போனேன் என்று கூறி சாத்திரம் பொய். கைபாகம்தான் மெய் என்று கூறித் திரிவார்கள். சித்தியில்லை என்று பிதற்றுவார்கள். உழைத்தால் எல்லாம் கிடைக்கும்.

(775) சாத்திரத்தை படித்தால் பரிபாஷைகள், கைபாகம், களங்கு வேதைமார்க்கம் ஆகியன எளிதாகத் தெரியும். சரக்கு வகைகளை தெரியாவிட்டால் ஒன்றும் கிட்டாது. சாத்திரத்தை கூர்ந்து நோக்கினால் வாதம் எல்லாம் எளிதிலாகும்.

(776) சத்தி என்பது கெந்தகமும், விந்து என்பது இரசமுமாகும். இவற்றினால் வாதம் ஞானம் முத்தி ஆகியன உண்டு இதனை வெள்ளியில் பத்தில் ஒன்று இட பொன்னாகும். சீவனத்துக்கு இடம் ஆச்சு. இந்நூலில் எல்லாவற்றையும் கூறிவிட்டேன்.

(777) காந்த அயச்செம்பு தன்னை கூறுகிறேன். இதில் உழைத்தால் சீவனத்துக்கு வழிகிடைக்கும். பொல்லாமை இல்லாமல் செம்பினைப் பார்த்தால் பொன்னாகும்.

(778-781) பத்துபலம் அயத்தினையும் பத்துபலம் காந்தத்தினையும் சேர்த்து கல்வத்திலிட்டு செவ்வல்லிப்பூச்சாற்றாலாட்டி கசபுடம் போட்டு எடுக்க குருவாகும். இதனை தனியே வைத்துக் கொள்ளவும். கெந்தகம் பதினைந்து பலம், சூடன் பத்துபலம், வீரம் ஐந்து பலம் ஆகியவற்றை செவ்வல்லிப்பூச்சாறு விட்டு இரண்டு சாமம் அரைத்து இருபது பலம் செம்பின் மேலே பூசி சுண்ணாம்புச் சீலை செய்து புடத்தைப் போடவும். செம்பு நொறுங்கி அதராகிப்போகும். இத்துடன் முன்பு கூறிய அயகாந்தத்தை சேர்த்து அரைத்து புடமிடவும். பிறகு வெங்காரம் சேர்த்து மூசையில் இட்டு உருக்க செம்பாகும். செம்பு பூப்போல நீறிப்போகும். நாளத்தில் வைத்து ஊத கசடு அகலும். இதனை வெள்ளி எட்டுக்கு ஒன்று போட்டு, தங்கம் ஒன்றும் சேர்த்து ஊத எட்டு மாத்துள்ள தங்கம் கிடைக்கும்.

(782-783) அயச்செம்பு செந்தூரத்தை கூறுகிறேன் கேட்பாயாக. அயச்செம்பு நான்குபலம், தங்கம் மற்றும் நாகம் வகைக்கு ஒருபலம் ஆகியவற்றை உருக்கி ஒன்று சேர்த்து தகடாகத் தட்டிக் கொள்ளவும். கெந்தகம், இரசம், அயம், வீரம், சூடன், ஆகியவற்றை சமனாக சேர்த்து செவ்வல்லிப் பூச்சாறுவிட்டு அரைத்து தகட்டின் மேல் பூசி காயவைத்து பத்து எருவில் புடமிட செந்தூரமாகும். இதனால் தங்கம் கிடைக்கும். இதனை ஒரு மண்டலம் தேனில் உண்டால் உடல் இறுகிப்போகும்.

(784-786) இந்த செம்புச் செந்தூரத்தினால் மலைபோல பொன் கிடைக்கும். இதனை உண்ண செவ்வல்லிப்பூ போல மேனி இருக்கும். வாசி மேலேயேறும். யோகத்தைப் பார்க்கவும். காயசித்தியாகும். இந்த செம்பு செந்தூரத்தினால் அரசனைப் போல் வாழலாம். இந்த செம்பினை நவலோகத்தில் தர தங்கமாகும். அதனை செந்தூரம் செய்து உண்ண உடல் பொன் போலாகும். துரியத்தில் நின்று மூச்சை அடக்கி, உடலை காத்து ஞானத்தை பார்க்கவும். அஷ்டாங்க யோகமும் வந்து சேரும். பார்வதியை தன் இடப்பக்கத்தில் வைத்திருக்கும். சிவன் சொன்ன வழியை உங்களுக்கு சொல்லிவிட்டேன். இதனை முறைப்படி செய்து பார்க்க சித்தியாகும்.

(787-791) நாகச்செம்பு ஒன்று கூறுகின்றேன். பத்துபலம் நாகத்தினை இலுப்பை நெய்யில் இருபத்தி ஒரு முறை உருக்கிச் சாய்க்கவும். பிறகு அதனுடன் நாலில் ஒன்று இரசத்தினை சேர்த்து புட்டாக செய்து அதற்கு சம அளவு அயம்

சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து வில்லைதட்டி, காயவைக்கவும். அதன் மேல் கிளிஞ்சல் சுண்ணத்தினை கவசம்கட்டி புடமிட்டு எடுக்க மஞ்சளாக இருக்கும். கெந்தகம் ஏழரை பலம் சூடன் ஐந்துபலம், வீரம் இரண்டரை பலம் எடுத்து அரைத்து பத்துபலம் செம்புத் தகட்டின் மேல் பூசி வெயில் காயவைத்து பத்தெருவில் புடமிடவும். நொறுங்கும் வரை புடமிட்டு எடுத்துக் கொள்ளவும். முன்சொன்ன நாகமும் அயமும் கலந்தது ஒரு பங்கும், செம்புக்கரி ஒரு பங்கும் சேர்த்து செவ்வல்லிப் பூச்சாற்றால் அரைத்து வில்லைதட்டி காயவைத்து கசபுடம் இடவும். அதனை எடுத்து சமஅளவு வெங்காரம் சேர்த்து உருக்க நாகம் செம்பாகும். அச்செம்பின் ஒளி மிகுதியாகவிருக்கும். வெள்ளியில் தர எட்டு மாற்று ஆகும்.

(792) நாகமானது வழுவழுப்பு, களிம்பு, பொருமல் இல்லாத செம்பாகிவிடும். இதனை நொறுக்கு வெள்ளி எட்டில் ஒன்று கொடுக்க தங்கமாகும். தங்கத்தாயை தரிசித்தால் முக்தியாகும்.

(793) நாகத்தில் அயம் சேர வேதை மார்க்கம் நிறைய உண்டாகும். நாகமும் அயமும் சேர்த்ததில் ஒரு பங்கு செம்புக்கரி சேர்த்தால் தங்கம் கிடைக்கும். சாயுச்ய பதவி கிடைக்கும். புத்தி கொண்டு செய்தால் எல்லாம் சித்தியாகும். இல்லாவிட்டால் எல்லாம் விழலாகும்.

(794) விழலாகப் போகாமல் இருக்க நாகத்தினைப் பார்க்க வேண்டும். வேதை சித்தியாக வேண்டுமானால் இரும்பைப் பார்க்க வேண்டும். உறுதியாக இல்லாவிட்டால் எல்லாம் போச்சு. பெண்ணைத்தேடி குணம் கெட்டு அலையாமல் நூலைப்பார்த்துத் தேற இரசவாதம் சாத்தியமாகும். பழகாமல் வாதத்தை செய்தால் தோஷமாகும்.

(795) வீணாகச்சுட்டால் வாதம் வருமா? உண்மையாக ஆராய்ந்துப் பார்த்தால் வாதம் எல்லாம் சித்தியாகும். சரக்கு வகைகளை அறிய வேண்டும். பயிரை நட்டுவிட்டு களையை எடுக்காமல் விட்டால் எல்லாம் பாழாய்ப்போகும். முட்டாளாகப் போகாமல் இந்நூலில் உள்ள ஆயிரம் பாடலையும் பார்த்துத் தேறவும்.

(796-799) வாதத்தை விட்டால் எல்லாம் பாழாகும். இறைத்தால்தான் நீர் ஊறும். பலவாறு சொன்னாலும் தெரியாது. செய்து பார்த்தால்தான் எல்லாம புரியும். மனதை ஒரு நிலைப்படுத்தி சிற்றின்பத்தைத் தள்ளி ஞானமார்க்கத்தை அடையவேண்டும். பொன்னை விற்று நிஷ்டையில் இருந்து அருள்புரிந்து சமாதியடைய வேண்டும். சாஸ்திரத்தைப் பார்த்து சுழிமுனையில் நாடவேண்டும். ஆறு ஆதாராத்தையும் கடந்து கபாலத்தமர் வழியே சென்று பூரணத்தை அடைய வேண்டும். சிவத்தில் நாடி இருக்க வேண்டும். ரிஷிகளுடன் இருந்து கொண்டு சிலம்பொலி நாதத்தை கேட்க வேண்டும். ஆசனத்தில் வீற்றிருந்து ஆயிரம் இதழ் கமலத்தில் மனதை சொக்க வைக்கவும். உள்மனதில் பதத்தினைப் போற்ற முத்தியுண்டாகும். துந்துபியின் முழக்கத்துடன் சென்று நந்தியைக் கண்டு கேட்கவும். ஞானத்தின் வழியை உனக்குக் கூறுவார்.

(800) நாகச்செம்பை செந்தூரம் செய்து உண்ண உடல் கற்றூணாகும் மேனி கஸ்தூரி மணம் வீசும். சாகாவரம் கிடைக்கும். சரீரம் இரும்பு போலாகும். இருதயம் சுழியில் ஏறும்.

(801) இந்த செம்பை எடுத்து வெள்ளியில் கொடுத்துப் பார்க்கவும் முடிவைப்பார்த்து மமதைக் கொள்ளாமல் மனதை நீ கட்டிக் கொள்ள வேண்டும். யூகிமுனியைப்போல் தெளிந்து நில் வாதவித்தையை முழுமையாக செய்து பார்க்கவும்.

(802) துருசை நீற்ற புகைநீரைச் சொல்லுகிறேன். இந்த நீற்றினை அலைந்தாலும் சொல்லமாட்டார்கள். ஆனால் இந்த நூலில் கூறியுள்ளேன். அதை வகையாகப் பார்த்துக் கொள். ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் வங்கத்தினால் எல்லாம் ஆச்சு.

(803-804) பத்துபலம் வங்கம், ஐந்துபலம் வீரம், எடுத்துக் கொண்டு இரண்டினையும் ஒன்றாய்ச்சேர்த்து அரைத்துப் புடமிடவும். புடமிட்டு எடுத்து மருந்துடன் படிகாரம் பத்துபலம், எடுத்து சேர்த்து அரைத்து வாலையில் வைத்து எரிக்க புகைநீராகும். அதனை அரக்குக் குப்பியில் அடைத்து வைக்கவும். துருசினை அதில் தோய்த்து எட்டுநாள் வெயிலில் வைக்கவும்.

(805) முட்டை ஓட்டை வெண்கருவால் ஆட்டி வெயிலில் காயப்போட்டு மூசையில் இட்டு ஊத வேண்டும். அது கடுங்காரச் சுண்ணமாகும். பத்துபலம் சீனம் எடுத்து பொரிக்க வேண்டும்.

(806-808) பொரித்த சீனத்தினை வெண்கருவால் ஆட்டி வில்லை செய்து புடம் போடவும். அதனை எடுத்து கல்வத்திலிட்டு முன் செய்த அண்டச் சுண்ணத்துடன் சேர்த்து அரைத்து குகையில் இட்டு கரியில் முன்போலவே நன்கு ஊத கடுமையான சுண்ணமாகும். இந்த கடுமையான சுண்ணம் மற்ற எல்லா சரக்குகளையும் சுண்ணமாக்கும். இச்சுண்ணத்துக்கு நான்கில் ஒன்று வீரம் சேர்த்து துருசுக்கு கவசம் செய்து புடமிட துருசு நீறும். துருசு நீறிப்போனால் சகலமும் நீறிப்போகும்.

(809) துருசு நீறு ஒருகழஞ்சு எடுத்து விராலி இலையில் இட்டு இடித்து வைக்க தண்ணீராகும். இந்த நீரை லிங்கத்துக்கு சுருக்கு போட கரியில் நின்று பொன்போலாகும். செம்பிலிட தங்கமாகும். வெறும் பேச்சினால் ஒன்றுமில்லை. வீரத்தினையும் இப்படியே செய்ய கரியில் நின்று உருகும் பாரே.

(810) இந்த பாகத்தினால் உப்புக்கள் இருபத்தைந்தும், அறுபத்திநான்கு பாடாணமும், உபரசங்கள் நூற்றி இருபதும் தண்ணீராகும். இதன் பெருமையை என்னால் கூற முடியாது. வாதசித்தி, யோகசித்தி ஆகியன கைபாகமாகும். இதனால் சகல சித்துக்களும் சாத்தியமாகும்.

(811) வீரத்தை சுருக்கு போடவும். திராவகத்தினால் தோய்த்துப் போடு பாஷாணத்தினை சுருக்கு போடவும். சரக்குகள் கரியிலாடும். தங்கம் எளிதில் கிடைக்கும். ஒன்றைவிட்டு ஒன்று பார்த்தால் வாதம் எல்லாம் தலைகீழாகும்.

(812) உப்பையும் வங்கத்தையும் முன்னே செய்து பார்த்தால் துருசு மனம் போல நீறும். இவை மாளாவிட்டால் உலகத்தில் சித்தியில்லை. தேளாகக் கொட்டினால் விஷமுமாகும், இல்லாவிட்டால் பிள்ளைபூச்சி, வெளியில் சொல்லிவிட்டால் பலனில்லை. உப்பை முந்தி பார்க்கவும்.

(813) உப்பை முதலில் பார்த்தால் சகலமும் சித்தியாகும். பாராவிட்டால் பதராகும். ஆலம் விதை சிறிதானாலும் அது மரமானால் நிழல் அதிகம் தரும். மூதேவி இரசவாதி முகத்தில் குடி இருந்தால் அவன் எந்த சரக்கு தொட்டாலும் கரியாகப் போகும்.

(814-815) சுண்ணத்தை கரியில் வைத்து ஊத கடுஞ் சுண்ணமாகும் பிரட்டாக சொல்லவில்லை நான் கூறியதை முறையாக வைத்து செய்த கொள்ளவும். பருவத்துடன் செய்துப் பார்த்து பிறகு ஞானம் பார்க்கவும். ஞானம் பார்ப்பதற்கு வாதம் செய்யக் கூறினேன். உண்டு உடுத்த செம்பினைச் செய்யக் கூறினேன். மௌனம் புரிவதற்கு வழி கூறினேன். முத்தி சித்தி ஆவதற்கு முறையைச் சொன்னேன். ககனம் செய்வதற்கு குளிகை சொல்வேன். காயசித்தி, யோகசித்தி அடைய சித்தருடைய மார்க்கத்தைச் சொன்னேன்.

(816) துறவினைப் பூண்டு...... பூட்டினை சாவிகொண்டு திறப்பது போல யோகத்தை பார்க்கவேண்டும். பழக்கமில்லாவிட்டால் உலகத்திலுள்ளவர்கள் உன்னைக் கண்டு சிரிப்பார்கள். வண்டு பறந்து பறந்துதான் தேனை சேகரிக்கிறது. பறக்கவில்லை என்றால் தேன் கிடைக்காது. அதுபோல உழைத்தால்தான் பலனுண்டு.

(817-819) வெடியுப்பை சுண்ணம் செய்யவும். தேரர் சொன்னதை உங்களுக்குக் கூறினேன். வெடியுப்பை சுண்ணம் செய்து அதில் வங்கத்தினை வைத்து நீற்றிட வங்கம் சுண்ணமாகும். வங்கம் நீற வேண்டுமானால் பின்வரும் முறையை செய்ய வேண்டும். பத்துபலம் வெடியுப்பு, ஐந்துபலம் படிகாரம், இரண்டையும் ஒன்றாகப் பொடித்து அடுப்பிலேற்றி உருக்கவும். உருகியதை எடுத்து சூடம் பத்துபலம் சேர்த்து பழச்சாறுவிட்டு அரைத்து எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

(820-822) படிகாரம் இரண்டு சேர் எடுத்து பொரித்து வைத்துக் கொள்ளவும். முட்டை வெள்ளைக் கருவும், எருக்கம்பாலும் வகைக்கு ஒரு சேர் எடுத்து கலந்து கரைத்து வைத்துக் கொண்டு, தெளிவை எடுத்துக் கொண்டு பொரித்த சீனத்தில் விட்டு அரைத்து வில்லை செய்யவும். அதனை வெயிலில் காயவைத்து பெரிய புடம் போட்டு எடுக்க படிகாரம் கடும் சுண்ணமாகி இருக்கும். இதனை சூடன் சேர்த்து உருக்கிய சரக்குடன் கூட்டி வெண்கருவால் ஆட்டி

வில்லை செய்து வெயிலில் காயவைத்து பெரிய புடமாகப் போடவேண்டும். இது கடுமையான சுண்ணமாகும். அம்பின் கூர்மைபோல வெடியுப்பு சுண்ணம் மிகவும் சக்தி வாய்ந்தது. இதனை செய்து முடித்தால் எல்லாம் சித்தியாகும். உழைத்தால் நல்ல பலன் கிடைக்கும்.

(823) வங்கத்தை அயக்கரண்டியில் இட்டு உருக்கி முன்புசெய்த வெடியுப்பு சுண்ணத்தை இடையிடையே போட்டு கரண்டியினால் தேய்க்க சுண்ணமாகும். இதனை வெண் கருவால் ஆட்டி வெயிலில் வைத்து பின்பு ஊத கடுங்காரச் சுண்ணமாகும்.

(824) துருசினை திராவகத்தில் தோய்த்து எட்டுநாள் வெயிலில் வைக்கவும். பிறகு வங்கச்சுண்ணத்துடன் நாலில் ஒன்று வீரம் சேர்த்து எருக்கம்பால் தெளிந்த நீரால் அரைத்து துருசின் மேலே கவசம் செய்யவும்.

(825) இதனை பத்தெருவில் புடமிட துருசு சுண்ணமாகும். இத்துருசினை தாளகத்துக்கு எட்டுபங்கு எடை எடுத்து திராவகம் விட்டு அரைத்து கவசம் செய்து புடமிட தாளகம் நீறும்.

(826) அரிதார பஸ்பத்தை துருசின்மேல் கட்டி பத்து எருவில் புடமிட துருசு சுண்ணமாகும். மூவுலகை எரித்த சிவன்போல் துரிசை நீற்ற தங்கத்தின் மேல் கவசம் செய்து புடமிட தங்கம் நீறும்.

(627-828) சற்குருவை போற்றி இந்த தங்கநீற்றை செம்பினில் கொடுக்க அனைத்தும் பத்து மாற்றாகும். துன்பப்படாமல் தங்கம் சாத்தியமாகும். அத்தங்கத்தில் சோதி உள்ளே இருக்கும். செந்தூரம் செய்து கொண்டு தலையில் பிறையணிந்த சிவன்போல இருக்கலாம். மேனி செவ்வல்லி போல் நிறமாகிவிடும். காயாம்பூ போல வர்ணமுண்டாகும். இந்த போக்கு உண்மையாகும்.

(829) தங்கத்தை சாப்பிட்டால் தாது இறுகிக் காணும். இதனைச் சாப்பிடும்போது புளி, உப்பு, கைப்பு, நல்லெண்ணெய் ஆகாது. ஒரு மண்டலத்தில் உடல் சித்தியாகும்

(830) முதலில் வெடியுப்புச்சுண்ணம், பிறகு சூடச்சுண்ணம், அதன் பிறகு சீனத்தையும், வங்கத்தையும், சுண்ணம் செய்யவும். இவற்றுக்குப் பிறகு துருசையும், தாளகத்தையும் சுண்ணம் செய்யவும். இறுதியில் தங்கத்தை சுண்ணம் செய்யவும்.

(831) தங்க பற்பம் செய்து கொண்டால் உடல் சித்தியாகும். நோய்கள் எல்லாம் விலகி ஓடும். உடல் இரும்பு தூண் போலாகும். இரசவாதம் கைக்குள்ளாகும். நொடியில் செய்து முடிக்கலாம். கள்ளநரி என்றும் சந்தைக்குப் போகாது. அதுபோல கனிவு இல்லாத வாதியால் வேதை முடிவை காணமுடியாது.

(832) சூடு கண்ட பூனை அடுப்பினை அண்டாது. அதுபோலவே சரக்கில்லாமல் வேதையை காண முடியாது. சரக்கைப் பார்த்தால் தங்கம்

நிலைக்கும். கொஞ்சநாள் சுட்டும் பார்த்து குணம்கெட்டு வாதம் பொய் என்று சொன்னால் நான் என்ன செய்வேன். எல்லாவற்றையும் சோதித்து செய்தால் இரசவாதம் சாத்தியமாகும்.

(833) ஆறு நிறைய தண்ணீர் இருந்தால் இறங்க முடியாது. பாதிவற்றிய பின்பு இறங்கிப் போகலாம். நரிப்பள்ளம் என்று சொன்னால் நரி அதனைப் பார்த்ததுண்டா? அதுபோலவே வாதம் பொய்யென்று கூறினால் நரகம் கிட்டும்.

(834) நான்கு பேர் சாலையில் நடந்தால் ஒருவன் பொன்போல இருப்பதை கண்டடெடுத்து பார்த்தால் அது காக்காவின் பொன்னாச்சு. காகம் பொன் செய்ததோ? இதுபோல கோடி பேர்கள் செய்தால் ஒருவர் தான் பலனைக் காண்பார்.

(835) கண்டு கொண்டவன் ஒருவருக்கும் சொல்ல மாட்டான். தலைபோனாலும் வீணாக வெளியே வார்த்தைகளை கூற மாட்டான். புரட்டு என்று கூறிவிடுவான். ஒன்றுமில்லா வாதியே நான் தங்கத்தைக் கண்டேன் என்பான்.

(836) நூலில்லாமல் செய்கின்ற வாதிய்ய விட்டுத்தள்ளு. கள்குடி, கஞ்சா, சாராயகுடி, அதிக உறக்கம் உள்ளவன். கோபவாதி, வியாதி உள்ளவன் ஆகியோரை விட்டுத்தள்ளு. சாத்திரம் படித்தவனைமட்டும் உன்னிடம் வைத்துக் கொள்ளு.

(837) இந்நூலை இறுதிவரை முழுமையாக படித்து முடிக்கவும். சரக்கைத் தொட்டுப் பார்த்து அயத்தை செய்து பார்க்கவும். பிறகு செந்தூரம் செய்து உண்ணவும். உடலை முதலில் காக்கவும்.

(838) இந்த நூலில் சொன்ன வித்தைகள் பொய்யாகிப் போகுமோ? களங்கு, செந்தூரம், கல்லுப்புக்கட்டு, வெடியுப்புச் சுண்ணம், வங்க சுண்ணம், பதங்க இரசம், திராவகம் ஆகியன பொய்யாகுமோ?

(839) கல்லுப்பைத் தெரிப்படங்கக்கட்டிக் கொண்டு அதனுடன் இரசபதங்கத்தை இட்டு எரிக்க கட்டாகும். வேதையாகும். இப்படி கட்டாவிட்டால் வாதசித்தி இல்லை, பொய் வாதி வெறும் உப்பை உருக்கிப் பார்த்து ஒன்றுமில்லாமல் அலைவான்.

(840) வெறும் உப்பை உருக்க அதனை கரிகுடிக்கக் கண்டு இந்தவுப்பு அல்ல என்பார்கள். சமுத்திரத்தின் நடுவில் பதினெட்டு முழத்தின் ஆழத்தில் இருக்கும் என்பார்கள். மதியில்லாதவர்கள் உப்பை தேடிப் பார்த்து உண்மை கிடைக்காமல் அலைவார்கள்.

(841) சிறுபெண்கள், சோறு சமைக்க தண்ணீரை நிறைய விட்டு அரிசியை கொஞ்சமிட்டு சோறு குழைந்துவிட்டது என்பார்கள். வீணாகச் சுட்டு அவதிப்பட்டு உலகில் சாத்திரம் பொய்யென்றால் உண்மையாகுமோ?

(842-843) இன்னொரு வகை செம்பை கூறுகின்றேன். துரிசு பத்துபலம், கந்தகம் இரண்டரைபலம், சூடன் ஒன்றேகால் பலம், வீரம் அரைபலம் இவை நான்கையும் நீர் விட்டரைத்து, வில்லைதட்டி வெயிலில் காயவைத்து சுண்ணச்சீலை செய்து அதன்மேல் மண் கவசம் இட்டு கசபுடம் இட்டு எடுக்க கரிபோல் இருக்கும்.

(844) வெடியுப்பு பத்துபலம், படிகாரம் இருபதுபலம் ஆகிய இரண்டையும் எடுத்து பொடித்து கலந்து குடத்திலிட்டு வாலை எந்திரத்தினால் மூடி திராவகம் இறக்கவும். அதனை அரக்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

(845) பீங்கான் பாத்திரத்தில் அரப்பொடியை இட்டு திராவகத்தினை ஊற்ற புகைந்து நீராகும். தெளிவினை இறுத்து வைத்துக் கொள்ள வேண்டும். புடம்போட்ட துரிசினை கல்வத்திலிட்டு தெளிந்த திராவகத்தால் அரைத்து வில்லை தட்டவும்.

(846) அதனை புடமிட்டெடுத்து வெங்காரம் சமஎடை சேர்த்து திராவகம் விட்டு அரைத்து வில்லை செய்து புடமிடவும். பிறகு அதனை எடுத்து குகையில் வைத்து எடுக்க செம்பானது கரிபோல் கிடைக்கும். நாளம் வைத்தூத செம்பாகும்.

(847) புகையில்லாச் செம்பு உருக்கினால் பேதிக்காது. இச்செம்பில் களிம்பு இருக்காது. தங்கம் போல இருக்கும். இதனை அடித்தால் பொருபொருவென்று உடையும். இத்தகைய குணங்களை உடைய செம்பே வகாரத்துக்கு உதவும்.

(848) இச்செம்பில் தங்கத்தினை சேர்க்கும் முறையைக் கேட்பாயாக. தங்கத்தை தகடுதட்டி கல்காவியை அரைத்து பூசி கரியோட்டில் ஏழுதரம் காய்ச்சி காய்ச்சி துவைக்கவும். செம்புடன் தங்கத்ந்தை சமஅளவு சேர்த்து உருக்கித் தகடாகத் தட்டவும்.

(849-850) அந்த தகட்டுக்கு கவசத்தைக் கேட்பாயாக. செம்பு எடைக்கு அயமும், அயத்தின் எடைக்கு நாகமும் அரைவாசி சூடமும் கால்பங்கு வீரமும் சேர்த்து நீர்விட்டரைத்து தகட்டுக்கு பூசி புடமிடவும். புடமிட்டு எடுக்க சிவப்பாகும். அது நொறுங்காமல் இருந்தால் மீண்டும் ஒரு முறை அயத்தினைச் சேர்த்து புடமிடவும். அதனை எடுத்து காரமிட்டு உருக்க செம்பாகும்.

(851) இந்த செம்பு வலிவுடனும் ஒளியுடனும் இருக்கும். களிம்பு இல்லாத இந்த செம்பினால் தங்கம் எளிதிலாகும். ஊறலில்லாத இந்த செம்பினால் வேதை மார்க்கம் பலனாகும்.

(852) இந்த செம்பை வெள்ளியில் பத்துக்கு ஒன்று தர உறுதியாக தங்கமாகும். இது புடத்திற்கு இறங்கும். மற்ற சித்தர்கள் மறைத்து வைத்ததை தெளிவாக நான் கூறிவிட்டேன்.

(853) செம்பில் தங்கம் சேராவிட்டால் செம்பு கட்டாது. ஊறலுண்டாகும். செம்பு செத்தால் உயிர் கொடுக்க அயம் இல்லாமல் போனால் முடியாது. எனவே இரும்பினால் எல்லாம் சித்தியாச்சு.

(854) இரும்பென்றால் அதனை எளிதாக எண்ணலாமா? இரும்பினால்தால் எல்லாமுமாகும். துரும்புபோல இருக்கும். அயத்தின் வேதை மார்க்கம் இவ்வுலகில் அரசாள வைக்கும். விரும்பி செய்தால் அயம் வேதைக்குதவும். விரும்பி செய்யாவிட்டால் அயத்தில் உழைக்கக் கூடாது. அரும்பு பூத்தவுடன் வாசனை உண்டாவதுபோல் இரும்பில் உழைத்தவுடன் பலன் கிடைக்கும்.

(855) இரும்பு உழைத்தால் பலன் கொடுக்கும். அதனை விட்டால் செம்பு வீணாகிப்போகும். இது தெரியாமல் இரசவாதம் பொய் என்பார்கள். இரும்பினால் செம்பு கட்டும். செம்பெடுத்து தங்கத்தில் கொடுத்து வேதையைப் பார்க்க எளிதாகும். வழலை என்றால் இரும்பேயாகும்.

(856) வழலை என்றால் இரும்பாச்சு. புறவழலை செம்புமாச்சு. அயமும் செம்பும் சேர்ந்தால் தங்கமாகும். நான் நீ என்றால் செம்பில்லாமல் செம்புபோகும். வகர்ரம் சித்தியாகாது. இந்தப் போக்கை சொல்லிவிட்டேன் கருத்துடன் பார்க்கவேண்டும்.

(857) லோகத்தில் சகலசித்தும் ஆடி சித்தனாகலாம். எதிலும் பழகினால் வாதியாகலாம். குணங்கெட்ட வாதிகளே முதலில் அயத்தில் வேதையைப் பார்க்கவும்.

(858) இது பார்வதி எனக்குக் கூறிய போதனையாகும். அயத்தினால் எல்லாம் தோணும். இதனை ஏற்றால் ஞானசித்தி, குளிகைசித்தி ஆகியன தோன்றும். ஏற்காவிட்டால் சித்தியில்லை நூலில் அதனைக் கூறிவிட்டேன் வாதியாயிருப்பவன் அயத்தினை முந்திப் பார்ப்பான்.

(859) செம்பைக் கட்டியாடாவிட்டால் என்ன லாபம்? வாதம் பொய் என்று வழக்கமாக கூறும் செரல்லை சொன்னால் உன்னை நிந்திப்பார்கள். தேரர் கூறியபடி முறையாகப் பார்க்கவும்.

(860) தேரர் கூறிய செம்பை இறுதியில் கூறிவிட்டேன். கடினம் என்று விட வேண்டாம். இதை விட்டுவிட்டால் வேதை முடிவாகாது. இதனைப் பார்த்துச் செய்தால் சகலசித்தும் ஆடலாம். இதனை எளிதாகப் பேசவேண்டாம்.

(861-865) இன்னொரு செம்பு முறையைக் கூறுகின்றேன். சித்தர்கள் மறைத்து வைத்த பித்தளை செம்பை நான் கூறுகின்றேன். இதனால் தங்கம் எளிதாகும். சித்தனாக வாழலாம். காக்கா பொன் பத்துபலம் கெந்தகம் ஏழரைபலம், சூடன் ஐந்துபலம், வீரம் இரண்டரை பலம், ஆகியவற்றை திராவகம்விட்டு அரைத்து பித்தளைக்கு கவசம் செய்து அதன் மேல் சுண்ணக் கவசம் செய்து டெ ரும்புடமிடவேண்டும். அதனை எடுத்து வெங்காரம் சேர்த்து குகையில் இட்டு ஊத செம்பாகும். நாளம் வைத்து ஊத தூயசெம்பு கிடைக்கும். இந்த செம்பினால் வேதை நிறைய உண்டு. இந்த செம்புடன் தங்கம் சம பங்கு சேர்த்து உருக்கவும். பித்தளைச் செம்பின் பெருமையை என்னவென்று கூறுவேன். இதனைச் செய்து சுவாசத்தை சுழிமுனையில் நிறுத்து மனதை ஒரு முகப்படுத்த வேண்டும்.

(866) வாதத்தைச் செய்து முன்னேறு. வில்லை வளைத்தால்தான் அம்பு செல்லும் வளையாத வில்லுக்கு அம்பு எவ்வாறு செல்லும் எனவே செய்தால்தான் வாதம், சித்தியாகும். குபேரனைப்போல் வாழலாம்.

(867) இந்த நூலில் களங்கு சிந்தூரம் சாரக்கட்டு அயச்செம்பு கல்லுப்பு கட்டு குளிகை ஆகியவற்றை முத்துக்களை நூலில் கோர்த்தாற்போல் கோர்வையாக கூறிவிட்டேன். அதனை எல்லாம் செய்து பார்.

(868-869) வாதவித்தைகளை சிவன் தேவிக்கும், பார்வதி நந்திக்கும், நந்தி விசுவினிக்கும், விசுவினி அசுவனிக்கும், அசுவனி தன்வந்தரிக்கும், தன்வந்திரி அகத்தியருக்கும், அகத்தியர் புலத்தியருக்கும், புலத்தியர் தேரருக்கும், தேரர் யூகிமுனியாகிய எனக்கும் கூற உலகத்தோர்கள் பிழைக்க வாதிகளுக்கு கருணையுடன் அந்த வாத முறைகளைக் கூறினேன். இதனைச் செய்து சிவயோக இன்பத்தைப் பெறுவாயாக.

((870) சித்தர்கள் மறைத்த புகைநீர் பாகமொன்றைக் கேளு. அகத்தியர் என்னைக் கூட்டிச்சென்று செய்பாகத்தினைக் கூறினார். இரசத்தை கரியில் ஆறவைக்கும் வித்தையை செய்து காட்டினாற். பாகத்தை கூறுகிறேன் கேட்பாயாக.

(871) வெடியுப்பு பத்துபலம், கல்லுப்பு பத்துபலம், படிகாரம் இருபத்தைந்துபலம், இவை அனைத்தையும் பொடித்துக் கலந்து பானையில் இட்டு வாலை எந்திரத்தினால் மூடி திராவகம் வடித்துக் கொள்ளவும்.

(872-874) இரசம் ஒரு சேர் எடுத்து கல்லுப்பில் வைத்து எரிக்க ரசம் ஏறிப் பதங்கமாகும். அதனை வழித்து திராவகம்விட்டு அரைத்து வில்லைதட்டி காயப்போட்டு மீண்டும் உப்பில் வைத்து எரிக்க மேலேறிப் பதங்கமாகும். அதனை வழித்து மீண்டும் திராவகம்விட்டு அரைத்து முன்போலவே உப்பில் வைத்து எரிக்க மேலேறாமல் அடியில் நீறி நிற்கும். இதனைச் செம்பினை உருக்கி நூற்றுக்கு ஒன்று தர பத்து மாற்றுள்ள தங்கமாகும். இதனைச் செந்தூரம் செய்து பணவெடை தேனில் உண்ண உடல் இறுகும். செவ்வல்லிப் பூப்போல உடல் நிறம் கொடுக்கும். தேகம் சித்தியாகும். கண்கள் செவ்வரியோடும்.

(875) வாதமுறைகள் எல்லாம் இரசத்தினால் ஆகும். தேகம் எல்லாம் இரசத்தினால் ஆகும். வேதமும் வேதாந்தமும் எல்லாம் இரசத்தினால் ஆகும். குளிகைகட்டி காத தூரமோடுவது இரசத்தினால் ஆகும். மதிகெட்ட வாதிகளே மாதங்கள் சொன்றால்தான் வருடமாகும். இதனை சிந்தித்து செயல்படுவீர்.

(876) மதிமயங்கிப் போகாமல் இரசத்தினை முதலில் பார்க்கவும். இரசத்தினால் இரசவாதம் ஏவல் கேட்கும். சித்தியாகும். சூதமென்ற சிவன்விந்து யோகத்திற் காகும். நவலோகம் பழுக்கும். உற்றுப்பார்த்தால் வாதம் சித்தியாகும்.

(877) வாதம் செய்கிறேன் என்று இரசத்தினை விட்டுவிட்டு இலை தழைகளைப் பிடுங்கி அலைய வேண்டாம். பணம்தான் போகும். சிறப்பு கிடைக்காது. வேதத்தில் சொன்ன நீதியிது. இந்நூலை இறுதிவரைப் பார்த்தால் வழிகள் தோணும்.

(878) இரசம் என்ற சூதராஜனை கல்லுப்பால் எரித்துவிட கட்டிப்போகும். கல்லுப்பு இல்லாவிட்டால் துருசால் கட்டிக்கொள். இவ்விரண்டு மில்லாவிட்டால் இரசம் கட்டாது.

(879) இரசத்தை திராவகம் செய்தால் துருசு நீறும். செம்பு நீறிப்போகும். காததூரம் நடந்தால் வழியுமாகும். நடக்காது போனால் தூரத்தை எவ்வாறு கடக்க முடியும். இரசத்தினால் வாதம் முடியும்.

(880) இரசமே வகாரத்தின் தாய் ஆகும். நுண்ணிய ஒட்டம் எல்லாம் இரசத்தினால் ஆகும். வாத வேலைகள் செய்வதற்கு கண்டிப்பாக சூதமாகிய இரசம் வேண்டும். சிவன் விந்து என்ற இரசமானது கெந்தகம் பெண்ரூபமாக இருப்பதால் அதில் சேர்ந்திருக்கும். உலகில் பஞ்ச பூதங்களும் இருந்தாற் போலிருந்தால்தான் இரசவாதம் சாத்தியமாகும்.

(881) சிலர் இலைகளைப் பிடுங்கி இடித்துப் பிழிந்து கரண்டியில் இட்டு இரசம் சேர்த்து கொதிக்க வைத்து பலிக்காது போச்சு என்று அலைவார்கள் இரவும் பகலும் யோசனை செய்து செய்து பொல்லாத வாதிகள் பொய் சொல்லித் திரிவார்கள்.

(882) வாதியே நான் கூறுவதை உற்றுக் கேட்கவும். வாதம் செய்வோர் இரசத்தினை கட்ட படும்பாட்டை என்ன வென்று கூறுவது. உபரசமும் காரசாரமும் கட்டும் என்று பெருமையாகக் கூறினேன். ஆனாலும் கல்லுப்பில்தான் இரசம் கட்டும்.

(883) சிறுபிள்ளைகூட இந்த முறையில் வாதத்தினை செய்து முடிக்கும். விழித்து கொட்டாவி விட்டால் எத்தனை முறை பாகத்தை கூறுவது. துருசில் வேதை செய்து பார்க்கவும். துருசில் இல்லாவிட்டால் பிறகு செம்பை செய்து பார்க்கவும். அதுவுமில்லா விட்டால் கல்லுப்பையும் இரசத்தையும் சேர்க்கவும்.

(884) இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்து புடம் வைத்து உருக்கி ஆட்டி குப்பி செய்து கொள்ளவும். இரசம் என்று வந்த இடத்தில் இதில் வைத்து எரிக்க வேதையாகும். செம்பினைக்கட்டிப் பொன்னை செய்யலாம்.

(885) செம்பின் குணத்தைக் கூறினேன். அதனைக் கொடுக்க வகையும் சொன்னேன். கல்லுப்பையும் இரசத்தையும் சொன்னேன். சிந்தூரத்தைச் சொன்னேன். தவறு இல்லாமல் பார்த்து தேறவும். இரும்பைக் கொன்று தங்கத்தை செய்யவும். யூகிமுனியாகிய நான் உண்மையான வேதையை பார்த்திட்டேன்.

(886) கைபாகம் தெரியாததால், களங்கு சிந்தூரம் செய்ய முடியாததால் இரசவாதம் பொய்யென்பார்கள். குடிகெடுத்த வாதிகளே உப்பை முறையாகச் செய்தால் வாதம் வந்து நிலைக்கும்.

(887) செம்பு செய்வதைக் கூறினேன். செம்பினைச் செய்தால் வெள்ளியில் கொடுக்க வழிமுறைகளைக் கூறினேன். அதில் சேர்க்க நொறுக்கு வெள்ளியை கூறினேன். வாதிகளே அதனை உணர்ந்து செய்யவும். அலைந்து திரியாமல் வெள்ளியில் செம்பைக் கொடுத்து வேதையை முடிக்கவும்.

(888) முன்சொன்ன வாத காண்டத்தில் வெள்ளியை மறைத்துக் கூறினேன். இக்காண்டத்தில் அதனை வெளியாகக் கூறினேன். இந்த இரண்டு காண்டங்களுக்குள்ளே வாதமுறைகளை அதிகமாக கூறினேன். இதில் கூறியது எல்லாம் உண்மையாகும்.

(889) வெள்ளி பத்துபலத்தை எடுத்து வாதம் நாலுக்கொன்று கொடுத்து ஊதவும். சாம்பலில் நன்கு பதிய ஊதி உருக்கிக் கொள்ளவும். அதனை தகடு தட்டும் முறையை இனிக் கூறுகிறேன்.

(890) வெள்ளிக்கு தகடடிக்கும் முறையை கூறுகின்றேன். மூன்றீர்க்கு கனமாகவும், வேண்டிய மட்டும் நீளமாகவும் அடிந்து உறுதியை சோதித்துக் கொள்ளவும்.

(891) பத்துபலம் வெள்ளியை எடுத்துக் கொண்டால் எட்டுக்கு ஆறாகவும, ஐந்துபலம் எடுத்தால் நான்குக்கு மூன்றாகவும் தகடாகத்தட்டிக் கொள்ளவும். இந்த வெள்ளித் தகட்டின் எடைக்கு முக்கால் பாகம் கெந்தியும் அரைபங்கு சூடனும், கால்பங்கு வீரமும் எடுத்து அரைத்து வெள்ளிமேல் கவசம் கட்டவும்.

(892-893) வெயிலில் காயவைத்து புடத்தினைக் கேட்பாயாக. மூன்று வரட்டியை நன்கு பொடித்து வைத்துக் கொள்ளவும். பத்து வரட்டியில் முக்கால் வரட்டியை நெருக்கமாக வட்டமாக அடுக்கிக் கொண்டு பொடித்த மூன்று வரட்டியினை நடுவில் வைத்து அதன்மேல் வெள்ளியை வைத்து அதன்மேல் கால்வாசி வரட்டியைப் போட்டு தீயை மூட்டவும். அட்டைபோல் முத்துமுத்தாக கருத்திருக்கும்.

(894) இவ்வாறு மூன்றுபுடம் இட வெள்ளியானது நீர்வாங்கி கறுத்திருக்கும். எடுத்துக்கொண்டு வெங்காரம் சேர்த்து உருக்கிப் பார்க்க கெந்தி ஈயம் வெள்ளியில் பிடித்து உருகி நிற்கும். மீண்டும் ஒருமுறை முன்போல வெங்காரம் சேர்த்து உருக்க வெள்ளியாகும்.

(895) வெள்ளியின் நிறத்தைப் பார்க்க கொக்கு நிறத்துடன் இருக்கும். இதற்கு சோதனையைக் கேட்பாயாக. ஒரு சட்டியில் கெந்தகம் மஞ்சள் ஆகியவற்றை இழைத்துக் கொண்டு அத்துடன் புளி சேர்த்து கரைத்து குழம்பாகச் செய்து கொள்ளவும். அதில் வெள்ளியை தகடாகத் தட்டிப் போடவும்.

(896-897) வெள்ளித்தகடு தங்கம்போலாகும். வெள்ளி பழுத்துவிடும் தன்மையைப் பார்த்து செம்பைக் கொடுத்தால் ஏழு மாற்று தங்கம் கிடைக்கும். இன்னுமொரு கருத்தைக் கேளு வெள்ளியைத் தகடாகத்தட்டி

வெங்காரத்தைப் பொரித்து அரைத்து தகட்டின்மேல் பூசி கரியோட்டில் தகட்டை வைத்து ஊதிப் பார்க்க நல்லவெள்ளி பொன் போல மின்னும். இதில் அயச்செம்பைச் சேர்த்து தங்கம் சேர்த்து புடம் போட தங்கம் ஆகும்.

(898) புடமிட அருகுகட்டி இறுகும். வெள்ளி நின்று தங்கமாகும். வெள்ளி ஓடாது. மட்டங்களால் இயல்பு அதிகமாகும். பாகமாக செய்து கொள்ளவும். மட்டத்தினால் இந்த போக்கு உண்டாகும் முறையாகப் பார்த்தால் புடமிறங்கும்.

(899) நொறுக்கு வெள்ளி போடும்போது லேசாக இருந்தால் உருகி கெட்டுப்போகும். வெள்ளி குறைந்து போகும். வரட்டி அதிகமானாலும் உருகிப் போகும். கெந்தகம், வீரம், சூடன் ஆகியவை அரைப்பதில் குறைவிருந்தாலும் முறையாகக் கிடைக்காது.

(900) வெள்ளியில் கெந்தகமும் ஈயமும் அதிகல் ஏறினால் உருகும் பொழுது கரியில் சிக்கி சிதறிப்போகும். வெள்ளி காணாமல் போகும். எனவே கைபாக மாக செய்து கொள்ளவும்.

(901) வெள்ளியினை ஊதும்போது வெள்ளியுடன் ஈயம் சேர்த்து ஈயம் தீயாகப்போனால் அதனை முறிக்க முறையைக் கேட்பாயாக. செந்தியினால் கவசம் கட்டி புடமிட கரியாகப் போகும். முறையுடன் செய்தால் தங்கம் கிடைக்கும்.

(902) வெள்ளியை புடமிட முக்கால்வாசி விரட்டியை முதலில் இட்டு வெள்ளித் தகட்டைவைத்து மேலே கால்வாசி பிரட்டியை மூடி புடமிடவும். வெள்ளித் தகட்டிற்கு பூமி அரைக்கும் சரக்குகளை கேட்பாயாக. கெந்தகம், வெடியுப்பு, வீரம் இவற்றை அரைத்து தகட்டின் மேலே பூசி நொறுக்கு மட்டும் புடத்தை போட வேண்டும். அதனை எடுத்து கரியில் வைத்து உருக்கவும்.

(903) வெங்காரத்தை அடிக்கடி சேர்த்து ஊதிக் கொள்ளவும். வீணாகிவிடாமல் முறையாக செய்யவும். அயச்செம்பை கரியாக்கி தங்கத்தை சுத்திசெய்து அதனுடன் சேர்க்கவும்.

(904) இதை ஏழை இரசவாதிக்கு கூறுகின்றேன். பிண்டம், வழலை என்று சவுக்காரவாதியை அலையச்சொன்னேன். செம்பை முறையாக செய்து கொள்ளவும். வெள்ளியில் நீறை வாங்கவும். இவ்வாறு சரியாக செய்தால் தங்கமாகும்.

(905) செம்பை செய்து கொண்டு வெள்ளியில் சேர்த்துருக்க தங்கமாகும். அதனை செலவுக்கு வைத்துக் கொள்ளவும். இதை செந்தூரம் செய்து உண்ணவும். வீணாகத் திரியாமல் வெள்ளியை முறையாகப் பார்க்கவும்.

(906) வெள்ளியை ஏழைவாதிகக்கு கூறினேன். பிண்டத்தை வைத்து செய்யும் இரசவாதிக்கு இதை சொன்னால் கேட்கமாட்டான். அவனுக்கு

சொன்னாலும் நரகம்கிட்டும். என்வே சித்தர்கள் பிண்டம் என்று அதனை மறைத்துவிட்டார்கள்.

(907) மறைபொருளை மறைக்காமல் போனால் தங்கம் முறையாக வராது. சித்தர்கள் உண்மையைக் கூறினால் எல்லோரும் தங்கம் செய்வார்கள். கட்டாகச் சொல்லியதால் உலகில் இரசவாதிகள் அலைந்து கெட்டனர். பிண்டம் பிண்டம் என்று தேடத் தொடங்கினார்கள்.

(908) எல்லோரும் அறிந்து கொள்ள வெளிப்படையாகக் கூறினேன். ஏழைவாதியே அலையாமல் வெள்ளியைப் பார்க்கவும். வாத முடிவைக் காணலாம். வாதத்தின் முடிவைக் கண்டால் ஒருவருக்கும் சொல்ல வேண்டாம். பொல்லாமை இல்லாமல் நடந்து கொள்ளவும். கோபத்தை போக்கவும். வெள்ளியை நொறுக்கிக்கொண்டு தங்கத்தை செய்து கொள்ளவும்.

(909) அயச்செம்பை செய்து முடித்தால் யோகசித்தி சாத்தியமாகும். நொறுக்கு வெள்ளியை கண்டாயானால் தங்கமாகும். கல்லுப்பைக் கண்டால் முத்தி சித்தியாகும். கோடியில் ஒருவன் காண்பான். அவர்களுக்கு குறைவேதும் உண்டோ?

(910) கல்லுப்பும் இரசமும் சேர்ந்தால் வேதை கோடியாகும். ஏழை வாதிதான் இந்த முறையை செய்வான். பலனை அடைவான். இலை தழையால் வாதமாகுமோ? பிண்டத்தினால் வாதமாகுமோ? இரண்டினாலும் கிடைக்கா.

(911) பிண்டத்தினை ஐங்காயம் என்று திரித்துக் கூறினார்கள். தேசம் தோறும் அலைந்து நன்கு பார்க்கவும். கும்பமுனி வேதை மார்க்கத்தைக் கூறுவார். என்னூலைப் பார்த்துச் செய்தால் வேதை பாகம் முடிவடையும்.

(912) வெள்ளியை நொறுக்கக் கூறினேன் அதை செய்யும் முறையும் கூறினேன். வெள்ளியின் குணத்தைக் கூறினேன். கருத்தை வைத்து வேதை முறையை கண்டு தேறவும். இப்பூவுலகில் இருந்து கொண்டு ஞானம் பார்க்கவும். வேதை மார்க்கத்தை புகழ்ந்து கூறிவிட்டேன்.

(913) வாதத்தினை விட்டுவிட்டவருக்கு ஞானமில்லை கருத்தை அறியாதவருக்கு புத்தியில்லை. மனம் விட்டுவிட்டால் எல்லாம் போச்சு ஆணவத்தை விட்டுவிடு. நொறுக்கு வெள்ளியை கைபாகமாக செய்து முடித்தால் தங்கம் கிடைக்கும்.

(914) இரசவாதம் பொய்யல்ல. உண்மையை கண்டுபிடிக்காததாலும் கருப்பொருள் தெரியாததாலும் இரசவாதம் பொய்யாகிப் போனது. உள்ளபடி இந்நூலில் அனைத்தையும் கூறிவிட்டேன். உண்மையாக உழைத்தால் கோடியில் ஒருவன் கண்பான்.

(915) அயச்செம்பை முறையாகச் செய்யாமல் கெட்டு அலைந்து திரிந்தால் என்ன பயன். நீட்டிய காலை சரியாக மடக்க வேண்டும். சாத்திரம் இல்லாமல் பாடல் பாடி செய்தால் வாதம் கிட்டாது. எனவே என்னூலை முழுமையாகப் பார்த்து செம்பை முதலில் செய்யவும்.

(916) யூகிமுனியாகிய நான் கூறும் செம்பை கேட்பாயாக. அச்செம்பை செய்து பதமாக நிற்க வேண்டும். ஞானம் வந்து சேரும் குணமும் நலமும் உண்டாகும். வகாரம் வந்து கைகட்டி சொன்னபடி கேட்கும்.

(917-918) கெந்தகம் ஏழரைபலம், வெடியுப்பு ஐந்துபலம், வீரம் இரண்டரைபலம் எடுத்து நீர்விட்டு நான்கு சாமம் அரைத்து பத்துபலம் செம்பு தகட்டின் மேல் கவசம் போடவும். அதனை புடமிட்டு அதரை எடுத்து நொறுங்காத செம்பினை முன்போல மீண்டும் புடமிடவும். அதராகும். இவ்வாறு முழுமையும் அதராகும்வரை புடம் போடவும். மொத்த அதரையும் சேர்த்துக் கொண்டு அதற்கு சமஎடை சூடனும், வெங்காரமும் சேர்க்கவும்.

(919) கொள்ளவே திராவகத்தை விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து புடமிட்டு எடுக்கவும். மீண்டும் திராவகம் விட்டு அரைத்து பத்தெருவில் புடமிடவும். எடுத்துப் பார்க்க பவழம்போல இருக்கும்.

(920) சிவக்குமட்டும் புடத்தைப் போடவும். அதனை எடுத்து சண்டரச பற்பம் சமஎடை சேர்த்து திராவகம் விட்டு அரைத்து புடமிடவும்.

(921) அதனை எடுத்து அயப்பொடியைச் சேர்த்து திராவகத்தைவிட்டு ஆட்டி மூன்றுபுடம் போடவும். சிவந்து இருக்கும். அதற்கு சமஎடை வெங்காரம் சேர்த்து உருக்க செம்பாகும். இதனை நொறுக்கு வெள்ளியில் தரவேண்டும்.

(922) வெள்ளியில் தர பத்துமாற்றாகும். காவிக்கும் உப்பிற்கும் அருகு கட்டி புடமிறங்கும். அதனை எடுத்து செலவுக்கு வைத்துக் கொண்டு உலகில் வாழ்ந்து ஞானத்தைப் பார்க்கவும். பிறகு வைத்தியம் செய்யவும்.

(923) வாய்ச் சொல்லினால் வேதை தெரியுமோ? நொறுக்கு வெள்ளியில் அயச்செம்பை சேர்த்து உலகில் செழுமையாக வாழலாம். நூலைப்பார்த்து செய்யவும். வாதசித்தி கைகூடும். வாசியை சுழியிலேற்றவும். ஞானம் பார்த்து தேறவும்.

(924) மனதில் உள்ள அகங்காரத்தை நீ நீக்கி வேறெங்கும் அலையாமல் சுவாசத்தை இறுக்கி மேலேற்றினால் இச்சைகள் எல்லாம் ஓடிப்போகும். ஞானம் மிகவும் உண்டாகும். மனதைவிட்டு தவிக்க வேண்டாம். உலகில் ரிஷியின் வடிவாக இருக்க வேண்டும்.

(925) வாதம் எளிதல்ல முறையாக இருந்து பார்த்தால் வாதம் நிலைக்கும். ரிஷியாக இருக்கவும். பகையுடன் வாழ வேண்டாம். உப்பைக் கையில் வைத்துக்

கொண்டு பருந்து போல திரியாமல் ஓரிடத்திலிருந்து உழைக்க இரசவாதம் சாத்தியமாகும்.

(926) நொறுக்கு வெள்ளியை முறையுடன் செய்து முடித்தால் பொன் கிடைக்கும். அவசரப்படாமல் அயச்செம்பை பழுக்கும்வரை செய்து கொள்ளவும். பழுத்துவிட்டால் பலன் கிடைக்கும். மடையில் மீன்கள் அதிகமிருப்பதுபோல் நொறுக்கு வெள்ளியினால் பலன் அதிகமாகும்.

(927) நொறுக்கு வெள்ளியை செய்யாவிட்டால் அயச்செம்பு சேர்க்கும் பொழுது பழுக்காது. உரைகல்லில் மாற்று தெரியாது. புடத்திற்கு இறங்காது. வாதம் சித்தியாகாது. வாதத்தைப் பார்த்தவன் ரிஷியாக வாழலாம்.

(928) சிலர் பாகம் தெரியாமல் வெள்ளியில் கொடுத்து ஊத புடத்தில் தீய்ந்துபோகும். தாம் கெட்டதை உணர்ந்து கொண்டு இரசவாதம் பொய் என்பார்கள். முறையாகச் செய்யாமல் உலுத்தர்கள் வெகுபாடுபட்டு அலைவார்கள்.

(929) சாத்திர நூலை முறையாகப் படித்துப் பார்த்து சரக்கைப் பார்க்காததால் உலகில் கெட்டதைப்பற்றிக் கூறி புலம்பி அலைவார்கள். புலம்பினாலும் ஒன்றும் வராது. அதனை நாடி செய்தால் வாதம் வந்தமையும். அதைவிட்டு வீணாகத் திரிந்தால் லாபமென்ன. பிரட்டும் உருட்டும் செய்யாமல் வாதத்தைப் பார்க்கவும்.

(930) வாதம் சித்தியானால் ஞானம் தானே வரும் முறையாக வகுத்து செய்தால் எல்லாம் அமையும். ஆட்டைப்போல் அங்கும் இங்கும் திரியவேண்டாம். கொடுப்பவர்களைப் பார்த்து ஏங்க வேண்டாம். சரக்கை சுட்டுத் தேறவும். சிவன் அருளாலே வேறுபாடு இல்லாமல் கூறிவிட்டேன்.

(931) என்னூலை முதலில் இருந்து இறுதி வரை பார்த்தால் கருத்துக்கள் வெளியாகும். வாதம், ஞானம், ஆகியன சித்தியாகும். யோகம் முன்னேவந்து நிற்கும். நூலைப்பார்த்து வேதையை முடிக்கவும்.

(932) இன்னொரு நொறுக்கு வெள்ளியைக் கூறுகிறேன். வெள்ளி ஒரு பலமும், உளியிலிருந்து எடுக்கப்பட்ட எஃகுப்பொடி நான்கு பலமும் சேர்த்து உருக்கிக் கல்வத்திலிட்டு உடைத்துக் கொண்டு வைத்துக் கொள்ளவும். அத்துட ன் கெந்தி முக்காற்பலமும், சூடன் அரைப்பலமும் போடவும்.

(933) மேலும் அதனுடன் வீரம் கால்பலம் போடவும். அனைத்தையும் எடை சரியாக எடுத்து நீர்விட்டு அரைத்து வில்லை தட்டி காயவைத்து பெரும்புடமிடவும். அதை எடுத்து வெங்காரம் இட்டு உருக்கி மாசற்ற வெள்ளியாக இருக்கும்.

(934) இதை எடுத்து உரைத்துப் பார்க்க பச்சையாயிருக்கும். இந்த எடைக்கு ஏழுமாற்றுள்ள பொன்னைச் சேர்த்து ஊத மாற்று ஆறு காணும். இரசவாதியே அனைத்தையும் நிதானமாக செய்யவும். வாதம் கைகூடும்.

(935) வெள்ளியில் கணக்காக கெந்தகத்தையும் வீரத்தையும் சேர்த்தால் வெள்ளி நொறுங்கிப் போகும். உருக்கினால் சிதறிப்போகும். கரியில் இறங்கிவிடும். அதிலிருந்து ஈயத்தை எடுக்க வேண்டுமானால் சூடம் கந்தகம் ஆகியவற்றினால் ஆகும். தங்கம் கிடைக்கும். இரச வாதிகளே நான் பிரித்துக் கூறிய இதனை உணர்ந்து கொள்வீர்களாக.

(936-937) கெந்தகம், சூடம்,'வீரம் ஆகியவற்றை அரைத்து செம்புக்கு கவசம் செய்து சிறுபுடமாய் போட்டு பிறகு அதனுடன் அயம் காரீயம் சேர்த்தால் எல்லாம் கரியாய் போகும். செம்பு, கெந்தகம், சூடம், வீரம் சேர்த்து புடமிடும் பொழுது சிறுபுடமாக இல்லாமல் பெரும்புடமாகப் போடவேண்டும். பெரும்புடமாகப் போட்டால்தான் கெந்தக வாடை போகும். அயமும் வெங்காரமும் சேர்த்துருக்க செம்பாகும். பாகம் தவறினால் கரியாகப் போகும்.

(938) கரியாகி கிட்டமாகப் போகாமல் இருக்க நூலை மீண்டும் மீண்டும் படித்து செய்யவும். பட்டபாட்டை எல்லாம் நினைத்து முனைப்பாகச் செய்தால் வாதம் கிட்டும். தட்டானைப் போல் கூர்ந்து பார்த்து செய்யவும். தவித்துப் போகாமல் செம்பைப் பார்த்தால் தங்கம் எளிதில் சாத்தியமாகும். வாய்ப்பேச்சால் ஒன்றும் ஆகாது.

(939) துருசு சுண்ணத்தை இதில் கூறுகிறேன். கண்டவர்களுக்கும் கூறாதே வேதையை செய்யமாட்டார்கள். துருசு சுண்ணம் அண்டத்தை துளைத்து ஆடும். குளிகைக்காகும். வேதை மார்க்கம் சாத்தியமாகும். பேய்க்கூத்தாய் கண்டவற்றைச் சுடவேண்டாம்.

(940) இந்த துருசு அண்டரண்டத்தையும் துளைத்து ஆடும். இரசம் கட்டிவிடும். ககனம் ஓடும். வெற்றி கிடைக்கும். இந்த சுண்ணப்போக்கு மிகவும் காரமுடையது.

(941-942) வெடியுப்பு பத்துபலம் படிகாரம் இருபத்தைந்துபலம் எடுத்து இரண்டையும் உரலிலிட்டு இடித்து துவைக்கவும். அதை குடத்தில் அரைப்குதியளவு போட்டு வாலையினால் மூடி எரிக்க முதலில் வரும் நீரை தள்ளிவிட வேண்டும்.

(943-944) மஞ்சளாக வரும் நீரை பிடித்து பத்திரப்படுத்தவும். ஒரு சட்டியில் வெடியுப்பை இட்டு அதில் வீரம் பத்துபலத்தை போட்டு மேலே சட்டிமூடி ஏழு சீலைமண் செய்யவும். அதை அடுப்பிலேற்றி எரிக்க மேலேறி பதங்கமாகும்.

(945-946) பதங்கத்தை வழித்து பீங்கானில் இட்டு திராவகத்தை நிறைய விட வேண்டும். இதனை வெயிலில் மூன்று நாள் வைத்து புளித்துப்போகச் செய்யவும். அதனை குடத்திலிட்டு வாலையினால் மூடி சீலை செய்யவும். அதனை அடுப்பிலேற்றி எரிக்கவும்.

(947-950) எரிக்கும் பாகத்தை கூறுகிறேன். வாலையின் மூக்கை சாய்த்து குப்பியை சரியாய் பொருத்தவும். குப்பிக்கு வெப்பம் தாக்காமல் கவனமாக எரிக்கவும். திராவகத்தை வடிக்கும் பொழுது, அருகில் இல்லாமல் விலகி இருக்க வேண்டும். திராவகம் பட்டால் உடல் பொத்துப் போகும் கவனமாக இருந்து திராவகத்தை வடித்து எடுக்கவும். சூட்சுமமாய் கூறியது, எல்லாம் மிகவும் எளிதிலாகும்.

(951-953) இந்த புகைநீரை ஒரு சேர் எடுத்து பீங்கான் பாத்திரத்தில் ஊற்றி வைக்கவும். அதில் சூடன் ஒரு பலத்தை இட்டு குழப்பி வைத்துக் கொள்ளவும். துருசை கரியில் வைத்து ஊத வெள்ளையாகும். இதை புகை நீரில் தினமும் தோய்த்துத் தோயத்து எட்டுநாள் வெயிலில் வைக்கவும். துருசு பட்டுப்போகும். இனி அதற்கு கவசம்கட்ட வழியைக் கூறுகின்றேன்.

(954-956) படிகாரத்தை நன்கு ஊத சுண்ணமாகும். அதனை திராவகம் விட்டரைத்து மீண்டும் ஊத கடுஞ்சுண்ணமாகும். இதற்கு நாலில் ஒன்று வீரத்தை சேர்த்து அரைத்து துருசின் மேல் கவசம்கட்டி உலர்த்தவும். பிறகு மண் கவசம் செய்து பத்தெருவில் புடமிடவும்.

(957-958) புடமிட்டு எடுத்துப் பார்க்க கடும் சுண்ணமாகும். இது மிகவும் வெண்மையாக இருக்கும். இதனை விராலி இலையில் இட்டு இடித்துப் பிழிய சாறுவரும். அதனை அயக்கரண்டியில் ஊற்றி இரசத்தையும் விட வேண்டும்.

(959-961) இதனை நன்கு காய்ச்சி எடுக்க இரசம் கட்டிப் போகும். கரியில் வைத்து உருக்க மணியாகும். இந்த மணியை எடுத்து மாலை கோர்த்து செபம் செய்து வர சிவன் உன்னுடன் வாசம் செய்வார். இந்த இரசத்தினை உருக்கவும். இரசம் உருகையில் சமஎடை தங்கம் சேர்த்து உருக்கி செம்பு நூற்றுக்கு ஒன்று தர அனைத்தும் தங்கமாகும். வகாரம் சாத்தியமாகும்.

(962-963) கோடியில் ஒருவனுக்கே வகாரம் சாத்தியமாகும். வாய்ப்பேச்சால் என்ன பலன் கிடைக்கும். உருக்கையில் வர்ணத்தைப் பார்த்து எடுக்க பலனுண்டாகும். யூகிமுனியை நினைத்து வகாரத்தைச் செய்தால் தானே பலன் கிடைக்கும். பாதையை கண்டு பிடித்துவிட்டால் எளிதில் வாதமாகும்.

(964) இந்த நூலில் துருசுச் சுண்ணத்தை கைபாகமாக விவரத்துடன் சொன்னேன். இக்காண்டத்தில் இரசமணியை கட்டக் கூறினேன். அதனை குளிகை செய்து யோக மார்க்கத்தைப் பார்க்கவும். இவ்வுலகில் உள்ள இரசவாதிகளுக்காக இந்த முறையை கூறினேன்.

(965) இந்நூலில் கூறியுள்ள வகாரம் குளிகை, வேதம், சோதிடம், வைத்தியம, குளிகை, செம்பு, உப்புக்கட்டு, திராவகம் அனைத்தும் பொய்யில்லை. உலகத்திலுள்ளவர்கள் இவற்றை முறையாகச் செய்யாமல் விட்டுவிட்டு இரசவாதம் பொய்யென்பார்கள். கேடுகெட்டவர்கள் இதை விட்டு விட்டு மாடுமேய்ப்பார்கள்.

(966) நீ மாடுமேய்க்காமல் நான் சொல்வதைக் கேள். துருசை முறையாக முடித்துக் கொண்டால் அனைத்தும் சாத்தியமாகும். வீட்டைவிட்டு காட்டுக்குப் போகவேண்டாம். வேதாந்தம் சித்தாந்தம் அனைத்தும் கிட்டும். சகலமும் சித்தியாகும்.

(967) இன்னொரு செம்பைக் கூறுகின்றேன் இரும்பைவிட இது மிகவும் காரமாகும். இதில் வகாரம் மிகவும் அதிகமாகும். அந்த அளவு மூர்க்கமுடையது. புத்தியுடன் இருந்து செய்பவர்க்கு வகாரமாகும். கெட்ட வாதிகளுக்கு ஒன்றுமில்லை. இதனை அறிந்து கொர்ண்டால் செல்வங்கள் பலவரும்.

(968) நல்ல இரும்புத்தூள் பத்துபலத்தை எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்றுநாள் ஊறவைத்து கழுவி எடுத்துக் கொள்ளவேண்டும். அதன் எடைக்கு முக்கால்பங்கு கெந்தகம் சூடன் அரைபங்கு வீரம் கால்பங்கு எடுத்து அனைத்தையும் பழச்சாற்றால் அரைக்கவும்.

(969) அரைத்து வில்லைதட்டி புடம்போட்டு எடுத்துக் கொள்ளவும். கெந்தகம் ஏழரைபலம், சூடன் ஐந்துபலம், வீரம் இரண்டரைபலம் எடுத்து பழச்சாறுவிட்டு அரைத்து பத்துபலம் செம்புத் தகட்டின் மேல் பூசி காய வைக்கவும்.

(970) பூசிய செம்புத் தகடுகளை பெரிய புடத்தில் போட்டு எடுக்க அதராக நொறுங்கிப் போகும். நொறுங்கி உதிர்ந்த செம்புத் தூளைத் தனியாக எடுத்து வைத்துக் கொள். மீதி நொறுங்காமலிருக்கும் செப்புத் தகட்டின் மேல் மறுபடியும் பூசிப் புடம் போட்டால் எல்லாம் நொறுங்கி விடும்.

(971) நொறுங்கிய செம்புத் தூளின் இடைக்குச் சமமாக முன் செய்து வைத்துள்ளதைச் சேர்த்து செவ்வல்லிப் பூச்சாறு விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துப் பெரும் புடம் போட்டு எடுக்கச் சிந்தூரமாகும்.

(972) அயச்செம்புடன் இடைக்கு இடை காரம் சேர்த்து உருக்க செம்பு சூரியன் போல் பிரகாசிக்கும். இந்தச் செம்பில் புறை இருக்காது. இதனால் வேதை உண்டாகும். இது சிவனுக்கு ஒப்பானதாகும்.

(973) ஈஸ்வரிக்கும் ஒப்பானதாகும். முப்பாழும் கடந்த சோதியாகும்.

(974) எட்டுப்பங்கு வெள்ளியும், ஒருபங்கு செம்பும் சேர்த்தால் தங்கமாகும். ஆனால் இதை எல்லோராலும் செய்ய முடியாது. முறையாக வாதம் செய்து முடிப்பவர்களாலேயே செய்ய முடியும்.

(975-976) மூட வாதிகளின் பேச்சைக் கேட்டு மூலிகையினால் வேதை உண்டாகும் என்று நம்ப வேண்டாம். அவர்களது ஆரவாரத்தையும் பகட்டான பேச்சையும் நம்ப வேண்டாம். அதனால் கெடுதலே உண்டாகும்.

(977) சித்தர்களின் நூல்கள் காடுபோல் ஏராளமாக உள்ளன. எல்லாம் மறைப்பாகவே பாடியுள்ளார்கள். ரிஷிகளின் நூல்களும் அப்படித்தான். அவை எல்லாவற்றையும் சோதித்து வாத காண்டம் இரண்டாகப் பாடி வைத்தேன். இதில் உள்ள விஷயங்கள் பொய் அல்ல. இந்த நூல் இகபர சுகங்களை அளிக்கும்.

சிவனால் உபதேசிக்கப்பட்டு, உமாதேவி, நந்தி, அசுவினி, விசுவினி, தன்வந்திரி, அகத்தியர், புலத்தியர், தேரர் வழியாக யூகி முனியாகிய எனக்குக் கிடைத்த இந்த உண்மைகளை உலக வாதிகள், பிழைப்பதற்காக இரண்டு காண்டமாகப் பாடி வைத்தேன்.

சிவபெருமானையும் உமாதேவியையும் வணங்கி, நந்தி, அசுவினி, விசுவினி, தன்வந்திரி, அகத்தியர், புலத்தியர், தேரர் முதலான ஆசான்களையும் மற்ற தேவர் ரிஷிகளையும் வணங்கி இந்த நூலை முடிக்கிறேன்.

இந்த நூலைப் பணிவுடன் எடுத்துப் பார்த்துத் தேறிய பின் இது இருந்த இடத்திலேயே வைத்து விட வேண்டும். அப்படிச் செய்யா விட்டால் நரகம் வரும் என்பதை அறிவாயாக.

யூகிமுனி வாத காண்டம் 1000.
தெளிவுரை
முற்றும்.

தாமரை
நூலகம்